வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu
வார மலர் ඊළනාඩු

Email : eelanaduweekly@gmail.com
மலர் : 05
17.12.2023 ஞாயிற்றுக்கிழமை
இதழ் : 349
பக்கங்கள் : 16



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
MoneyGram. money transfer மனிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேன் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.



08 அநுரவின் தேசிய விடுதலை இயக்கமும் தேசிய இனப் பிரச்சினையும்



09 சந்தேகத்தை நீட்சிப்படுத்தும் இரண்டாம் உலகத் தமிழர் பேரவை



10 இஸ்ரேல் - பலஸ்தீன மோதலுக்கு இறுதித் தீர்வுதான் என்ன?




11 ஈழத் தமிழ் அரசியலில் இரகசிய சமூகங்கள் உண்மையும் கற்பனையும்?

# இமயமலை பிரகடனத்தை அடியோடு நிராகரிக்கிறோம்

## தமிழ் சிவில் அமைப்புக்கள் பல்கலை மாணவர்கள் அறிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெம்பர் 17

**தமிழ் மக்களின் நிலைப்பாடுகளை கருத்தில் கொள்ளாத "இமயமலை பிரகடனத்தை" தமிழ் சமூக அமைப்புகள், பல்கலைக்கழக மாணவர்கள், பாதிக்கப்பட்ட தரப்பினர் மற்றும் மதத்தலைவர்கள் இணைந்து கூட்டாக நிராகரிப்பதாக நேற்று அறிவித்துள்ளனர்.**

ஜனாதிபதி ரணில் அதிகாரத்துக்கு வரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், திடீரென காட்சிக்கு வந்து, கொழும்பு அரசியல் தலைவர்களுடன் புகைப்படம் எடுத்த, புளகாங்கதமடையும் புலம்பெயர் தமிழர்கள் சிலர் இம்முறையும் உலகத்தமிழர் பேரவையென்ற பெயரில் இலங்கை வந்து பிக்குகளுடன் வலம் வந்திருந்தனர். இந்த சமயத்தில் இமயமலை பிரகடனம் என்ற ஒன்றையும் கையளித்திருந்தனர். இதற்கு தமிழ் மக்கள் மத்தியில் கடுமையான

15

# வடக்கு-கிழக்கு மாகாணங்களில் 19ஆம் திகதி வரை மழை வீழ்ச்சி

யாழ்ப்பாணம், டிசெ. 17

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணம் உட்பட்ட நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் கிடைத்து வரும் மழையானது தொடர்ந்து எதிர்வரும் 19ஆம் திகதி வரையும் கிடைப்பதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன என யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கைக்கு கீழாக காணப்படுகின்ற காற்றடுக்கு சுழற்சி காரணமாக தற்பொழுது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தின் பல

15

# தொடர் மழையால் வடக்கில் 1,300 குடும்பங்கள் பாதிப்பு!

யாழ்ப்பாணம், டிசெ. 17

கன மழை காரணமாக நாடளாவிய ரீதியில் 2 ஆயிரத்து 271 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 61 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதன் அடிப்படையில் வட மாகாணத்திலேயே அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் ஆயிரத்து 371 குடும்பங்களைச் சேர்ந்த 4ஆயிரத்து 247 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என அந்த அறிக்கையில்

15

# சீன ஆய்வுக் கப்பலை அனுமதிக்கவேண்டாம்

## இலங்கை, மாலைதீவிடம் இந்தியா கோரிக்கை

கொழும்பு, டிசெ. 17

இலங்கை கடற்பிராந்தியத்தில் ஆய்வுகளை மேற்கொள்ள வரும் சீன கப்பலுக்கு அனுமதி வழங்க வேண்டாம் என இந்தியா இலங்கையிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

சீன ஆய்வுக் கப்பலான ஷியாங் யாங் ஹொங் 03 கப்பல் எதிர்வரும் ஜனவரி மாதம் 5 ஆம் திகதி

15

# காய்ச்சல் ஏற்பட்டால் உடனடியாக மருத்துவ ஆலோசனை பெறுங்கள்!

## மருத்துவர் சிவன்சுதன் அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், டிசெ. 17

தற்போதைய காலப்பகுதியில் டெங்கு நோய்க்கு மேலதிகமாக வேறு நோய்களும் பரவுகின்றன என தெரிவித்த பொது வைத்திய நிபுணர் எஸ்.சிவன்சுதன், காய்ச்சல் தொடர்ந்து இருந்தால் மருத்துவ ஆலோசனையை பெற்று என்ன வகையான தொற்று என்பதை கண்டறிந்து சிகிச்சையை பெற வேண்டும் என கூறியுள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்கு

15

# கிளிநொச்சியில் 3,440 பேர் சீரற்ற வானிலையால் பாதிப்பு!

கிளிநொச்சி, டிசெ. 17

கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவிய சீரற்ற வானிலையால் சீரற்ற வானிலையால் 1086 குடும்பங்களை சேர்ந்த 3440 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், 9 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாகவும் மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

நேற்று நண்பகல் 12.30 மணிக்கு வெளியிடப்பட்ட புள்ளி விவரத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், கரைச்சி மற்றும் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுகளிலேயே இவ்வாறு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

15

# பஸிலின் பதவி வெற்றிடம்

கொழும்பு,டிசெ. 17

பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பதவியை வெற்றிடமாக வைக்க கட்சி தீர்மானித்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் உத்தியோகபூர்வ அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர்

11

# ராஜபக்ஷ தரப்பினர் பதுக்கிய பணத்தை மீட்டால் வரி வசூலிக்க தேவையில்லை!

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா கருத்து

கொழும்பு, டிசெ. 17

நடுத்தர வர்க்கத்தினருக்கு வரி அதிகரிப்பை மேற்கொள்வதற்கு முன், ராஜபக்ஷ குடும்பத்திடமிருந்து திருடப்பட்ட சொத்துக்களை மீட்பதற்கு முன்னுரிமை அளிக்குமாறு அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளார் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க.

15

# பாதுகாப்புச் சபையில் கலந்துரையாடி பதில்!

## மனோவுக்கு ஜனாதிபதி உறுதி

கொழும்பு, டிசெ. 17

வீடு வீடாக விவரங்களைத் திரட்டும் பொலிஸாரின் பதிவு நடவடிக்கைகள் தொடர்பில் பாதுகாப்பு சபையில் கலந்துரையாடி பதிலளிக்கின்றேன் என இது விடயமாக தன்னைச் சந்தித்த தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பியிடம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார். இது தொடர்பில் மனோ கணேசன் எம்.பி. தனது அதிகாரபூர்வ ருவிட்டர் தளத்தில், "இது

15

# ஊனமுற்றோர் பயன்படுத்தும் ஊன்றுகோலுக்கும் வற் வரி!

## கடும் நெருக்கடியில் சுகாதாரத்துறை

கொழும்பு, டிசெ. 17

எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் அதிகரிக்கப்படும் வற் வரி அதிகரிப்பினால் சுகாதாரத் துறை கடும் நெருக்கடியை சந்திக்க நேரிடும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதன்படி, ஊனமுற்றோர் பயன்படுத்தும் ஊன்றுகோலுக்குக் கூட இந்த வரிகள் பொருந்தும் என சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதுவரையில் வரி அறவிடப்படாத சுகாதாரத் துறைக்கு சொந்தமான பல பொருட்களுக்கு

15

ஈழநாடு



# இப்படியும் நடக்கிறது

யாழ்ப்பாணத்து பத்திரிகைகளை திறந்தால் இப்போதெல்லாம் அதிகம் இடம்பிடித்திருப்பது போதைவஸ்து தொடர்பான செய்திகள் தான்.

அதுபற்றி முன்னரும் ஒரு தடவை இந்தப் பத்தியில் குறிப்பிட்டிருந்தமை ஞாபகமிருக்கலாம்.

ஊசிமூலம் போதை ஏற்றும் பழக்கம் யாழ்ப்பாணத்தில் இப்போது அதிகரித்து வருவதாக யாழ்ப்பாண அரச அதிபர் கவலை தெரிவிக்கிறார்.

இது போதைப் பிரச்னை மாத்திரமல்ல, எச்ஐவி போன்ற நோய்கள் பரவவும் காரணமாகப்போகின்றது.

மறு புறத்தில் யாழ்ப்பாண பல்கலைக்கழ மருத்துவபீட மாணவர் ஒருவர் போதை மாத்திரைகளுடன் கைதுசெய்யப்படுகிறார் என்கின்றது மற்றுமொரு செய்தி.

எத்தனை விடயங்களுக்காக பெருமையாகப் பேசப்பட்ட யாழ்ப்பாணம் இப்போது எப்படி மாறியிருக்கிறது என்று யாரும் கவலைப்படுவதாகத் தெரியவில்லை.

முன்னாள் போராளி ஒருவர் சொன்னார், தன்னை அணுகிய தனது சகா ஒருவர், அவரும் இவரைப்போல கடற்புலிகள் அமைப்பில் இருந்தவர், "ஒரு தடவை போய்வந்தால் இரண்டு லட்சம் கொடுக்கிறார்களாம். உனக்கு அவர்களைத் தெரியுமா?" என்று கேட்டதாக.

மாதம் முழுவதும் வேலை செய்து நாற்பதாயிரமோ ஐம்பதாயிரமோ சம்பளம் எடுப்பதை விட இது சுலபமான வழி தான்.

ஆனால், அது மற்றையவர் வாழ்வை பலிகொள்கின்றது என்ற சமூக அக்கறை இப்போது யாருக்குத்தான் இருக்கின்றது.

இன்று கேரள கஞ்சாவை முழு நாட்டுக்கும் விநியோகிக்கும் இடமாக மாறியிருக்கிறது வடக்கு மாகாணம்.

ஆனால், நமது இளைஞர்களுக்கு போதைப் பழக்கத்தை படையினரும் பொலிசாருமே பழக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்று நமது மக்கள் பிரதிநிதிகள் 'கதைவிட்டு'க் கொண்டிருக்கிறார்கள்.

அவர்களைப் பொறுத்தவரை இந்தப் பிரச்னையும் நம்மத்தியில் தொடர்ந்து இருந்துகொண்டே இருக்க வேண்டும். அதுபற்றி - அதாவது, போதை பாவனையை படையினரே தமிழ் மக்கள் மத்தியில் ஊக்குவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று அதற்கும் இனவாத முலாம் பூசிக்கொண்டே இருக்க வேண்டும். அப்போதுதான், தாங்கள் இருப்பதை மக்கள் ஞாபகத்தில் வைத்திருப்பார்கள்.

இந்த போதைக்கடத்தலை பொலிசார் தடுக்கவேண்டும் என்று நினைத்தால், மிக சுலபமாகவே தடுத்துவிடலாம். அவர்கள் நிச்சயம் இங்கு வாழ்ந்துகொண்டிருக்கும் சிலராகத்தான் இருக்க முடியும்.

வடக்கிலிருந்துதான் போதைப்பொருள் தெற்கிற்கு வருகின்றது என்று இதுவரை தெற்கில் யாரும் குரல்கொடுக்காதது நமக்கு வசதியாகியிருக்கிறது.

வடக்கில் போதைப்பொருள்களுடன் தினமும் சிலர் கைது செய்யப்படுவதாக செய்திகள் வருகின்றபோதிலும், அது அவற்றை விநியோகிக்கின்ற 'சிறியவர்கள்' தான் கைது செய்யப்படுகின்றனர்.

ஆனால், இந்த வர்த்தகத்தை முழுமையாக குத்தகைக்கு எடுத்திருக்கின்றவர்கள் சாதாரணர்களாக இருக்கமுடியாது என்றும், அவர்கள் மிகப்பெரிய கோடீஸ்வரர்களாகவே இருக்க முடியும் என்றும் முன்னரும் ஒரு தடவை இதுபற்றி எழுதிய போது குறிப்பிட்டிருந்தேன்.

அப்படி பல கோடி ரூபாய்கள் புரளும் இந்த வர்த்தகத்தில் யார் ஈடுபடுகிறார்கள் என்பதை கண்டறிவது பொலிசாருக்கு பெரிய வேலையாக இருக்காது. ஆனால் அதுகுறித்து பொலிசார் அக்கறைப்பட்டதாகவோ அதிகம் ஏன் அதுபற்றி நினைத்துப் பார்த்ததாகவோ கூட தெரியவில்லை.

இதுபோன்ற சட்டவிரோத காரியங்களில் ஈடுபடுபவர்கள் எப்போதும், பொலிசாருடனும் அன்னியோன்மாகவே இருப்பார்கள். அல்லது அவர்களை அணுக முடியாத அளவிற்கு அவர்கள் தங்களைச் சுற்றி கவசம் அணிந்திருப்பார்கள்.

நேற்று முன்தினம் மூத்த ஊடக நண்பர் ஒருவர் தொலைபேசியில் தொடர்புகொண்டு ஒரு தகவலை சொன்னார்.

அதுவும் ஒரு விஐபியின் வாகனம் ஒன்று போதைவஸ்துடன் பொலிசாரால் பிடிக்கப்பட்டிருப்பது பற்றிய செய்தி தான். அவரது கவலை எல்லாம் அந்த பிடிபட்ட விஐபியைப் பற்றியல்ல, அவர் பிடிகொடுக்காமல் அந்த போதைப் பொருளை கொண்டுவந்திருந்தால், அதனை தனது மகனும் வாங்கியிருப்பானோ என்பது தான். இன்று வீடுகளில் வயது வந்த வாலிபர்களை வைத்திருக்கும் ஒவ்வொரு தகப்பனும் தாயும் தினமும் அச்சத்துடன் காலத்தை ஓட்டவேண்டியிருக்கின்றது என்றார் அந்த ஊடக நண்பர்.

பக்கத்து வீட்டுக்காரரின் மகன் போதைக்கு அடிமையாகிவிட்டான் என்றால் அது நமக்கு வெறும் செய்திதான். ஆனால், அதுவே நமது வீட்டுக்குள் நடந்துவிட்டால் எப்படியிருக்கும் என்று யாரும் சிந்திக்காத வரை இது அடுத்தவர் பிரச்னை தான்.

இதனை நமது சமூகம் எப்படி எதிர்கொள்ளப்போகின்றது என்பதுதான் நம் முன்னே இருக்கும் கேள்வி.

**- ஊர்க்குருவி.**

# இந்திய பெருங்கடல் பாதுகாப்பு தலைமையகம் இலங்கையில்!

கொழும்பு, டிசெ. 17

இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் பாதுகாப்புத் தலைமையகத்தை இலங்கையில் நிறுவுவதற்கு பிராந்திய நாடுகள் தீர்மானமொன்றை எட்டியுள்ளன.

மொரிஷியஸில் நடைபெற்ற பாதுகாப்பு ஆலோசகர்களின் மாநாட்டில் இந்த தீர்மானம் எட்டப்பட்டதுடன், இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் கொழும்பு பாதுகாப்பு அறிக்கையும் இங்கு வெளிப்படுத்தப்பட்டது.

இந்தியா மற்றும் தெற்காசிய நாடுகளின் கடல் மற்றும் தென்னாப்பிரிக்க நாடுகளின் பிரதிநிதிகளும் இந்த மாநாட்டில் பங்கேற்றனர்.

இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகர் திரு. சாகல ரத்நாயக்க, மேற்படி பிரேரணையை முன்வைத்துள்ளதுடன், மாநாடு அதற்கு இணங்கியுள்ளது. இதனால், இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் அனைத்து நடவடிக்கைகளும் இலங்கையை மையமாகக் கொண்டு செயற்படுத்தப்படுகின்றன.

இந்தியப் பெருங்கடல் பாதுகாப்புத் தலைமையகம் எதிர்வரும் ஜனவரி மாதம் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நிறுவப்பட்டு, பின்னர் நிரந்தரக் கட்டடத்தில் நிறுவப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# வவுனியா வடக்கில் 22 குடும்பங்கள் இடம்பெயர்வு

வவுனியா, டிசெ. 17

நாட்டில் பெய்யும் பலத்த மழை காரணமாக வவுனியா வடக்கில் 22 குடும்பங்களை சேர்ந்த 84 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் நேற்று தெரிவித்தது.

அத்துடன், இலுப்பைக்குளம் பகுதியில் 05 குடும்பங்களை சேர்ந்த 22 பேரும், சின்னடம்பன் பகுதியில் 09 குடும்பங்களை சேர்ந்த 35 பேரும் இடம்பெயர்ந்து இரு பொது மண்டபங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, நைனாமடு பகுதியில் 02 குடும்பங்களை சேர்ந்த 06 பேரும், நெடுங்கேணியில் 06 குடும்பங்களை சேர்ந்த 21 பேரும் இடம்பெயர்ந்து உறவினர்களின் வீடுகளில் தஞ்சமடைந்துள்ளதாகவும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. (அ)

# வெள்ளம் பாதித்த பகுதிகளில் நிவாரணம் வழங்கும் கடற்படை

கொழும்பு, டிசெ. 17

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு நிவாரணம் வழங்கும் நடவடிக்கையில் கடற்படையின் நிவாரணக் குழுக்கள் ஈடுபட்டுள்ளன .

அனுராதபுரம் மாவட்டத்தின் பதவியா, பராக்கிரமபுர பகுதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கே இவ்வாறு நிவாரணம் வழங்கப்படுகின்றது .

அதன்படி அநுராதபுரம் மாவட்டத்தின் பதவியா, பராக்கிரமபுர பிரதேசத்தில் மா ஓயா பெருக்கெடுத்து வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் அப்பகுதி மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் .

மேலும், மோசமான கால நிலையினால் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு தேவையான மேலதிக ஆயத்தப்படுத்தல்களை கடற்படையினர் மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை, கிளிநொச்சி கண்டாவளை, முல்லைத்தீவு மாங்குளம், மன்னார் மாந்தை உள்ளிட்ட பகுதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் இடம்பெயர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது .(அ)

## ஜனவரி முதல் டிஜிற்றல் அடையாள அட்டை

கொழும்பு, டிசெ. 17

வரும் ஜனவரி முதல் டிஜிற்றல் அடையாள அட்டை வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நான்கு பில்லியன் ரூபாய் இந்திய மானியமாக வழங்கப்படும் இந்த அடையாள அட்டையில், கண்ணின் நிறம், கைரேகைகள் மற்றும் இரத்த வகை போன்ற நபரின் உயிர்த் தகவல்களின் தரவுகளும் அடங்கும்.

முன்னதாக, டிஜிற்றல் அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கும் போது 76 சுயவிபரம் கோரப்பட்ட நிலையில், புதிய டிஜிற்றல் அடையாள அட்டையை பெற சுயவிபரம மட்டுமே தேவை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, புதிய டிஜிற்றல் அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கும் போது, பெயர், முகவரி, பிறந்த திகதி, பாலினம், தொலைபேசி எண், மின்னஞ்சல் முகவரி ஆகியவற்றை கட்டாயம் அளிக்க வேண்டும்.

புதிதாக அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தவர்களுக்கு இந்த புதிய டிஜிற்றல் அடையாள அட்டையை வழங்கி அதன் பிறகு படிப்படியாக ஒட்டுமொத்த சமூகத்திற்கும் டிஜிற்றல் அடையாள அட்டையை வழங்குவதே அரசின் நோக்கமாகும்.

## சந்திரசேகரப்பிள்ளையார் ஆலயத்தில் இன்று கஜமுகா சூரசம்ஹாரம்

யாழ்ப்பாணம், டிசெ.17

நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திர சேகரப் பிள்ளையார் ஆலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை கஜமுகா சூரசம்ஹாரம் இடம்பெறவுள்ளது.

பிற்பகல் 3 மணியளவில் ஆரம்பமாகும் கும்பபூசையைத் தொடர்ந்து மூலஸ்தான பூசை, பிள்ளையார் கதைபடிப்பு என்பன இடம்பெற்று மாலை 5 மணியளவில் கஜமுகா சூரசம்ஹாரம் இடம்பெறவுள்ளது. தொடர்ந்து பிராயச்சித்த அபிஷேகம், பஞ்சமுக அர்ச்சனை, ஹோமம் என்பன நடைபெறும்.

இதேவேளை நாளை திங்கட்கிழமை பிள்ளையார் பெருங்கதை பூர்த்தி உற்சவம் இடம்பெறவுள்ளது.

பஞ்சமுக அர்ச்சனை, மஹாகணபதிஹோமம், 108 கலச அபிசேகம், என்பவற்றைத் தொடர்ந்து வசந்த மண்டபபூசை இடம்பெற்று விநாயகப் பெருமான் வீதியுலா வருவார். அதனைத் தொடர்ந்து பிள்ளையார் கதைப்படிப்பு இடம்பெற்று உற்சவம் பூர்த்தியாகும். (அ)


**யாழ்.கச்சேரிக்கு அருகில் காணி உடன் விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகில் 3½ பரப்புக் காணி, இரண்டு வெட்டுக் கிணறுகளுடன் உடன் விற்பனைக்குண்டு. இந்தக் காணி சுண்டுக்குழி தபால் நிலையத்துக்கு அருகில் - கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ளது. 55 மில்லியனுக்கு (5 கோடியே 50 லட்சம்) மேலான விலை எதிர்பார்க்கப்படுகிறது.

தொடர்புகளுக்கு : +447963743585 (Whatapp), 0212227141(Sri Lanka)

E.mail : Jamesraj_uk@yahoo.co.uk

# மாந்தை மேற்கில் வெள்ளம் 72 குடும்பங்கள் இடம்பெயர்வு

## மன்னாரின் தாழ் நில பிரதேசங்களில் வெள்ள அனர்த்தத்துக்கான அபாயம்




**மன்னார், டிசெ. 17**

**மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக மழை பெய்து வருகின்றமையினால் மன்னாரில் பெரும்பாலான தாழ் நில பிரதேசங்கள் வெள்ள அனர்த்தத்துக்கு உள்ளாகும் வாய்ப்பு காணப்படுவதாக மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் மாவட்ட உதவிப் பணிப்பாளர் கே.திலீபன் தெரிவித்துள்ளார்.**

மேலும், வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் தொடர்ந்து பலத்த மழை பெய்வதால் பாலியாறு மற்றும் பறங்கியாறு போன்ற ஆறுகளின் நீர் மட்டங்கள் உயர்வடையும் நிலை காணப்படுகிறது.

அவ்வாறு நீர் மட்டம் அதிகரிக்கும் சந்தர்ப்பங்களில் மன்னார் - யாழ்ப்பாணம் (ஏ-32) பிரதான வீதி வெள்ள நீரில் மூழ்கக்கூடும்.

எனவே, அந்த வீதியூடாக பயணிக்கும் மக்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறும் இதன்போது பொலிஸார், இராணுவத்தினரின் அறிவுறுத்தல்களை பின்பற்றுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

அதேபோல், மன்னார் தீவு மற்றும் பெரும் நிலப்பரப்புகளிலுள்ள தாழ் நிலங்கள் வெள்ளத்தில் மூழ்குவதற்கான அறிகுறிகள் தென்படுவதால் அப்பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்வதற்கான நடவடிக்கைகளை உரிய தரப்பினர் மேற்கொள்ள வேண்டும்.

மேலும், வெள்ள நீர் வடிந்தோட வடிகான்களை துப்பரவு செய்து, வெள்ள நீர் கடலுக்குள் செல்லும் வகையில் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

இதேவேளை, வெள்ளம் காரணமாக மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள தேவன்பிட்டி பகுதியில் 72 குடும்பங்களைச் சேர்ந்த 161 பேர் இடம்பெயர்ந்து தற்காலிக முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான உணவுகள் இராணுவத்தினரால் வழங்கப்பட்டு வருகின்றன.

அத்துடன், மன்னார் பிரதேச செயலக பிரிவில் 30க்கும் மேற்பட்ட குடும்பங் கள் இடம்பெயர்ந்து உறவினர்கள் வீடுகளில் தங்கியிருப்பதாக மன்னார் அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

எனவே, தொடர்ச்சியாக மழை பெய்து வருகின்றமையினால் பாதுகாப்புடன் செயற்படுமாறு மக்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மேலும், தற்போதைய பலத்த மழை மற்றும் வெள்ள அனர்த்த நிலைமையில் மக்கள் அவசர உதவிக்கு மன்னார் அனர்த்த முகாமைத்துவ பிரிவு தொலைபேசி இலக்கமான 023-2250133 எனும் இலக்கத்துக்கும், மன்னார் பிரதேச செயலக பிரிவு தொலைபேசி இலக்கமான 076-1258120 எனும் இலக்கத்துக்கும் தொடர்புகொள்ளலாம். (அ)

# வடமராட்சியில் இரு வாரத்தில் 78 பேருக்கு டெங்கு காய்ச்சல்

வடமராட்சி, டிசெ. 17

வடமராட்சி பிரதேசத்தில் கடந்த இரு வாரத்தில் டெங்கு காய்ச்சலினால் 78 பேர் பாதிக்கப்பட்டிருப்பதாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை தரப்பு தகவல்கள் மூலம் தெரிய வந்துள்ளது.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் டெங்கு காய்ச்சல் காரணமாக கடந்த இரு வாரத்தில் மட்டும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளவர்களது எண்ணிக்கை 78 ஆக அதிகரித்துள்ளதாகவும் வைத்தியசாலை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த 13 ஆம் திகதி மட்டும் 19 பேர் டெங்கு பாதிப்புடன் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# நட்டஈடு கிடைக்கப் பெறாத விவசாயிகள் முறையிடலாம்

கொழும்பு, டிசெ. 17

வறட்சியினால் பாதிக்கப்பட்டு நட்டஈடு கிடைக்கப் பெறாத விவசாயிகள் இருந்தால், மேன்முறையீடுகளை சமர்ப்பிக்க முடியும் என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளை பரிசீலித்து, குறித்த விவசாயிகளுக்கு நட்டஈட்டை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டார்.

பாதிக்கப்பட்டோருக்கான மானியங்களை உரிய முறையில் வழங்குவதே தமது எதிர்பார்ப்பு என அவர் கூறினார்.

இதற்கான நிதியை நிதிய மைச்சர் என்ற வகையில், ஜனாதிபதி ஒதுக்கீடு செய்துள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர சுட்டிக்காட்டினார்.

# வெலிகம மீன் சந்தையில் துப்பாக்கிப் பிரயோகம்!

## மீன் வியாபாரியும் உதவியாளரும் காயம்

கொழும்பு, டிசெ. 17

காலி மாத்தறை பிரதான வீதியில் வெலிகம எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகில் அமைந்துள்ள மீன் சந்தையொன்றில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர் குறித்த துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டுள்ள நிலையில், மீன் சந்தை வியாபாரி ஒருவரும் அவரது உதவியாளர் ஒருவரும் காயமடைந்துள்ளனர்.

40 வயதுடைய மீன் வியாபாரியொருவரும் 52 வயதுடைய உதவியாளர் ஒருவர் ஒருவருமே துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்து வெலிகம வலான அரச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

துப்பாக்கிச் சூடு நடத்திய இருவரும் தப்பிச் சென்றுள்ள நிலையில், அவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் பொலிஸாரினால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ)

# கடைத் தொகுதியை உடைத்துக்கொண்டு உள்ளே நுழைந்தது புத்தளம் பொலிஸ் ஜீப்



கொழும்பு, டிசெ. 17

புத்தளம் தடயவியல் பொலிஸ் பிரிவுக்குரிய ஜீப் வாகனம், புத்தளம் கூட்டுறவு சங்க கடைத் தொகுதியை உடைத்துக்கொண்டு சென்று விபத்துக்குள்ளான சம்பவம் நேற்று முன் தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

புத்தளம் குட்சைட் வீதியிலிருந்து வருகை தந்த ஜீப் வாகனத்தை புத்தளம் - கொழும்பு பிரதான வீதியிலுள்ள எரிபொருள் நிலையத்துக்கு அருகில் திருப்ப முற்பட்டபோது, வாகனம் அதன் வேகக் கட்டுப்பாட்டை இழந்து கூட்டுறவு சங்க கடைத் தொகுதியை உடைத்துக்கொண்டு சென்றுள்ளது.

எனினும், இந்த விபத்தில் எவருக்கும் உயிராபத்து ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், கூட்டுறவு சங்க கடைத் தொகுதி கட்டடம் உடைந்து சேதமாகியுள்ளதுடன், விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த அரிசி மூடைகள் மற்றும் பல பொருட்கள் பயன்படுத்த முடியாதவாறு நாசமாகியுள்ளன.

இச்சம்பவம் தொடர்பில் புத்தளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்தனர். (அ)

# சந்நிதியான் ஆச்சிரமத்தால் பல்வேறு உதவிகள்

வடமராட்சிக, டிசெ. 17

வடமராட்சி, தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் பல்வேறு உதவிகள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம் பெற்ற வாராந்த நிகழ்விலேயே இவ் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

குறித்த உதவிகள் வாராந்தம் சந்நிதியான் ஆச்சிரமத்தின் கலை பண்பாட்டு பேரவையின் நிகழ்வை தொடர்ந்து வழங்கப்பட்டுள்ளன.

இதில் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் கல்வி கற்கின்ற 10 மாணவர்களை தெரிவு செய்து 35,000 ரூபா பெறுமதியான பாதணிகளும், அல்வாய் இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் பரிசளிப்பு விழாவிற்காக 100, 000 ரூபா பெறுமதியான புத்தகப்பைகள், கருவிப்பெட்டிகள், சாப்பாட்டுப் பெட்டிகள் என்பனவும், தொண்டைமானாறு பிரதேசம் உள்ளடங்கலாக ஜே/386 கெருடாவில் வடக்கு, ஜே/385 - கெருடாவில் தெற்கு, ஜே/383 - தொண்டை மானாறு தெற்கு கிராம நிர் வாக பிரிவுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட சிறுவர், கர்ப்பிணி தாய்மார்கள் உள்ளடங்கலான 29 குடும்பங்களுக்கு 101,500 ரூபா பெறுமதியான சத்துணவுப் பொருள்களும் வழங்கப்பட்டன.



சந்நிதியான் ஆச்சிரமத்தின் முதல்வர் அமுதகலாசுரபி மோகன் சுவாமிகள், தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் ஓய்வு பெற்ற ஆசிரியர் செல்வவடிவேல் மகாபாரத சொற்பொழிவை நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம தொண்டர்கள், கலாசார பேரவை உறுப்பினர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

இதேவேளை திருகோணமலை - கப்பல்துறை, சீனக்குடா பிரதேசத்தில் அமைந்துள்ள சரஸ்வதி வித்தியாலயத்தின் கோரிக்கைக்கு அமைவாக, மைதானம் திருத்தச் செலவு, பாடசாலைக்கான பாதுகாப்பு வேலி அமைத்தல் செலவுகளுக்காக பாடசாலை முதல்வர் திருமதி ரி.றமண னிடம் 100,000 ரூபா நிதியும்,

திருகோணமலை செல்வநாயகபுரம், உதயபுரி பிரதேசத்தில் உள்ள முத்துமாரி அம்மன் அறநெறிப்பாடசாலை கட்டட பணிக்காக 16 ஆம் கட்டமாக 35,000 ரூபா நிதியும், கிளிநொச்சி - பூநகரி முக்கொம்பன் மகா வித்தியாலயத்தின் கோரிக்கைக்கு அமைவாக, ஏற்கனவே பொருத்தப்பட்ட நீர் சுத்திகரிப்பு இயந்திரம் பழுதடைந்தமையினால் நேரடியாக பார்வையிட்டு திருத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. (அ)

# நலிவுற்ற நிலையிலுள்ள சமூகங்களுடன் நேரடியாகப் பணியாற்ற முக்கியத்துவம்!

## ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி செயற்திட்டத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 17

**இலங்கையில் நலிவுற்ற நிலையிலுள்ள சமூகங்கள் மற்றும் குடும்பங்களுக்கு உதவும் வகையில் அவர்களுடன் இணைந்து நேரடியாகப் பணியாற்றுவதற்கு அதிக முக்கியத்துவம் வழங்கியிருப்பதாக ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி செயற்திட்டத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி அசூஸா குபோட்டா தெரிவித்துள்ளார்.**

பொருளாதார நெருக்கடியை அடுத்து நாட்டிலுள்ள வறிய மற்றும் பின்தங்கிய சமூகப்பிரிவினர் வருமான வீழ்ச்சி, உணவுப்பாதுகாப்பின்மை, போசணை குறைபாடு உள்ளிட்ட பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்துவருகின்றனர். இவ்வாறானதொரு பின்னணியில் அவர்களுக்கு உதவுவதை இலக்காகக் கொண்டு முன்னெடுக்கப்பட்டுள்ள செயற்திட்டம் குறித்துத் தெளிவுபடுத்துகையிலேயே அசூஸா குபோட்டா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்-

அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூகங்களுக்கு இடையில் பரந்துபட்ட வகையில் மீளெழும் தன்மையைக் கட்டியெழுப்பல் ஆகியவற்றை இலக்காகக்கொண்டு இலங்கையில் நலிவுற்ற நிலையிலுள்ள சமூகங்கள் மற்றும் குடும்பங்களுடன் நேரடியாக இணைந்து பணியாற்றுவதற்கு நாம் அதிக முக்கியத்துவம் வழங்கியிருக்கின்றோம். அதனைச் செய்வதற்கு நாம் பல்வேறு தரப்பினருடன் ஒன்றிணைந்து செயலாற்றவேண்டும்.

அதன்படி, ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி செயற்திட்டமும் இலங்கையில் இயங்கிவரும் ஹிர்டரமனி ஆடை உற்பத்தி நிறுவனமும் இணைந்து முன்னெடுக்கவிருக்கும் உதவிச் செயற்திட்டத்தின் ஊடாக சுமார் 100 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயனடையும். குறிப்பாக அக்குடும்பங்கள் பழங்கள் மற்றும் மரக்கறிகளைப் பயிரிடுவதற்கு அவசியமான ஒத்துழைப்பு வழங்கப்படுவதுடன், அதனூடாக அக்குடும்பங்களின் வருமானம் மற்றும் போசணைசார் தேவைகள் பூர்த்திசெய்யப்படும் - என்றார்.

# தாயை கொன்ற சந்தேகத்தில் இளைய மகள் நேற்றுக் கைது!

கொழும்பு, டிசெ. 17

இரத்தினபுரி, கஹவத்தை, வெள்ளந்துறையில் வீடொன்றில் படுகொலை செய்யப்பட்ட தாயின் மரணம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் அவர்களது இளைய மகள் நேற்ற அதிகாலை 3.30 மணியளவில் கைது செய்யப்பட்டதாக கஹவத்தை பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 13ஆம் திகதி, ஜய சுந்தர முதியன்செல வினிதா ஜயசுந்தர என்ற 71 வயதுடைய பெண் வீட்டருகே கழுத்தை அறுத்துப் படுகொலை செய்யப்பட்டார்.

சந்தேகத்தில் கொலை செய்யப்பட்ட தாயின் இளைய மகளான 38 வயது திருமணமாகாத பெண்கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அவர் கஹவத்தை பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமை யாற்றுகின்றார்.

உயிரிழந்த பெண்ணின் இறுதிக் கிரியைகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் கஹவத்தை பொலிஸ் நிலையப் பிரதான பொலிஸ் பரிசோதகர் கருணாரத்ன பிள்ளைகளையும் உறவினர்களையும் பொலிஸ் நிலையத்திற்கு வரவழைத்து சாட்சியங்களைப் பதிவு செய்ததாக பொலிஸார் தெரிவித்னர்.

கைது செய்யப்பட்ட மகள் தனது தாயை வீட்டுக்குள் கழுத்தை நெரித்து கொன்று சில மணித்தியாலங்களின் பின்னர் வீட்டின் பின்னால் இழுத்துச் சென்றிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

பின்னர், வீட்டினுள் சிதறிக் கிடந்த இரத்தக் கறைகளை அகற்றுவதற்காக வீட்டை முழுமையாகக் கழுவி சுத்தம் செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர். விசாரணையை தவறாக வழிநடத்தும் வகையில் இது நடந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

கொலையை செய்துவிட்டு, முற்பகல் 11.40 மணிக்கு தனது பணியிடத்திற்குச் சென்று மாலை 3.40 மணியளவில் அலுவலகத்திலிருந்து வீடு திரும்பியிருக்கலாம் என பொலிஸார் கூறினர்.

அன்றைய தினம் மாலை 3.50 மணியளவில் சந்தேக நபர் வீட்டுக்கு வந்தபோது, தனது தாய் பிரச்னையில் இருப்பதாக சத்தம் போட்டபோது அயலவர்கள் பலர் வீட்டிற்கு வந்தனர்.

இதற்கிடையில், இந்த சந்தேக நபர் கஹவத்தை பொலிஸாருக்கு தொலைபேசி அழைப்பொன்றை மேற்கொண்டு தாய் கொல்லப்பட்டதாக தெரிவித்தார்.

இரத்தினபுரி பொலிஸ் நாய்ப் பிரிவினர் நடத்திய விசாரணைகளின் போது சந்தேக நபரின் கைக்கடிகாரம் இறந்த தாயின் சடலத்திலிருந்து சில அடி தூரத்தில் கிடந்ததாகவும் பொலிஸ் நாய் வீட்டை விட்டு வெளியேறவில்லை என் றும் பொலிஸார் தெரிவிக்கின்ற னர்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் வெளிவரும் உண்மைகளின் அடிப்படையில் வெளியாரொருவர் இதனைச் செய்திருக்க முடியாது எனத் தோன்றியதால் சந்தேகநபர் கைது செய்யப்பட்டதாக கஹவத்தை பொலிஸ் நிலையப் பிரதான பொலிஸ் பரிசோதகர் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

# குற்றவாளிகளை அடையாளம் காணும் செயல்முறை அறிமுகம்

கொழும்பு, டிசெ. 17

போதைப்பொருள் தொடர்பான நடவடிக்கைகளில் கைது செய்யப்பட்ட குற்றவாளிகளை அடையாளம் காணும் செயல்முறையை நெறிப்படுத்தும் புதிய அமைப்பை பொலிஸார் அறிமுகப்படுத்தியுள்ளனர்.

இதற்காக அனைத்து பொலிஸ் நிலையங்களையும் இணைக்கும் விசேட தரவு அமைப்பு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

புதிய முறையின் கீழ் போதைப்பொருள் குற்றத்துடன் தொடர்புடைய எந்தவொரு நபரின் உள்ளீட்டையும் செயல்படுத்துவதன் மூலம் பொலிஸாரினால் கடந்த கால குற்றவியல் பதிவுகளை மீட்டெடுக்க முடியும்.

போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பான அனைத்து கைதுகளின் விவரங்களும் தரவு அமைப்பில் புதுப்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தரவு அமைப்பை அறிமுகப்படுத்தும் நிகழவொன்று பொலிஸ் தலைமையகத்தில் பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் மற்றும் பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் ஆகியோரின் பங்க ளிப்புடன் இடம்பெற்றது.

அதன்போது மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள் பிரிவுகளுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் ஆகியோருக்கு திட்டமிடப்பட்ட விசேட போதைப் பொருள் தொடர்பான நடவடிக்கைகள் குறித்தும் விளக்கமளிக்கும் செயலமர்வும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(அ)

# கந்தளாய்குள வான் கதவுகள் திறக்கப்படலாம்

கொழும்பு, டிசெ. 17

தற்போது பெய்துவரும் அடை மழை காரணமாக கந்தளாய் நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் நேற்று சனிக்கிழமை காலை 7 மணியளவில் 109,450 ஏக்கர் அடியாகப் பதிவாகியுள்ளது.

தொடர்ந்து மழை பெய்து வரும் சந்தர்ப்பத்தில் வான் கதவுகள் திறக்கப்படலாம் என கந்தளாய் பிரதேச நீர்ப்பாசான பொறியியலாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. பொது மக்கள் அவதானமாக இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. தம்பலகாமம் பிரதேச செயலக பகுதி கந்தளாய் பிரதேச செயலக பகுதி மக்களும் மிகவும் அவதானத்துடன் செயற்படுமாறும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# கொழும்பில் 558 மரங்கள் ஆபத்து மிக்கவையாம்!

கொழும்பு, டிசெ. 17

கொழும்பு நகரில் 558 மரங்கள் ஆபத்தானவை என அடையாளம் காணப்பட்டுள்ளது.

இவற்றில் சில மரங்கள் 100 ஆண்டுகளுக்கு மேல் பழமையானது என தெரியவந்துள்ளது.

சிங்கள ஊடகம் ஒன்று நடத்திய ஆய்விலேயே இந்த தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த சில மாதங்களாக கொழும்பு நகரில் பல இடங்களில் மரங்கள் முறிந்து வீழ்ந்து பல்வேறு விபத்துக்கள் ஏற்பட்டன.

இதன்படி, இது தொடர்பில் கொழும்பு மாநகர சபை ஆணையார் தெரிவிக்கையில், பல்வேறு தரப்பினரிடம் இருந்து கிடைத்த தகவலின்படி 330 மரங்களே ஆபத்தானவை என அடையாளம் காணப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

(அ)

# சர்வதேச நாணய நிதியத்தின் அனுமதிக்கு இலங்கை வர்த்தக சம்மேளனம் வரவேற்பு

கொழும்பு, டிசெ. 17

சர்வதேச நாணய நிதியத்தினால் இலங்கைக்கான இரண்டாம் கட்ட கடன்நிதி விடுவிக்கப்பட்டிருப்பது குறித்து வரவேற்பு வெளியிட்டிருக்கும் இலங்கை வர்த்தக சம்மேளனம், நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அமைவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட மறுசீரமைப்புக்களைத் தொடர்ந்து முன்னெடுக்கவேண்டுமென வலியுறுத்தியுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதிச்செயற்திட்டத்தின்கீழ் இலங்கைக்கு இரண்டாம் கட்டமாக 337 மில்லியன் டொலர் கடன்நிதியை வழங்குவதற்கு நாணய நிதியப் பணிப்பாளர் சபை கடந்த செவ்வாய்கிழமை அனுமதி அளித்துள்ளது. இதுகுறித்து வரவேற்பு தெரிவித்து வெளியிட்டிருக்கும் அறிக்கையிலேயே இலங்கை வர்த்தக சம்மேளனம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

சர்வதேச நாணய நிதியம் அளித்துள்ள அனுமதி மிகமுக்கியத்துவம் வாய்ந்தது என்பதுடன், இதனூடாக இலங்கைக்கு சுமார் 337 மில்லியன் டொலர் நிதி கிடைக்கப்பெறும். இது மிகமுக்கிய நிபந்தனைகள் மற்றும் அடைவுகளைப் பூர்த்தி செய்வதில் இலங்கை கொண்டிருக்கும் கடப்பாட்டை நன்கு வெளிப்படுத்துகின்றது.

ஆட்சியியல் ஆய்வு அறிக்கையை வெளியிடல் மற்றும் சர்வதேச கடன்வழங்குனர்களுடன் கடன்மறுசீரமைப்பு தொடர்பான இணக்கப்பாட்டை எட்டுதல் போன்றவை நாணய நிதியத்தின் நிபந்தனைகளில் உள்ளடங்குகின்றன. இவை வருமானத்தை அடிப்படையாகக்கொண்ட நிதியியல் கொள்கைவகுப்பு, பரந்துபட்ட நிதி மேற்பார்வை, கடன் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்தல், கையிருப்பை கட்டியெழுப்பல், பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தல் மற்றும் நிதியியல் உறுதிப்பாட்டைப் பேணல் ஆகியவற்றை அடைவதில் இலங்கையின் வலுவான அர்ப்பணிப்பைக் காண்பிக்கின்றன. அதுமாத்திரமன்றி ஆட்சியியல் மேம்பாடு மற்றும் சமூகத்தில் நலிவடைந்த நிலையிலுள்ள தரப்பினரைப் பாதுகாத்தல் என்பவற்றை முன்னிறுத்திய அரசாங்கத்தின் நடவடிக்கைகள் பாராட்டத்தக்கவையாகும்.

அதேவேளை ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்ட மறுசீரமைப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுவது அவசியமாகும். குறிப்பாக அண்மையகாலங்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட வரி அறவீடுகள் பணவீக்கத்தில் தாக்கம் செலுத்தியிருப்பதுடன், பொதுமக்களின் கொள்வனவு ஆற்றலை வெகுவாகப் பாதித்திருக்கின்றது. எனவே இவற்றை நேர்மறையான பாதையில் கொண்டுசெல்வதற்கு பொருளாதார வளர்ச்சியை அடைந்துகொள்வது அவசியமாகும்.

மேலும் சுற்றுலாத்துறை, துறைமுகங்கள், புதுப்பிக்கத்தக்க சக்திவலு மற்றும் ஏற்றுமதி போன்ற துறைகளிலும், குறிப்பாக விவசாயத் துறையில் மேம்படுத்தப்பட்ட டிஜிட்டல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதிலும் விசேட கவனம் செலுத்திவருகின்றோம். அந்த வகையில் நிதியியல் செயற்திறன், வெளிப்படைத்தன்மை மற்றும் ஆட்சியியல் நிர்வாகம் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அமைவான டிஜிட்டல் தொழில்நுட்பப் பிரயோகம் இன்றியமையாததாகும். இவற்றை நடைமுறைப்படுத்துவதை இலக்காகக்கொண்டு அரசாங்கத்துடனும், சர்வதேச நாணய நிதியம் போன்ற இதர கட்டமைப்புக்களுடனும் ஒன்றிணைந்து செயலாற்றத் தயாராக இருக்கின்றோம் - என்றுள்ளது. (அ)

ஈழநாடு
Eelanadu
17.12.2023 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், மார்கழி 01

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தமிழர் இராஜதந்திரம்

அன்ரன் பாலசிங்கத்திற்கான நினைவு நிகழ்வொன்று கிளிநொச்சியில் இடம்பெற்றிருக்கின்றது. பாலசிங்கம், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சர்வதேச முகமாக இருந்தவர். சர்வதேச அரசியல் சூழல் தொடர்பிலும் - அதில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் தொடர்பிலும் - குறிப்பாக இந்தியாவின் தலையிடும் ஆற்றல் தொடர்பிலும் பாலசிங்கத்திடம் தெளிவான பார்வை இருந்தது. அவரது இறுதிக்கால நகர்வுகள் அதற்கான ஆதாரமாக இருக்கின்றன. ஆனால் பாலசிங்கத்தின் இராஜதந்திர நகர்வுகள் வெற்றியளிக்கவில்லை. இராஜதந்திரம் என்பது - தொடங்கிய இடத்திற்கே மீண்டும் திரும்பிச் செல்வதல்ல - என்பது பாலசிங்கத்தின் கூற்று - ஆனால், இன்று தமிழ் தேசிய அரசியல் எந்த இடத்தில் வந்து நிற்கின்றது?

சமஷ்டிக் கோரிக்கையில் தொடங்கிய தமிழ் தேசிய அரசியல் பயணமானது - பின்னர், தனிநாட்டுக் கோரிக்கையாக முகம் காட்டியது. இந்த இரண்டு அரசில் போக்கிற்கும் தலைமை தாங்கியவர்கள் மிதவாத அரியல்வாதிகள். எஸ்.ஜே.வி.செல்வநாயகம் தனது ஆற்றலின் மீதான நம்பிக்கையிலிருந்து, இவ்வாறான கோரிக்கைகளை முன்வைக்கவில்லை. மாறாக சில நெருக்குவாரங்களை கொடுத்தால், சிங்களவர்கள் இறங்கிவருவார்கள் என்னும் நம்பிக்கையின் அடிப்படையிலேயே இவ்வாறான கோரிக்கையை முன்வைத்தார். தனதும் - தனது கட்சியின் மீதான நம்பிக்கையிலிருந்து தனிநாட்டுக் கோரிக்கையை நோக்கி செல்வநாயகம் செல்லவில்லை.

செல்வநாயகத்திற்கு பின்னர் அரசியல் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட, அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் நிலைமைகளை துல்லியமாக விளங்கிக் கொண்ட ஒரு தலைவராக இருந்தார். அமிர்தலிங்கத்தை பொறுத்தவரையில், ஈழத் தமிழ் சமூகமானது, ஒரு பாரிய யுத்தத்திற்குள் சென்றால் - அதன் பின்னர் மீண்டு எழுவதற்கு குறைந்தது 50 வருடங்களாவது செல்லும். புலம்பெயர்ந்த மக்களுடனான சந்திப்பு ஒன்றின்போது, அமிர் இதனை குறிப்பிட்டிருக்கின்றார். இந்தப் பின்புலத்தில்தான், இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை ஒரு பொன் முட்டையிடும் வாத்தாக அமிர் கருதினார். இந்திய படைகள் இலங்கையில் நிலை கொண்டிருப்பது மட்டும்தான், ஈழத் தமிழர்களுக்கு சாதகமானது என்று அமிர் கருதினார். ஆனால் விடுதலைப் புலிகள் வேறு விதமாக யோசித்தனர். அப்போது விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியராக பாலசிங்கமே இருந்தார்.

பாலசிங்கத்தின் இறுதி நிகழ்வில், நோர்வேயின் சமாதான தூதுவர் - எரிக் சொல்ஹெய்மும் பேசியிருந்தார். அப்போது அவர் ஒரு விடயத்தை குறிப்பிட்டிருந்தார். சமாதான ஒப்பந்தத்தின்போது, தான் பலருடன் பழகியிருக்கின்றேன். அவர்களில் சிலர் மட்டுமே உண்மைகளை பேசியவர்கள். அதில் பாலசிங்கமும் ஒருவர். பாலசிங்கம் இந்தியாவின் முக்கியத்துவத்தை புரிந்து கொண்டிருந்தார் ஆனால், பிரபாகரனின் சிந்தனையோட்டத்தையும் அவர் சமப்படுத்திக் கொண்டு செல்ல முற்பட்டார். ஒரு கட்டத்தில் அது முடியாமல்போனது. தனது சொந்த அமைப்பை உலக யதார்த்தங்களுக்குள்ளால் நகர்த்திச் சென்று, தமிழ் மக்களுக்கு உச்சபட்டசமான தீர்வொன்றை பெற்றுக் கொடுக்கும் இராஜந்திர முயற்சியில் பாலசிங்கம் வெற்றிபெறவில்லை. அந்த வகையில் அவர் ஒரு தோல்வியடைந்த இராஜதந்திரியாவார். பாலசிங்கத்தின் இராஜதந்திர தோல்விதான், இன்று தமிழரின் அரசியலை தொடங்கிய இடத்திற்கே கொண்டுவந்திருக்கின்றது.

யுத்தத்திற்கு பின்னரான அரசியலில் இராஜதந்திர நகர்வு என்று குறிப்பிடுமளவிற்கு ஒன்றுமில்லை. சம்பந்தன் அவ்வப்போது இராஜதந்திரம் என்னும் சொல்லை உச்சரித்துக் கொண்டார். சம்பந்தனின் இராஜதந்திர உவியாளராக அடையாளப்படுத்தப்பட்டவர்தான் எம்.ஏ.சுமத்திரன்.

ஒரு தரப்பு பலமான நிலையில் இருக்கின்ற போதுதான், அங்கு இராஜதந்திரம் சாத்தியப்படும். ஈழத் தமிழர்கள் பலமான நிலையில் இருந்த காலம் என்பது, ஆயுதப் போராட்ட காலம் மட்டும்தான். விடுதலைப் புலிகள் இந்தியாவை நேரடியாக விரோதித்துக் கொண்ட பின்னர் புலிகளுக்கான இராஜதந்திர கதவுகள் பெருமளவிற்கு மூடப்பட்டுவிட்டது. எரிக் சொல்ஹெய்ம் ஒரு விடயத்தை பல்வேறு சந்தர்ப்பங்களில் குறிப்பிட்டிருக்கின்றார் - அதாவது விடுதலைப் புலிகள் அமைப்பு இந்தியாவைப் புரிந்துகொள்ளவில்லை - அதுதான் அவர்களின் தவறு. இந்தத் தவறில் பாலசிங்கத்துக்கும் பெரிய பொறுப்புண்டு. எனினும் பாலசிங்கம் இந்தியாவை நோக்கிச் செல்வதற்கு இறுதிக்காலத்தில் சில முற்சிகளை மேற்கொண்டிருந்தார். அவருக்கு ஒரு விடயம் தெளிவாக தெரிந்திருந்தது - அதாவது, விடுதலைப் புலிகள் அமைப்பு உலகிலிருந்து தனிமைப்படுவதை தடுக்க முடியுமென்றால், அது இந்தியாவால் மட்டும்தான் முடியும். இதனைக் கருத்தில் கொண்டுதான், இந்திய தொலைக்காட்சி ஒன்றுக்கு பாலசிங்கம் நேர்காணல் ஒன்றை வழங்கி, முன்னைய தவறுகளை வெளிப்படையாக ஒப்புக் கொண்டார். ஆனால் பாலசிங்கம் இந்தியாவை நோக்கி திரும்பிய காலத்தில் நீர் அதிகம் பாலத்திற்கு கீழ் ஓடிவிட்டது. நிலைமைகள் கைமீறிப் போய்விட்டன.

பாலசிங்கத்தின் இறுதிக் கால பங்களிப்பு ஒரு வகையில் பெறுமதியானது. அதாவது, நீங்கள் எங்கும் செல்லலாம், ஆனால் - அருகிலிருக்கும் பிராந்திய சக்தியான இந்தியாவின் ஆசீர்வாதம் இல்லாவிட்டால் எதுவும் அசையாது. இந்தியா இன்றி ஈழத் தமிழர் விடயத்தில் எதுவும் அசையாது. இப்போதும் இந்தியாவை எதிர்த்துக் கொண்டிருப்பவர்கள் உண்மையில் தமிழ் மக்களின் நலனில் அக்கறையுள்ளவர்களா?

# புதுமுறிப்பு குள அணைக்கட்டை சீர்செய்யும் பணிகள் ஆரம்பம்!



*கிளிநொச்சி, டிசெ. 17*

கிளிநொச்சி புதுமுறிப்பு குளத்தில் ஏற் பட்ட பாதிப்பினை சீர்செய்யும் நடவடிக்கை இராணுவத்தினரின் உதவியுடன் ஆரம்பமானது.

புதுமுறிப்பு குளத்தின் அணைக்கட்டில் ஏற்பட்ட பாதிப்பு தொடர்பில் நேற்று முன்தினம் அடையாளம் காணப்பட்ட நிலையில், பாதுகாப்பு நடவடிக்கைக்கு இடர் முகாமைத்துவ பிரிவு தயாராகியது.

தொடர் மழை காரணமாக குளக்கட்டில் ஏற்பட்ட மண்ணரிப்பு அவதானிக்கப்பட்டு, நீர்ப்பாசன பொறியியலாளர்களால் ஆராயப்பட்டுள்ளது.

ஆபத்தான நிலை ஏற்படாத நிலையை அவதானித்த பொறியியலாளர்கள், பாதுகாப்பு நடவடிக்கை தொடர்பில் மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவினருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து, நேற்றுக் காலை இராணுவத்தினரின் உதவியுடன் பாதுகாப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகிறது. நீர்ப்பாசன திணைக்களத்தினர், பொறியியலாளர்களின் கண்காணிப்பில் குறித்த பணிகள் ஆரம்பமாகின . விவசாயிகளும் குறித்த பணியில் ஈடுபட்டனர்.

11 வது கஜபாகு பிரிவினர் 40 பேர் வரை குறித்த பணியில் ஈடுபட்டனர். குளக்கட்டின் ஊடான போக்குவரத்து நிறுத்தப்பட்டுள்ளதுடன், கட்டின் பல பகுதிகளிலும் மண்ணரிப்பு ஏற்பட்டுள்ளதையும் அவதானிக்க முடிந்தது.

(அ)

# ஹோட்டன் சமவெளிக்கு ஜனாதிபதி விஜயம்

*கொழும்பு, டிசெ. 17*

உயர்தர சுற்றுலாத் துறையை இலக்கு வைத்து ஹோட்டன் சமவெளியை அண் மித்த பிரதேசத்தை அபிவிருத்தி செய்ய வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வலியுறுத்தினார்.

ஹோட்டன் சமவெளி தேசிய பூங்காவிற் கான கண்காணிப்பு விஜயமொன்றை ஜனாதிபதி மேற்கொண்டிருந்த போதே இதனை தெரிவித்தார்.

ஹோட்டன் சமவெளி தேசிய பூங்கா விற்கு ஜனாதிபதி நேற்றுமுன்தினம் சென்றிருந்தார்.

ஹோட்டன் சமவெளி தேசிய பூங்காவை அண்மித்துள்ள வனஜீவராசிகள் திணைக் களம், வன பாதுகாப்பு திணைக்களத்திற்கு சொந்தமான இடங்களை வரைபடத்தின் மூலம் மேற்பார்வை செய்த ஜனாதிபதி , ஹோட்டன் சமவெளி தேசிய பூங்கா, அதனைச் சார்ந்த பகுதிகளை உள்ளடக்கிய புதிய வரைபினை தயாரித்து விரைவில் தன்னிடம் கையளிக்குமாறும் வலியுறுத்தினார்.

ஹோட்டன் சமவெளியை அண்மித்த பகுதிகளை உயர்மட்ட சுற்றுலாப் பயணிகளை இலக்கு வைத்து அபிவிருத்தி செய்யும் பட்சத்தில், அதிகளவான வெளிநாட்டு வருவாயை ஈட்ட முடியும் எனவும் ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்.

(அ)

# இராணுவத்துக்கு புதிய தலைமை அதிகாரி!

*கொழும்பு, டிசெ. 17*

கஜபா படைப்பிரிவைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் டபிள்யூ.எச்.கே.எஸ் பீரிஸ் இலங்கை இராணுவத்தின் தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இப்பதவியை பொறுப்பேற்கும் முன், மேற்கு பாதுகாப்பு படை கட்டளைத் தளபதியாக அவர் தனது கடமைகளை ஆற்றியிருந்தார்.

இவர், பாணந்துறை புனித அந்தோனியார் ஆண்கள் பாடசாலை மற்றும் கொழும்பு தர்ஸ்டன் கல்லூரி ஆகியவற்றில் தனது பாடசாலைக் கல்வியை பெற்று 1988 ஆம் ஆண்டு இராணுவத்தில் இணைந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

அவரது இராணுவ சேவையின் போது படிப்படியாக பதவி உயர்வு பெற்று, 2021 ஆண்டு மே மாதம் 07 ஆம் திகதி மேஜர் ஜெனரலாக பதவி உயர்வு பெற்றமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



பகிர்வு -108

# வாழ்க்கையில் வெற்றி வேண்டுமா? கைகளை நம்புவோம்! கைரேகையை அல்ல... என்கிறார் ஈஷா பவுண்டேஷன் நிறுவுநர் சற்குரு

- கணபதி சர்வானந்தா

சில சமயங்களில் எதேச்சையாக, அதிர்ஷ்டவசமாக, சில விஷயங்கள் உங்களுக்குச் சாதகமாக நிகழ்ந்துவிடலாம். அப்படிக் காற்று உங்கள் பக்கம் வீசும் சமயத்திற்காக நீங்கள் காத்திருந்தால், நல்ல விஷயங்கள் உங்கள் கல்லறையில்தான் நடக்கும், ஏனென்றால் உங்கள் வாழ்க்கையில் அச்சமயம் வராமல் கூட போய்விடலாம்.

உங்களுக்கு தெரியுமா? கோடான கோடி தடவை ஒரு திடமான சுவரின் ஊடே நடந்து அதைக் கடக்க முயன்றால், அதில் ஒரு முறை நீங்கள் கடந்துவிட முடியுமென்று குவான்டம் கோட்பாடு (Quantum Theory) கூட சொல்கிறது. அதில் சிறிய சிக்கல் அந்த கோடான கோடி தடவையைத் தொடும்முன் உங்கள் மண்டையோடு உடைந்திருக்கும்.

நீங்கள் அதிர்ஷ்டத்தை நம்பி வாழும்போது, நீங்கள் பயத்திலும் பதற்றத்திலும் வாழ்கிறீர்கள். நீங்கள் தெளிவான நோக்கத்துடனும் திறமையுடனும் வாழும்போது உங்களுக்கு எது நடந்தாலும் நடக்காவிட்டாலும், உங்களுக்கு நடப்பவை மேல் உங்களுக்கு ஆளுமை இருக்கும். அதுதான் ஸ்திரமான வாழ்க்கை.

**தோல்வியில் தொலைவதை நிறுத்துங்கள்**

உறுதியோடு இருக்கும் ஒரு மனிதனுக்குத் தோல்வி என்பதே கிடையாது. ஒரு நாளுக்கு 100 முறை நீங்கள் கீழே விழுந்தால், அவை நீங்கள் கற்கும் 100 பாடங்களாகிவிடும். நீங்கள் விரும்புவதை உருவாக்குவதில் உறுதியுடன் இருந்தால், உங் கள் மனம் ஒரே திசையில் நிலைத்துவிடும். உங்கள் மனம் இருக்கும் திசையில் உங்கள் உணர்ச்சிகளும் ஒன்றிவிடும். ஏனென்றால் நீங்கள் சிந்திக்கும் விதமாகத்தான் நீங்கள் வாழ்க்கையை உணரும் விதமும் இருக்கும். உங்கள் எண்ண மும் உணர்வுகளும் ஒன்று சேர்ந்தால், உங்கள் சக்திகளும் உங்கள் உடலும்கூட அத்திசையில் ஒருங்கிணைந்துவிடும். இவை அனைத்தும் ஒருமுகமாகின்ற போது, நீங்கள் விரும்பு வதை உருவாக்கி உங்கள் கனவை நிஜமாக்கும் திறமை அபார மாகிவிடும். பல விதங்களில் நீங்கள் படைப்பாளராகி விடுவீர்கள்.

**தேவை தெளிவு - குருட்டு நம்பிக்கை அல்ல**

ஒரு மனிதனுக்குத் தேவை தெளிவு, குருட்டு நம்பிக்கை அல்ல. ஒரு கூட்டத்தின் நடுவே நீங்கள் நடக்கும்போது, உங்கள் பார்வை தெளிவாக இருந்தால், ஒவ்வொருவரும் எங்கு இருக்கிறார் என்று உங்களால் பார்க்க முடிந்தால், கூட்டத்தில் ஒருவரைக் கூடத் தொடாமல் நீங்கள் மிகச் சுலபமாக நடந்து சென்றுவிடுவீர்கள்.

உங்கள் பார்வைத் தெளிவாக இல்லை, ஆனால் நீங்கள் அதீத நம்பிக்கை உடையவர் என்கிறபோது, எல்லோர் மீதும் நடந்து செல்வீர்கள். தெளிவில்லாத காரணத்தால், தன்னம்பிக்கை நல்ல மாற்றுப்பொருள் என்று கருதுகிறீர்கள்.ஒரு காலமும் அப்படி ஆக முடியாது.

உதாரணமாக, நீங்கள் உங்கள் வாழ்க்கையின் முக்கியமான முடிவுகளையெல்லாம் இப்படி எடுக்கிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். ஒரு நாணயத்தைச் சுண்டிவிடுங்கள். “சரி, தலை விழுந்தால் முதல் திட்டப்படி செயல்படுவோம், ஒருவேளை பூ விழுந்துவிட்டால் இரண்டாம் திட்டப்படி செயல்படுவோம்,” என்று நீங்கள் முடிவெடுத்து செயல்பட்டால், உங்கள் திட்டம் வேலை செய்ய 50 சதவிகிதம் வாய்ப்பிருக்கிறதா இல்லையா?

வாழ்க்கையில் 50 சதவிகிதம்தான் நீங்கள் சரியாக இருக்கிறீர்கள் என்கிறபோது, நீங்கள் இரண்டு தொழில்கள்தான் செய்ய முடியும். ஒன்று நீங்கள் வானிலை அறிக்கையாளராகவோ அல்லது ஜோசியக்காரராகவோ இருக்க முடியும். இந்த பூமியில் நீங்கள் வேறெந்த வேலையும் செய்ய முடியாது.

**கொஞ்சம் வளைந்து கொடுங்கள்**

நம் வாழ்க்கையில் பலவிதமான சூழ்நிலைகளைக் கையாள்வதற்கு, நமக்கு வெவ்வேறு விதமான ஆளுமை குணங்கள் தேவை. அதில் நீங்கள் நீரோடைபோல் வளைந்து கொடுக்கும் தன்மையுடன் இருந்தால், நீங்கள் எடுத்திருக்கும் பாத்திரத்தில் உங்களால் முழு திறனுடன் செயல்பட முடியும். அதில் சிறிதும் சிக்கலிருக்காது. ஆனால் பலருக்கோ சூழ்நிலைக்கேற்றவாறு வளைந்து கொடுக்க முடியாமல் கட்டுண்டு கிடக்கிறார்கள். அவர்களுக்கு பிடிக்காதவற்றையும் புரியாதவற்றையும் எதிர்கொள்ளும்போது, அவர்கள் சொல்ல முடியாத பாதிப்பிற்கு உள்ளாகிறார்கள். நீங்கள் அதை உடைக்க வேண்டுமென்றால், நீங்கள் அதை முற்றிலும் வேறுவிதமாக அணுக வேண்டும். நீங்கள் செய்யக்கூடிய மிக எளிமையான செயல் இது: உங்களுக்குப் பிடிக்காத ஒருவருடன் சேருங்கள். அவர்களுடன் சிறிது நேரம் செலவிடுங்கள், மிக அன்பாக, ஆனந்தமாக! உங்களுக்குப் பிடிக்காதவற்றைச் செய்யுங்கள், உங்களுக்குப் பிடிக்காதவர்களுடன் இருங்கள். அந்த சூழ்நிலையிலும் நீங்கள் புத்தியுடன், அன்புடன், ஆனந்தத்துடன் வாழக் கற்றுக் கொண்டால் அதுவே உங்களுக்கு வெற்றி.

**எனக்கு என்ன கிடைக்கும்?**

உயர்ந்த மனிதனாக ஆக வேண்டும் என்கிற பேராவல் உங்களுக்கு இருக்கத் தேவையில்லை. நீங்கள் யாராக இருக்கிறீர்கள் என்பதன்மேல் உள்ள கவனத்தைத் தாண்டி உங்கள் குறிக்கோளையும், நீங்கள் இயங்கும் வளையத்தையும் விரிவுபடுத்திவிட்டால், எப்படியும் நீங்கள் உயர்ந்த மனிதராகத்தான் இருப்பீர்கள்.

உயர்ந்த நிலையை அடைய வேண்டும் என்று சில மனிதர்கள் ஏங்கியதில்லை. அவர்கள் பார்வை ”எனக்கு என்ன கிடைக்கும்?” என்பதைத் தாண்டி இருந்தது. ”எனக்கு என்ன கிடைக்கும்?” என்ற இந்த ஒரு கணக்கை மட்டும் நீங்கள் கைவிட்டுவிட்டு, உங்கள் திறமையின் உச்சத்தில் செயல்பட்டால், ஏதோ ஒருவிதத்தில் நீங்கள் உயர்ந்தவராகத்தான் இருப்பீர்கள்.

அப்போது இயல்பாகவே ”என்னைச் சுற்றியிருக்கும் உயிர்களுக்கு நான் என்ன செய்ய முடியும்?” என்று பார்க்கத் துவங்கி விடுவீர்கள். உங்கள் திறமைகளையும் இயல்பாகவே அதிகரித்துக் கொள்வீர்கள், ஏனென்றால் செய்வதற்கு அவ்வளவு செயல்கள் இருக்கும்!

# இந்தவார ராசிபலன் 17.12.2023 - 23.12.2023

ஞாயிற்றுக்கிழமை
சோபகிருது வருடம் - மார்கழி 01
நல்ல நேரம்: 7.30 - 9.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : பஞ்சமி

### மேஷம் [ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். எதிர்ப்புகள் குறையும். பொருளாதாரத்தில் முன்னேற்றம் உண்டாகும். இல்லத்தில் மகிழ்ச்சி நிறையும். உத்தியோகஸ்தர்களுக்கு நிலவிவந்த தொல்லைகள் குறையும். வியாபாரிகளுக்கு வாடிக்கையாளர்களிடம் ஆதரவு பெருகும். விவசாயிகளுக்கு பாசன வசதிகள் அதிகரிக்கும். அரசியல்வாதிகள் கவனமாக இருக்கவும். கலைத் துறையினருக்கு நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். பெண்களின் பேச்சுக்கு மதிப்பு அதிகரிக்கும்.

### ரிஷபம் [ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

சிறிய அலைச்சல்கள் உண்டாகும். எவரையும் நம்பி வாக்கு கொடுக்கவேண்டாம். வருமானம் குறைவாக இருந்தாலும், குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும். எடுத்த காரியத்தை முடிப்பீர்கள். உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகளிடம் நற்பெயரை எடுப்பீர்கள். வியாபாரிகள் கவனமாக இருப்பீர்கள். விவசாயிகள் உப தொழில்களில் ஈடுபடுவீர்கள். அரசியல்வாதிகள் செயல்களில் கவனம் தேவை. கலைத் துறையினர் வெற்றியைப் பெறுவீர்கள். பெண்கள் நண்பர்களிடம் உதவியைப் பெறுவீர்கள். மாணவர்கள் விளையாட்டுகளில் கவனம் தேவை.

### மிதுனம் [ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

கடன் வசூலாகும். பங்குச் சந்தை வியாபாரத்திலும் பலன் கிடைக்கும். உடனிருப்போருக்கு உதவுவீர்கள். தன்னம்பிக்கையும் தனித்திறனும் வெளிப்படும். உத்தியோகஸ்தர்கள் பிறரால் பிரச்னைகளைச் சந்திப்பீர்கள். வியாபாரிகள் புதிய உத்திகளைப் புகுத்துவீர்கள். விவசாயிகள் லாபம் பெறுவீர்கள். அரசியல் வாதிகளுக்கு கட்சியில் நற்பெயர் உண்டாகும். கலைத் துறையினர் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். பெண்களுக்கு ஆடம்பரப் பொருள்கள் கைவந்து சேரும். மாணவர்கள் விளையாட்டுகளில் பரிசுகளைப் பெறுவீர்கள்.

### கடகம் [ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

குடும்பத்தினரிடம் அனுசரித்து நடப்பீர்கள். பெருமைகளை வெளியில் சொல்லவேண்டாம். திடீர் பயணங்களால் புதிய அனுபவம் உண்டாகும். தொழிலில் மாற்றங்களைச் செய்வீர்கள். உத்தியோகஸ்தர்கள் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். வியாபாரிகளுக்கு ஆதரவு பெருகும். விவசாயிகள் பணியாளர்களை அரவணைத்துச் செல்வீர்கள். அரசியல்வாதிகள் எதிர்க்கட்சியினரின் ஆதரவையும் பெறுவீர்கள். கலைத் துறையினரின் ஆற்றல் அதிகரிக்கும்.

### சிம்மம் [ மகம், பூரம், உத்திரம் 1 ]

உடல் உபாதைகள் குணம் அடையும். குடும்பத்தில் நிம்மதி நிறையும். சொத்துகளில் பாகப் பிரிவினை நடக்கும். கடன் வசூலாகும். உத்தியோகஸ்தர்களுக்கு அலுவலகத்தில் பொறுப்புகள் கூடும். வியாபாரிகள் வியாபாரத்தில் கவனமாக இருப்பீர்கள். விவசாயிகள் கொள்முதலில் நிரந்தரத்தைக் காண்பீர்கள். அரசியல்வாதிகள் கட்சிப் பணியில் முழு மூச்சுடன் இருப்பார்கள். கலைத் துறையினர் ரசிகர்களின் மனம் அறிந்து செயல்படுவீர்கள். பெண்கள்ஆடை, அணிகலன்களை வாங்குவீர்கள். மாணவர்களின் மனக் குழப்பம் நீங்கும்.

### கன்னி [ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

விவேகத்துடன் செயல்படுவீர்கள். குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வீர்கள். குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும். வழக்குகளில் சாதகமான சூழல் உருவாகும். உத்தியோகஸ்தர்கள் பயணம் மேற்கொள்வீர்கள். வியாபாரிகளுக்கு பணப்புழக்கம் சிறக்கும். விவசாயிகள் பாசன வசதிகளை மேம்படுத்துவீர்கள். அரசியல்வாதிகளின் செல்வாக்கு கட்சியில் உயரும். கலைத் துறையினருக்கு புதிய நட்புகள் உருவாகும். பெண்களுக்கு குடும்ப ஒற்றுமை அதிகரிக்கும். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் செலுத்தி மதிப்பெண்களை அள்ளுவீர்கள்.

### துலாம் [ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

தொழிலை விரிவுபடுத்த வெளியூர் சென்று வருவீர்கள். வருமானம் படிப்படியாக உயரும். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற சிரமப்படுவீர்கள். உத்தியோகஸ்தர்கள் அலுவலகத்தில் கடன் பெறுவீர்கள். வியாபாரிகள் வியாபாரத்தை விரிவுபடுத்த சிரமப்படுவீர்கள். விவசாயிகள் புதிய குத்தகைகளை எடுக்க மாட்டீர்கள். அரசியல்வாதிகள் புதிய முயற்சிகளில் கவனம் தேவை. கலைத் துறையினர் ரசிகர்களைக் கௌரவப்படுத்துவீர்கள்.

### விருச்சிகம் [ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

எடுத்த காரியங்களை வென்று முடிப்பீர்கள். கடன் வசூலாகும். பொருளாதார நிலை மேம்படும். பங்குச் சந்தையில் வருவாய் கிடைக்கும். இல்லத்தில் திருமண முயற்சிகள் கை கூடும். உத்தியோகஸ்தர்கள் அலுவலகத்தில் திறமையை வெளிப்படுத்துவீர்கள். வியாபாரிகளுக்கு கூட்டு வியாபாரத்தில் பங்கு கிடைக்கும். விவசாயிகள் புதிய நிலங்களை வாங்குவீர்கள். அரசியல்வாதிகள் கட்சிப் பிரச்னையால் வருத்தம் அடைவீர்கள்.மிகத்தில்

### தனுசு [ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

குடும்பத்தினர் மனமறிந்து நடப்பார்கள். எதிர்காலத்துக்கு பணம் சேர்ப்பீர்கள். வெளியூர் பயணம் செல்ல நேரிடும். வங்கிக் கடன் கிடைக்கும். உத்தியோகஸ்தர்கள் எச்சரிக்கையுடன் இருக்கவும். வியாபாரிகள் குழப்பங்களைச் சிரமப்பட்டு களைவீர்கள். விவசாயிகள் பிறரின் ஆதரவைப் பெறுவீர்கள். அரசியல்வாதிகளுக்கு வேலைப்பளு அதிகரிக்கும். கலைத் துறையினர் பிறருக்கு ஆலோசனைகளை அளிப்பீர்கள். பெண்கள் நவீன உபகரணங்களை

### மகரம் [ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

உறவினர்களின் மனத்தாங்கலை அகற்றுவீர்கள். தொழில் போட்டியாளர்களை வெற்றி கொள்வீர்கள். பிறருக்கு உதவிகளைச் செய்வீர்கள். மதிப்பும் மரியாதையும் உயரும். உத்தியோகஸ்தர்களுக்கு பணிச் சுமை குறையும். வியாபாரிகள் போட்டிகளைச் சமாளிப்பீர்கள். விவசாயிகள் புதிய குத்தகைகளை நாடிச் செல்வீர்கள். அரசியல்வாதிகள் கவனமாகப் பேசவும். கலைத் துறையினரின் பொருளாதார நிலை சிறக்கும். பெண்கள் குடும்பத்தில் அமைதியைக் காண்பீர்கள். மாணவர்கள் பெற்றோர் பேச்சை கேட்டு நடப்பீர்கள்.

### கும்பம் [ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

வருமானம் அதிகரிக்கும். பிறருக்கு உதவிகளைச் செய்வீர்கள். திறமையை வெளிப்படுத்துவீர்கள். வீடு, வாகனங்களுக்குச் செலவு செய்வீர்கள். உத்தியோகஸ்தர்கள் கடினமான வேலைகளைச் சுலபமாகச் செய்வீர்கள். வியாபாரிகளுக்கு நல்ல லாபம் கிடைக்கும். விவசாயிகள் இடுபொருள்களுக்குச் செலவு செய்வீர்கள். அரசியல்வாதிகள் தொண்டர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். கலைத் துறையினர் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முயற்சிப்பீர்கள். பெண்களுக்கு ஆன்மிகத்தில் நம்பிக்கை அதிகரிக்கும்.

### மீனம் [ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

தொழிலை லாபம் குறையாமல் நடத்துவீர்கள். அரசு சலுகைகள் கிடைக்கும். பிறருக்கு உதவுவீர்கள். குழந்தைகளின் வளர்ச்சியில் பெருமை அடைவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். உத்தியோகஸ்தர்களுக்கு உயர்வு கிடைக் கும். வியாபாரிகளுக்கு யோகம் உண்டு. விவசாயிகள் அதிக விளைச் சலைக் காண்பீர்கள். அரசியல்வாதிகள் கடமையாற்றுவீர்கள். கலைத் துறையினர் புதிய ஒப்பந்தங்களில் கையொப்படுவீர்கள். பெண்கள் குலதெய்வப் பிரார்த்தனைகளைச் செய்வீர்கள். மாணவர்களுக்கு படிப்பில் நல்லதொரு மாற்றம் ஏற்படும்.

ஈழநாடு



# ஓவியங்கள் உரைத்த மலையக இதிகாசம்!

## இலங்கையில் லண்டன் ‘விம்பம்’ அமைப்பின் ‘மலையகம் - 200’




**சந்திரகுமார் தமயந்தி**

வறுமையால் வாழ்வின் பெரும்பகுதியைத் தொலைத்து வாடிவதங்கி நிற்கும் மக்களின் மனக்குமுறல்கள் கற்பனையின் வளர்ப்புகளல்ல. மாறாக, காலம் கிழித்த காயத்தின் வடுக்கள். எம் மண் இழந்து வரும் அடையாளங்கள். காலச்சக்கரத்தால் பின்னோக் கிப் போய்விட்ட எம் பண்பாடுகள், பழக்கவழக்கங்கள். மனங்களின் புகைச்சல்கள். பொருளாதாரத்தால் அழிந்து செல்லும் சமநிலை கலப்பற்ற சுதந்திரம் நோக்கிய அலசல்கள். ஏங்கும் மனச்சுமையுடன் சுதந்திர விடியலுக் காய் காத்திருந்து நடமாடும் பாத்திரங்கள். சோகம் திரண்டு நெஞ்சில் நிரந்தரமாக நிற்க, நடைப்பிணங்க ளாக உலாவரும் மனிதர்கள். தேயிலையுடன் சேர்த்துக் கிள்ளப்படும் இளமைகள். லயத்து வாழ்க்கையிலிருந்து இன்னமும் பிடுங்கப்படாத வேர்கள். பெறுமதியற்றுப் போய்விட்ட மனித உயிர்கள். நெஞ்சில் மூண்ட



நெருப்பால் ஒவ்வொரு மனதிலும் எரியும் யாககுண் டங்கள். இவர்களின் வாழ்க்கை, இரத்தம் கிளர்த்தும் முள்முடியின் சாரம். காலத்தின் கைகள் வரலாற்றைப் புரட்டினாலும், மலையக மக்களின் வாழ்க்கைப் பக்கங் கள் இன்னும் வெறுமையாகத்தான்.

ஆம், மலையக மக்களின் 200 வருட கறுப்பு வரலாற்றின் துயரார்ந்த பக்கங்களை வெளிக்கொணரும் முகமாகவும், மலையக சமூகத்தினரது சமூகநல விடயங் களையும் அவர்களின் வாழ்வியல் பிரச்னைகளையும் ஆராய்ந்து, அதற்கு வடிகால்கள் தேடும் நோக்குடன், ‘மலையகம் 200 - மலையக மக்களின் வலியும் வாழ்வும்’ என்ற ரீதியில், லண்டனில் இயங்கும் ‘விம்பம்’ அமைப்பி னர் சிறுகதை, ஓவிய, கட்டுரைப் போட்டிகளை நடாத்தினர். ஏற்கனவே பல்வேறு கலை பண்பாட்டு நிகழ்வுகளை நடாத்தி, அதற்குப் பேராதரவைப் பெற்று, தனக்கென ஒரு தனி இடத்தினைக்கொண்டிருக்கும் விம்பம் அமைப்பின் சார்பில், அந்த அமைப்பின் ஓவியர் கே.கே. ராஜாவின் நேரடி வழிகாட்டுதலுடன் இப் போட்டிகள் நடைப்பெற்றன.

இப்போட்டிகள் நடந்து முடிந்து மிகக் குறுகிய காலத்திற்குள் அதன் முடிவுகளும் அறிவிக்கப்பட்டன. அறிவிக்கப்பட்ட முடிவுகளின் படி, ஒவ்வொரு போட்டி களிலும் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களுக்கு தலா ரூபா 50000, 30000, 20000 என்ற ரீதியில் பணப் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டதோடு, தெரிவு செய்யப்பட்ட 10 ஆக்கங்களுக்கு ஆறுதல் பரிசாக ரூபா 10000 பணப் பரிசும் வழங்கப்பட்டது. போட்டி முடிவு களின்படி, சிறுகதைப் போட்டியில் முதல் 3 இடங்களை தவமுதல்வன் (தமிழ்நாடு), எம். மகேந்திரன் (போக வந்தலாவை), பிரமிளா பிரதீபன் (வத்தளை) ஆகியோர் பெற்றனர். அதேபோல், கட்டுரைப் போட்டியில் முதல் பரிசை தவச்செல்வன் சுப்பிரமணியம் (டிக்கோயா), சந்திரகுமார் தமயந்தி (ஹட்டன்), சிவனு இராஜேந்திரன் (கொட்டக்கலை) ஆகிய மூவரும் தட்டிச்சென்றனர். ஓவியப் போட்டிகளில் முதல் இடத்தினை ஜே. தங்கேஸ் வரன் (புசல்லாவை), திருமதி ஆர். கே. எஸ். குரே (பேராதனை) இரண்டாவது இடத்தையும், மூன்றாவது இடத்தை ஹமீரா ராஜீவ் (அக்கரைப்பற்று), திமோத்தி பிரான்ஸிஸ் (ஹட்டன்) ஆகியோரும் தட்டிச்சென்றனர்.

மலைகள் சூழ்ந்த இப் பிரதேசத்தின் பனிக்குள்ளும் குளிருக்குள்ளும் அடக்கி ஒடுக்கி வைக்கப்பட்டிருந்த அடிமைச் சமூகத்தின் யதார்த்தத்தினை முழுமையாக உணர்த்தும் முகமாக வரையப்பட்டு, போட்டிக்காக அனுப்பப்பட்ட ஓவியங்கள் அனைத்தும் மலையக மக்களின் 200 ஆண்டுக்கால வாழ்வியல் நிலைகளை விளக்குவனவாக, விம்பம் அமைப்பினரால் ஓவிய கண்காட்சியாக காட்சிப்படுத்தப்பட்டன. இந்த ஓவிய கண்காட்சி கடந்த ஒக்ரோபர் மாதம் தொடக்கம் நவம்பர் மாதம்வரை இலங்கையின் பல பாகங்களிலும் நடத்தப்பட்டன. முதலில் ஓரிடத்தில் மட்டுமே நடத்து வதாக ஏற்பாடு செய்யப்பட்ட இக் கண்காட்சிக்குக் கிடைத்த பேராதரவும் வேண்டுகோளும், தொடர் கண்காட்சியாக, ஒக்ரோபர் 20, 21ஆம் திகதிகளில் தெல்லிப்பழை மகாஜன கல்லூரியிலும், 22, 23ஆம் திகதிகளில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலும், 27, 28ஆம் திகதிகளில் கிளிநொச்சி விவேகானந்தா வித்தியாலயத்திலும், நவம்பர் 18, 19ஆம் திகதிகளில் மட்டக்களப்பு வை.எம்.சி.ஏ. மண்டபத்திலும், 24, 25ஆம் திகதிகளில் ஹட்டன் டிக்கோயா நகரசபை மண்ட பத்திலும் சிறப்பாக நடைபெற்றன. நவம்பர் 24, 25ஆம் திகதிகளில் ஹட்டன் டிக்கோயா நகரசபை மண்ட பத்தில் நடைபெற்ற ஓவியக் கண்காட்சியில் விம்பம் அமைப்புக்கு பக்கபலமாக, எஸ். தாஸ் (துறைத்தலைவர் சிறிபாத தேசிய கல்வியியல் கல்லூரி - பத்தனை) துணைநின்றார்.

முதல் நாள் நிகழ்வினை திருவாளர்கள் பற்றிக் குரே (சித்திர ஆசிரிய ஆலோசகர் - நுவரெலியா கல்வி வலயம்), சிவகுமார் (சித்திர ஆசிரிய ஆலோசகர் - ஹட்டன் கல்வி வலையம்), எஸ். இராஜேந்திரன் (முன்னாள் பீடாதிபதி - மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரி) ஆகியோர் ஆரம்பித்து வைத்தனர். சு. பிரசாந்த் (சித்திர விரிவுரையாளர் - கொட்டக்கலை அரசினர் ஆசிரியப் பயிற்சிக் கலாசாலை) இதில் கலந்துகொண்டமை சிறப்பாக அமைந்தது. ஆரம்ப நிகழ்வினைத் தொடர்ந்து, ஓவியக் கண்காட்சியைப் பாடசாலை மாணவர்கள் முதற்கொண்டு பலரும் பார்வையிட்டுச் சென்றதோடு, தமது வாழ்த்துக் களையும் பாராட்டுகளையும் விம்பம் அமைப்பினருக் குத் தெரிவித்துச் சென்றனர். ஓவியக் கண்காட்சியின் இரண்டாம் நாள் நிகழ்வாக, போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு மிகக் கோலாகலமாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சியை தரம்படத் தொகுத்து திருமதி ரஜினி சத்தியசீலன் நிகழ்ச்சிக்கு மேலும் மெருகூட்டினார். பரிசளிப்பு நிகழ்வினைத் தொடர்ந்து, ஆய்வாளர் பி. ஏ. காதரின் ‘இருபதாம் நூற்றாண்டின் நவீன அடிமைத்தனம்’ மற்றும், ‘மலையகத் தமிழ் மக்களின் மறக்கப்பட்ட



பக்கங்கள்’ எனும் இரு நூல்களின் அறிமுகமும் விமர்ச னமும் நடைபெற்றன. இந்நிகழ்வில் கலாநிதி ஆர். ரமேஸ், பேராசிரியர் எஸ். விஜயசந்திரன், விரிவுரை யாளர் எம். அகிலன், கல்வியியலாளர் கிங்ஸ்லி கோமஸ் ஆகியோர் உரையாற்றினர். இன்னும் பல கல்விமான் களும் கலந்துகொண்டு விழாவினைச் சிறப்பித்தனர். அத்தோடு, ‘விம்பம்’ ஏற்பாட்டுக் குழுவினரால் ‘மலை யகம் 200’ தொடர்பான கையேடுகளும் விநியோ கிக்கப்பட்டன.

மலையக மக்களின் சமூக பொருளாதார அரசியல் வரலாறு, மலர் தூவிய பாதையில் மென்னடை பயின்ற தல்ல. மாறாக, கல்லும் முள்ளும் நிறைந்த பாதையில் ஒவ்வோரடியும் போராட்டத்தினூடாக, செயல் முனைப்போடு முன்னெடுத்துச் செல்லப்படவேண்டிய ஒன்றாகும் என்பதைக் கருத்திற்கொண்டு, கடல் கடந்து இயங்கும் ‘விம்பம்’ அமைப்பினர், இருண்ட இதிகாச மாக உலகம் முழுவதும் கேட்கும் மலையக மக்களின் 200 வருட வாழ்க்கையினை நினைவுகூர்ந்து, இவ்வாறன தொரு நிகழ்வை ஏற்பாடு செய்தமை பாராட்டத்தக் கதாகும். வெறும் வாய்வார்த் தைகளால் மட்டும் மலையக மக்களைப் பற்றிப் பேசுவோரது மத்தியில், மலையக மக்களுக்கு ஆதரவாக மலையக மக்களைப் பற்றி ஓவியங்கள் மூலம் பேசவைத்த முயற்சி போற்று வதற்குரியது. தொடர்ந்து இவ்வாறு கொடுக்கும் அழுத்தமானது, மலையக மக்களின் வளர்ச்சியில் ஒரு பாரிய பாய்ச்ச லைக் காணக்கூடியதான சூழலை உருவாக்க வழிவகுக்கும் என்ற எதிர்பார்ப்போடு, லண் டன் ‘விம்பம்’ அமைப்பினருக்கு இலங்கை வாழ் மலையக மக்களின் சார்பாக நன்றிக ளையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதோடு, இவ்வாறான நிகழ்வுகள் தொடர்ந்து நடை பெறவேண்டுமெனவும் பிரார்த்திப்போம்.





# அநுரா குமாரவின் தேசிய விடுதலை இயக்கமும் தேசிய இனப்பிரச்சினையும்



வீரகத்தி தனபாலசிங்கம்

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரா குமார திசாநாயக்க தற்போது தேசிய விடுதலை இயக்கம் ஒன்றின் அவசியம் குறித்து பேச ஆரம்பித்திருக்கிறார். இந்தியாவின் 'இந்து" ஆங்கிலப் பத்திரிகையின் கொழும்பு செய்தியாளர் மீரா சிறினிவாசனுக்கு கடந்த வாரம் வழங்கிய நீண்ட நேர்காணலில் அந்த தேசிய விடுதலை இயக்கம் குறித்து அவர் விளக்கிக் கூறியிருக்கிறார்.

தேசிய விடுதலை இயக்கம் குறித்து பேசுகிறீர்களே.... நாட்டை எதனிடமிருந்து விடுவிக்கப் போகிறீர்கள் என்று செய்தியாளர் தொடக்கத்திலேயே திசாநாயக்கவிடம் கேட்டுவிடுகிறார். ஊழல்தனமான அரசியல் கலாசாரத்தில் இருந்து நாடு விடுதலை பெறவேண்டும். 75 வருடகாலமாக நாட்டை பாழ்படுத்திவந்த ஊழல்தனமான உயர்வர்க்க அரசியல் தலைமைத்துவத்திடம் இருந்து நாட்டை விடுவிப்பதே முதலில் செய்யவேண்டிய பணி என்பதே அவரின் பதிலாக இருந்தது.

அபிவிருத்தியடைந்த நாடுகளை நோக்கும்போது அவற்றின் முன்னேற்றம் பெருமளவுக்கு தேசிய விடுதலைப் போராட்டத்துடன் இணைந்ததாக இருந்ததாக அமெரிக்கா மற்றும் இந்தியாவை உதாரணம் காட்டிய திசாநாயக்க, இலங்கையில் தேசிய விடுதலை இயக்கம் ஒன்று இருந்ததில்லை. பிரிட்டிஷ் காலனியாதிக்கவாதிகள் நாட்டை ஆட்சிசெய்த வேளையிலும் அவர்கள் நாட்டைவிட்டு வெளியேறிய பின்னரும் தேசிய விடுதலை இயக்கம் ஒன்றைக் கட்டியெழுப்புவதற்கு கிடைத்த இரு சந்தர்ப்பங்களை எமது அன்றைய தலைவர்கள் தவறவிட்டுவிட்டார்கள் அத்தகைய இயக்கத்தைக் கட்டியெழுப்ப தற்போது கிடைத்திருக்கும் மூன்றாவது சந்தர்ப்பத்தை பயன்படுத்தி ஊழல்தனமான அரசியல் ஆளும் வர்க்கத்தை தோற்கடிப்பதற்கு சகல சமூகங்களையும் வடக்கையும் கிழக்கையும் தெற்கையும் ஐக்கியப் படுத்தவேண்டும் என்று அழைப்புவிடுக்கிறார்.

இலங்கையின் சமூக,பொருளாதார மற்றும் அரசியல் யதார்த்தங்களை நோக்கும்போது நாட்டுக்கு தேவைப்படுவது சமூக மாற்றமே என்பது தெளிவாகிறது. மக்கள் இன்று வேண்டிநிற்கும் முறைமை மாற்றத்துக்கு (System change) ஓர் அரசியல் கட்சி அல்ல, தேசிய விடுதலை இயக்கமே தேவை என்றும் அதை நிறைவுசெய்வதற்கே தாங்கள் முயற்சிப்பதாக தெரிவித்த திசாநாயக்க ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) தங்களது கட்சி, ஆனால் தேசிய மக்கள் சக்தி தங்களது தேசிய இயக்கம் என்று விளக்கம் கொடுத்தார்.

ஜே.வி.பி. தலைமையில் இருபத்தைந்துக்கும் அதிகமான வேறு கட்சிகள், குழுக்கள், தொழிற் சங்கங்கள், பெண்கள் உரிமைகள் அமைப்புக்கள் மற்றும் இளைஞர் அமைப்புக்களை ஒன்றிணைத்து சில வருடங்களுக்கு முன்னர் அமைக்கப்பட்ட தேசிய மக்கள் சக்தியே அவரின் சிந்தனையில் உள்ள தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கப்போகும் தேசிய இயக்கம் என்பதை புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கிறது.

தங்களது கட்சி கோட்பாட்டு அடிப்படையில் சமூக மாற்றத்துக்கான வெகுஜன இயக்கம் ஒன்றை கட்டியெழுப்பவேண்டிய தேவையில் ஆரம்பம் முதலிருந்தே நம்பிக்கை கொண்டிருந்தபோதிலும், அத்தகைய இயக்கத்தை கட்டியெழுப்ப முடியாமல் போய்விட்டதாகவும் தங்களால் இப்போது வலிமையான வெகுஜன இயக்கம் ஒன்றை கட்டியெழுப்பக் கூடியதாக இருப்பது குறித்து திருப்தியடைவதாகவும் குறிப்பிட்ட அவர் தங்களது தேசிய விடுதலை இயக்கத்தில் இணையுமாறு வடக்கில் உள்ள மக்களுக்கு அழைப்பு விடுத்திருக்கிறார்.

'முன்னைய தென்னிலங்கை அரசியல் தலைவர்கள் வடக்கு மக்களை 'மற்றையவர்களாகவே" நோக்கினார்கள். நாங்கள் அவர்களை அவ்வாறு 'மற்றையவர்களாக" பார்க்கவில்லை. அதனால் எமது இயக்கத்தின் இயல்பான ஓர் அங்கமாக இருக்குமாறு வடக்கு மக்களைக் கேட்கிறோம். எமது அரசியல் பணியின் பெரும்பகுதி சிங்கள மக்கள் மத்தியில்தான் இடம்பெறுகிறது. அது எமது விருப்பம் இல்லை என்றாலும் உண்மை அதுதான். எமது புதிய தேசிய இயக்கத்தில் சகல சமூகங்களும் பங்கேற்க அனுமதிக்கவேண்டும்" என்று அவர் கூறுகிறார்.

இலங்கையின் உள்நாட்டுப்போர் முடிவுக்கு வந்து அடுத்த வருடத்துடன் 15 வருடங்கள் நிறைவடையப் போகிறது. அரசியல் தீர்வு இன்னமும் காணப்படவில்லை. தற்போது இடம்பெற்றுக்கொண்டிருக்கும் நில அபகரிப்புகள் குறித்து தமிழ் மக்கள் பெரும் கவலை கொண்டுள்ளார்கள். இறந்தவர்களை நினைவுகூருவதற்கு அவர்கள் அனுமதிக்கப் படுவதில்லை. சித்திரவதை மற்றும் தடுப்புக்காவல் மரணங்கள் குறித்தும் செய்திகள் வருகின்றன. அதிகாரத்துக்கு வரும் நோக்கத்துடன் தேசிய இயக்கம் ஒன்றை கட்டியெழுப்பும் நீங்கள் தமிழ் மக்களுக்கு என்ன கூறுகிறீர்கள் என்று அவரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.



> பொருளாதாரப் பிரச்னை உட்பட நாடு எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தங்களது முன்னைய நிலைப்பாடுகளில் இருந்து மாறுபட்ட முறையில் தீர்வுகளை முன்வைக்கும் அநுரா குமார திசாநாயக்கவும் அவரது தோழர்களும் இனப்பிரச்சினையில் மாத்திரம் புதிய நிலைப்பாட்டை எடுப்பதற்கு தயங்குவது துரதிர்ஷ்டவசமானது.

'இலங்கையில் இருந்த பிரச்சினை போர் அல்ல. பிரச்சினை ஒரு போரின் வடிவத்தை எடுத்தது. போர் முடிவுக்கு வந்தபோதிலும் தேசியப் பிரச்சினை தொடருகிறது. தமிழ், முஸ்லிம் மக்களைப் பொறுத்தவரை அவர்களது மொழியுரிமைகள், கலாசார விவகாரங்கள் மற்றும் ஆட்சிமுறையில் பங்கேற்பது தொடர்பில் பிரச்சினைகள் இருப்பதை நாம் ஏற்றுக்கொள்கிறோம். இந்த பிரச்சினைகளுக்கு நாம் தீர்வுகளை நாம் காணவேண்டும்.

'இலங்கையில் இடம்பெற்றது ஒரு உள்நாட்டுப் போர். ஒரு நாடு இன்னொரு நாட்டைத் தோற்கடிக்கவில்லை. நடந்துமுடிந்தது ஒரு பெரும் அழிசெயல். அதை ஒரு 'போர் வெற்றியாக' குதூகலிக்க வேண்டும் என்றோ போரின் இறுதிநாளான மே 19 ஆம் திகதியை கொண்டாடவேண்டும் என்றோ நாம் நினைக்கவில்லை. போரில் இறந்த தங்கள் உறவுகளை நினைவுகூருவதற்கு ஒவ்வொருவருக்கும் உரிமை இருக்கிறது. போரில் பலியானவர்களை நினைவுகூருவதற்கு பொதுவான திகதியொன்றை நிர்ணயிக்க முடியுமானால் அது சிறப்பானது.

'மறுபுறத்தில், வடக்கில் மாத்திரமல்ல, தெற்கிலும் கூட நினைவுகூரல் அர்த்தத்தை இழந்துபோயிருக்கிறது. சிலருக்கு அது அரசியல் செயற்திட்டமாகி விட்டது. வடக்கில் உள்ள மக்கள் இறந்தவர்களை நினைவுகூரும்போது தெற்கில் உள்ள சிலர் அதை குழப்பவேண்டும் என்று விரும்புகிறார்கள். அது ஒரு வகையான விளையாட்டாக மாறிவிட்டது" என்று அவர் பதிலளித்தார்.

ஊழல்தனமான உயர்வர்க்க அரசியல் அதிகார வர்க்கத்தை தோற்கடிக்கக்கூடிய ஒரு தேசிய விடுதலை இயக்கத்தின் மூலமாக நாட்டில் சமூக மாற்றத்தை ஏற்படுத்தி அதன் வழியாக இனப்பிரச்சினை உட்பட சகல பிரச்சினைகளுக்கும் தீர்வுகளை காண்பதே தேசிய மக்கள் சக்தியின் இலட்சியம் என்பதே திசாநாயக்க இந்த நேர்காணலின் மூலமாக கூறும் செய்தியாகும்.

சகல சமூகங்களையும் ஒன்றிணைத்து முன்னெடுக்கப்படக் கூடிய தேசிய போராட்டத்தின் மூலமாக பிரச்சினைகளுக்கு தீர்வுகளைக் காண்பது என்பது அடிப்படையில் ஒன்றும் புதிய அணுகுமுறை அல்ல. பழைய இடதுசாரிக் கட்சிகள் கடந்த நூற்றாண்டின் முற்பகுதியில் இருந்து முன்வைத்து இறுதிவரை சாத்தியமாகாமல் போன அணுகுமுறைதான் அது. அதன் தோல்விக்கு காரணம் இனவாத அரசியல் என்பது வரலாறு தந்த பாடம்.

பழைய இடதுசாரி தலைவர்கள் தேசிய ரீதியான தொழிலாளர் வர்க்கப்புரட்சி ஒன்றின் மூலமாக உருவாக்கப்படக்கூடிய சோசலிச சமுதாயம் ஒன்றில் இனப்பிரச்சினை இல்லாமல் போய்விடும் என்று கூறிய காலம் ஒன்றும் இருந்தது.

தேசிய இயக்கத்தில் இணையுமாறு தமிழ் மக்களுக்கு திசாநாயக்க விடுக்கும் அழைப்பை தேசிய இனப்பிரச்சினையையும் தங்களது நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளையும் இதுகாலவரையில் அவரது கட்சி எவ்வாறு அணுகிவந்திருக்கிறது என்பதை கருத்திற் கொண்டுதான் அவர்கள் நிச்சயம் நோக்குவார்கள். அது தவிர்க்கமுடியாதது.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பதை நோக்கிய இதுகாலவரையான சகல முயற்சிகளையும் எதிர்த்துவந்த எதிர்மறையான வரலாற்றை ஜே.வி.பி. கொண்டிருக்கிறது. போரை முழுவீச்சில் முன்னெடுப்பதற்கு ராஜபக்ச அரசாங்கத்துக்கு முழுமையான ஆதரவையும் அது வழங்கியது.

ஆனால், தங்களது கட்சியின் கடந்த கால அரசியலை அடிப்படையாக வைத்து தங்களை தற்போது நோக்கவேண்டியதில்லை என்று கூறும் ஜே.வி.பி. தலைவர்கள் ஆட்சிக்கு வருவதற்கு உள்நாட்டில் மக்களை அணிதிரட்டுவது மாத்திரம் போதாது, சர்வதேச சமூகத்தின் குறிப்பாக அதன் வல்லாதிக்க நாடுகளின் ஆதரவும் ஒத்துழைப்பும் கூட அவசியம் என்பதை உணர்ந்தவர்களாக தங்களது நிலைப்பாடுகளில் பெரும் மாற்றங்களைச் செய்திருப்பதை காணக்கூடியதாக இருக்கிறது.

சோசலிசக் கட்சியொன்று அடிப்படைக் கோட்பாடுகளில் சமரசம் செய்துகொள்ளாமல் மாறிவரும் சூழ்நிலைகளுக்கு இசைவாக அதன் மூலோபாயங்களில் மாற்றங்களைச் செய்வது இயல்பானது என்று அவர்கள் தங்களது அண்மைக்கால மாற்றங்களை நியாயப் படுத்துகிறார்கள்.

இரு வாரங்களுக்கு முன்னர் அநுரா குமார திசாநாயக்க கொழும்பு ஆங்கில வாரப்பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் தேசிய மக்கள் சக்தி புதிய யுகத்துக்கு ஏற்றமுறையில் மாற்றம் கண்டுவிட்டது என்று கூறியிருந்தார்.

உலகில் 1900 கள் வரை சோசலிச முகாம் என்றும் முதலாளித்துவ முகாம் என்றும் இரு முகாம்கள் இருந்தன. நாம் சோசலிச முகாமைச் சேர்ந்தவர்களாக இருந்தோம். அதற்கு பிறகு உலக ஒழுங்கு அமெரிக்காவை மையப்படுத்தியதாக மாறியது. இப்போது சீனா, ரஷ்யா, இந்தியா மற்றும் ஐரோப்பா என்று வேறு அதிகார மையங்கள் வந்துவிட்டன. அதனால் நாமும் மாறவேண்டிய தேவை ஏற்பட்டது. கோட்பாட்டுக்கும் யதார்த்தங்களுக்கும் இடையில் வேறுபாடு இருக்கிறது என்று அவர் தெரிவித்தார்.

அமெரிக்காவினதும் மேற்குலக ஏகாதிபத்தி நாடுகளினதும் கட்டுப்பாட்டில் உள்ளவை என்று சர்வதேச நாணய நிதியம், உலக லங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற சர்வதேச நிதிநிறுவனங்களை நிராகரித்த தேசிய மக்கள் சக்தி இப்போது அவற்றுடன் இணைந்து செயற்படத்தயாராயிருக்கிறது. ஒரு காலத்தில் தனிச் சொத்துடைமையை ஒழிக்கும் கோட்பாட்டில் நம்பிக்கை கொண்டிருந்த அவர்கள் இப்போது தனியார் துறையுடன் (முதலாளித்துவ சக்திகள்) இணைந்து செயற்படுவதற்கும் வெளிநாட்டு முதலீடுகளை வரவேற்கவும் முன்வந்திருக்கிறார்கள்.

அண்மைக்காலமாக கொழும்பில் உள்ள மேற்குலக நாடுகளின் தூதுவர்களை அவர்கள் தொடர்ச்சியாக சந்தித்து தங்களது நிலைப்பாடுகளை விளக்கிக் கூறிவருகிறார்கள்.

இவ்வாறாக தங்களது முன்னைய பெரும்பாலான நிலைப்பாடுகளில் மாற்றங்களைச் செய்திருக்கும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர்கள் இனப்பிரச்சினை தொடர்பில் மாத்திரம் எந்த மாற்றத்தையும் செய்யமுன்வரவில்லை.

(14ஆம் பக்கம் பார்க்க)

# சந்தேகத்தை நீட்சிப்படுத்தும் இரண்டாம் உலகத் தமிழர் பேரவை

**பனங்காட்டான்**

இலங்கையில் தமிழர் பிரச்சனை தீர்க்கப்படுகிறதோ இல்லையோ, எப்போதும் ஏதாவது ஒரு புது விடயம் பேசுபொருளாகி, ஊடகங்களில் பரபரப்பான செய்தியாகி, சம்பந்தப்பட்டவர்களின் படங்கள் அங்குமிங்கும் பப்ளிசிட்டியாகி, பின்னர் எல்லாமே காணாமற் போய்விடுவது பழக்கப்பட்டுவிட்டது.

இந்தப் பட்டியலில் இப்போது காட்சி கொடுத்திருப்பது உலகத்தமிழர் பேரவை என்ற பெயரில் ஓர் அணி. இதனை ஓர் அமைப்பு என்றோ, மக்களால் தெரிவான குழு என்றோ சொல்ல முடியாது. பொழுதுபோக்குக்காக சிலர் கூட்டுச் சேர்ந்து ஒரு பயணத்தை தாங்களும் இருக்கிறோம் என்று காட்டுவதற்காக மேற்கொண்டுள்ளனர் என்றே சொல்லலாம்போலத் தோன்றுகிறது.

அதிலும் ஒரு வில்லங்கம் இருக்கிறது. ஒறிஜினல் உலகத் தமிழர் பேரவை என்பது 2009ல் முள்ளிவாய்க்காலில் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட பின்னர் புலம்பெயர் நாடுகளிலுள்ள பல தமிழர் அமைப்புகளைச் சேர்த்து உருவாக்கப்பட்ட ஒரு கூட்டமைப்பு.

அப்போது ஐரோப்பாவிலிருந்து செயற்பட்ட வண.பிதா இமானுவல் அடிகளார் எடுத்த முயற்சியின் பலனாக உருவான இந்தக் கூட்டமைப்புக்கு அவரே தலைமையும் தாங்கினார். அப்போது பிரித்தானிய தமிழர் பேரவையில் ஒருவராகவிருந்த சுரேன் சுரேந்திரன் என்பவர் இதன் பேச்சாளராக விளங்கினார்.

உலகத்தமிழர் பேரவை ஒருபுறம், நாடு கடந்த அரசாங்கம் இன்னொரு புறமென நொந்து போயிருந்த தாயகத் தமிழருக்காக பல காரியங்கள் ஒப்பேறப் போகின்றன என்று பலரும் நம்பியிருந்தனர். வண.பிதா இமானுவல் அடிகளார் ஓய்வு பெற்றதோடு உலகத் தமிழர் பேரவையும் மூடப்பட்டது. இதனுடன் சம்பந்தப்பட்டவர்கள் சிலர் அவ்வப்போது தலைகாட்டினராயினும் பின்னர் சமூகத்தின் பார்வையிலிருந்து விலகிப் போயினர். இந்தப் பின்னணியில் பார்க்கின் இப்போது வலம் வருகின்ற கூட்டத்தினரை, இரண்டாவது உலகத் தமிழர் பேரவை என்றே குறிப்பிட வேண்டும். அதுவே சரியும்கூட.

அதுமட்டுமன்றி இக்கூட்டத்தில் இடம்பெற்றிருப்பவர்கள் புலம்பெயர் நாடுகளிலிருந்து புதிய பேரவைக்கென மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் அல்ல. அல்லது அதிகாரபூர்வமாக அமைப்புகளைப் பிரதிநிதித்துவம் செய்பவர்களும் அல்ல. இவர்களை உதிரிகள் அல்லது சுயேட்சைகள் (சுய இச்சைகள்) என்றே சொல்ல வேண்டும்.

உதாரணத்துக்குக் குறிப்பிடுவதானால் இக்குழுவில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த அப்பாவும் மகனும் (சுரேன் சுரேந்திரனும் அவரது மகனும்) உள்ளனர். கணவனும் மனைவியுமாக ஒரு தம்பதியினர் இடம்பெற்றுள்ளனர். வட அமெரிக்காவிலுள்ள அமைப்பொன்றின் முன்னாள் தலைவரும் உள்ளார். இப்படித்தான் இரண்டாவது உலகத் தமிழர் பேரவை பிறப்பெடுத்து தமிழர் பிரச்னையை தீர்ப்பதற்கு கிளம்பியுள்ளது.



உலகளாவிய ரீதியில் கட்டமைப்புகளாக இயங்கும் தமிழர்களின் நேர்த்தியான அமைப்புகளை அவமதிக்கும் செயலாகவே இவர்களின் நடவடிக்கையை பலரும் பார்க்கின்றனர்.

இந்த இரண்டாம் உலகத் தமிழர் பேரவை இலங்கையிலுள்ள சில பௌத்த துறவிகளைப் பொறுக்கியெடுத்து - எந்த அடிப்படையில் என்று குறிப்பிட முடியாதவாறு, அவர்களின் கூட்டுக்கு 'சிறந்த இலங்கையருக்கான சங்க மன்றம்; என்று பெயர் சூட்டி, அவர்களையும் தங்களுக்குக் காவலர்களாக அணைத்துக் கொண்டு திரிகிறது.

**• நீங்கள் எல்லோரும் இங்கு வந்துள்ளீர்கள். உங்களை யாரென்று எங்களுக்குத் தெரியாது என்று ஆறு. திருமுருகன் கொடுத்த நெற்றியடி காலத்தின் அனுபவம்.**

**• இமயமலைப் பிரகடனத்துடன் ஜனாதிபதி ரணிலுக்கு தொடர்பில்லையென்று சுமந்திரனுக்கு எவ்வாறு தெரியும்?**

**• பேரவையின் தலைவர் சுரேன் சுரேந்திரன் அடிக்கடி கைத் தொலைபேசியில் 'சுமோ, சுமோ' என விளித்து உரையாடியது யாருடன்?**

புலம்பெயர்ந்த தமிழர்கள் தாங்கள் வாழும் நாடுகளில் தாயக உறவுகளின் வாழ்வுரிமைக்காகவும் போர்க்கால மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்புக் கூறலை வேண்டியும் ஜனநாயக ரீதியாக இயங்கி வருகின்றனர். முக்கியமாக, மக்களால் தெரிவான மக்கள் அவைகளைக் கூட்டிணைத்து ஒரே நேர்கோட்டில் தொழிற்பட்டு வருகின்றனர்.

இரண்டாவது உலகத் தமிழர் பேரவையின் தலைவரென அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் சுரேந்திரனை எப்போது எங்கே இப்பதவிக்கு யார் தெரிவு செய்தனர் என்பது எவருக்கும் தெரியாது. பிரித்தானியாவில் வசிக்கும் இவருக்கு உலகளாவிய தமிழ் தேசிய சபை 2010 ஜனவரியில் அங்கு நடத்திய சுதந்திர இறைமையுள்ள தமிழ் ஈழத்துக் கான கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பில் 99.3 வீதமானவர்கள் ஆதரவாக வாக்களித்தது தெரியாதிருக்க முடியாது.

இதே கருத்துக்கணிப்பு இத்தாலி, டென்மார்க், நெதர்லாந்து, சுவிட்ஸர்லாந்து, ஜேர்மனி, கனடா, பிரான்ஸ், நோர்வே, ஆஸ்திரேலிய நாடுகளிலும் சமகாலத்தில் நடத்தப்பட்டது. சகல நாடுகளிலும் 99 வீதத்துக்கும் கூடுதலானவர்கள் சுதந்திர இறைமையுள்ள தமிழீழத்தை வேண்டி வாக்களித்ததையும் சுரேன் சுரேந்திரன் மறந்திருக்க முடியாது.

தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை வலியுறுத்திய திம்புக் கோட்பாடும், வட்டுக்கோட்டைத் தீர்மானமும் பிரகடனம் செய்யப்பட்ட வரலாற்றை இலகுவாக தமிழின விரோதிகளாலும் மறக்க முடியாது.

இவைகளுக்கப்பால் தமிழரசுக் கட்சியின் ஒரு சிலரால் சொல்லப்பட்டு வந்த ஒருங்கிணைந்த - பிளவுபடாத இலங்கைக்குள் ஒரு தீர்வைக் காண்பதற்கு அதற்கென ஆறு அம்சத்தை உள்ளடக்கிய ஒரு வரைபைத் தயாரித்து அதற்கு 'இமயமலைப் பிரகடனம்; என்று பெயர் சூட்டியிருப்பது, இதுவரை ஈழத்தமிழர் நடத்திய அத்தனை விடுதலைப் போராட்டங்களையும் மலினப்படுத்தியுள்ளது.

இந்தப் பேரவையினர் சிறந்த இலங்கையின் சங்கம் என்ற பௌத்த துறவிகளையும் இணைத்துக் கொண்டு கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் பல சந்திப்புகளை இதுவரை நடத்தியுள்ளனர். ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாச, மகிந்த ராஜபக்ச, இரா.சம்பந்தன், ராவூப் ஹக்கீம், மனோ கணேசன் மற்றும் ஜே.வி.பி.தலைவர்கள் உட்பட பலரை சந்தித்து இமயமலைப் பிரகடன பிரதிகளை வழங்கியுள்ளனர். அனைவரும் அதனைப் பெற்றுள்ளனர். சிலர் ஆசிர்வதித்துள்ளனர். சிலர் ஆலோசனை கூறியுள்ளனர். இவர்களுள் இருவர் வழங்கிய ஆலோசனைகள் கூர்மையான அவதானிப்புக்குரியவை.

உலகத் தமிழர் பேரவை என்ற பெயரை இலங்கையர் பேரவை என்று மாற்ற வேண்டுமென சஜித் பிரேமதாச ஆலோசனை கூறியுள்ளாராம். அதாவது தமிழர் என்ற பெயரே தமிழர்கள் அங்கம் வகிக்கும் அமைப்புக்கு இருக்கக்கூடாது என்பதில் எதிர்கால ஜனாதிபதியாக வர விரும்பும் சஜித் பிரேமதாச அக்கறையாக உள்ளார்.

சிங்கள பௌத்த நாடு என்ற சிந்தனையும், தமிழருக்கு மட்டுமே தனித்தமிழ் நாடு என்ற சிந்தனையும் மாற வேண்டுமென்று மனோ கணேசன் பௌத்த துறவிகள் முன்னால் பேரவையினருக்கு தம்ம போதனை வழங்கியுள்ளார். இவரது கூற்றின் உண்மையான அர்த்தம் என்ன என்பது சரியாகப் புரியவில்லை.

மற்றொரு முக்கியமான கருத்தை மகாநாயக்கர்களும், கத்தோலிக்க பேராயர் மல்கம் றஞ்சித்தும் தெரிவித்ததாக சுரேன் சுரேந்திரன் கூறி வருகிறார். நெருக்கடியான காலத்தில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை சந்திப்பதற்கு பல தடவை தாம் கேட்டதாகவும், அதற்கு அனுமதி வழங்கப்படவில்லையெனவும் மகாநாயக்கர்கள் தெரிவித்தனராம்.

அதுபோன்று பேராயர் மல்கம் றஞ்சித்தும் விடுதலைப் புலிகளின் தலைவரை சந்திக்க விரும்பியதாகவும், மன்னார் ஆயராகவிருந்த ராயப்பு யோசப் ஆண்டகையுடன் இதுபற்றிப் பேசியதாகவும், அந்த விருப்பம் கைகூடவில்லையெனவும் அவர் தெரிவித்திருந்தாராம்.

மகாநாயக்கர்களும் பேராயரும் காலம் கடந்து தெரிவிக்கும் இந்த விடயங்களின் நம்பகத்தன்மைக்கு உத்தரவாதம் இல்லை. உண்மையிலேயே இவர்கள் அந்த எண்ணம் கொண்டவர்களாக இருந்திருப்பின் ஏதாவது ஒரு வகையில் அப்போது தங்கள் விருப்பத்தை வெளிப்படுத்தியிருக்க முடியும். மாறாக யுத்தத்தை முன்னெடுப்பதற்கு ஆதரவு வழங்கியவர்கள் இவர்கள்.

நவாலி தேவாலயத்தில் குண்டு வீச்சின் போது கொல்லப்பட்ட அப்பாவி மக்களுக்காக, குழந்தைகளுக்காக மனமிரங்கி ஒரு வார்த்தைகூட அனுதாபம் தெரிவிக்காத பேராயர் விடுதலைப் புலிகளின் தலைமையை சந்திக்க விரும்பினார் என்றால் யார் நம்புவார்? யுத்தமுனைக்குச் சென்ற படைத்துறை தலைமைகளுக்கு நூல் கட்டி ஆசி வழங்கிய மகாநாயக்கர்கள் இப்போது விரும்பினால் எதனையும் கூறலாம்.

ஆனால், இவர்கள் கூறுவதை தாயகத் தமிழர்கள் நம்ப வேண்டுமென்பதற்காக அவர்களிடம் இலகுவாக விற்பனை செய்யும் முயற்சியில் இறங்கியுள்ளனர் இரண்டாம் உலகத் தமிழர் பேரவையினர். இந்தப் புருடாக்களை நம்புவதற்கு தமிழர்கள் இனியும் தயாரில்லை என்பதை தெரியப்படுத்தும் வகையில் நெற்றிக்கு நேராக எடுத்துக் கூறியுள்ளார் தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயத் தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன். நல்லை ஆதீனத்தில் இவர்களுடன் நடந்த சந்திப்பில் அவர் எடுத்துக் கூறியது இதுதான்:

"இன்று நீங்கள் எல்லோரும் இங்கு வந்திருக்கிறீர்கள். நீங்கள் யார் என்று எங்களுக்குத் தெரியவில்லை. உங்களைப் போல் பலர் இங்கே வருகை தந்து சந்திப்புகளை மேற்கொள்கிறார்கள். ஆனால் எந்தத் தீர்வோ எந்த முடிவோ எட்டப்படவில்லை" என்ற ஆறு. திருமுருகனின் நெற்றிக்கு நேரான கருத்துக்கு அங்கு போனவர்களிடம் எந்தப் பதிலுமில்லை.

ஆனால், இவர்கள் யார், ஏன் உருவாக்கப்பட்டார்கள், எவருடைய ஆலோசனையில் இயங்குகிறார்கள் என்பது ஓரளவுக்கு தெரிய வந்துள்ளது.

சுரேன் சுரேந்திரன் அவரது குழுவின் ஒவ்வொரு விடயத்தையும் கைத்தொலைபேசி வழியாக உடனுக்குடன் ஒருவருக்கு தெரிவித்து வருவதாகவும், அவரை "சுமோ, சுமோ" என்று விளித்து உரையாடியதாகவும் அக்குழுவில் அங்கம் வகிப்பவர்கள் கூறி வருகின்றனர். யார் அந்த சுமோ?

அதேவேளை, இமயமலைப் பிரகடனத்துக்கும் தமக்கும் ஜனாதிபதி ரணிலுக்கும் எந்தத் தொடர்பும் கிடையாதென தமிழரசுக் கட்சியின் பேச்சாளர் சுமந்திரன் தெரிவித்திருப்பது, எங்கப்பன் குதிருக்குள் இல்லையென்பதையே நினைவுபடுத்துகிறது.

ஒரு சந்தேகம் - தனக்குச் சம்பந்தமில்லையென்று சுமந்திரன் சொல்லலாம். ஆனால், ரணிலுக்குச் சம்பந்தமில்லையென்று எவ்வாறு கூற முடியும்? மலிந்தால் எல்லாம் சந்திக்கு வரும்.

•



# இஸ்ரேல் - பலஸ்தீன மோதலுக்கு இறுதித் தீர்வுதான் என்ன?

சின்மயா கரேகான்



எல்லாப் போர்களுக்கும் முடிவு உண்டு. இஸ்ரேல்-ஹமாஸ் போரும் கூட முடிவுக்கு வந்துவிடும். எப்போது, எப்படி என்பதுதான் இன்னும் தீர்மானிக்கப்படவில்லை. ஆனால், போர் விரைவில் முடிவுக்கு வந்தாக வேண்டியது அவசியம். ஹமாஸ் கட்டுப்பாட்டில் உள்ள காசா பகுதியில் வசித்துவந்த 23 லட்சம் பேரில், 13 லட்சம் பேர் - மக்கள் தொகையில் ஏறத்தாழ பாதி - இடம் பெயர்ந்துவிட்டதாகவும், மொத்தம் உள்ள வீடுகளில் ஏறத்தாழப் பாதி வீடுகள் சேதமடைந்திருக்கின்றன அல்லது உருக்குலைக்கப்பட்டிருக்கின்றன என்றும் ஐ.நா. அவை தெரிவித்திருக்கிறது. பொதுவாகவே, ஒரு போரின் மூலம் இரு தரப்புக்கும் ஏதேனும் பலன்கள் கிடைத்தாக வேண்டும். இஸ்ரேல் - ஹமாஸ் இடையிலான போர் அப்படியான சூழலில்தான் முடிவுக்கு வரும் எனத் தெரிகிறது.

ராணுவ ரீதியாக இஸ்ரேல் வென்றுவிடும். அதில் சந்தேகமே இல்லை. ஆனால், மேற்குக் கரைப் பகுதி உள்பட வாழும் அரபு மக்களின் மகத்தான ஆதரவை ஹமாஸ் வென்றெடுக்கும் என்றே தெரிகிறது. 30 ஆண்டுகளாக மேற்குக் கரையை ஆட்சி செய்துவரும் பாலஸ்தீன அரசு, பெருமளவில் செல்வாக்கை இழந்திருப்பதுடன் ஊழல் மலிந்ததாகவும் ஆகிவிட்டது. இதுவரை இல்லாத அளவுக்கு இஸ்ரேலின் நம்பிக்கையைப் பெற்றவரும், மிகுந்த மிதவாதத்தன்மை கொண்ட பாலஸ்தீனத் தலைவருமான அதிபர் மஹ்மூத் அப்பாஸ், மேற்குக் கரையில் ஒரு பாலஸ்தீன அரசை நிறுவுவதற்கான பணிகளில் முற்றிலுமாகத் தோல்வியடைந்திருக்கிறார். 'பயங்கரவாதி'களை வேட்டையாடுவதில் இஸ்ரேலுடன் இணைந்து அவர் செயல்படுவதாகவே தெரிகிறது. அமைதி முயற்சி என்றைக்கோ மரித்துவிட்டது.

**தவறாகப் பயன்படுத்தப்படும் தற்காப்பு ஆயுதம்**

2023 அக்டோபர் 7 அன்று இஸ்ரேல் மீது ஹமாஸ் நடத்திய தாக்குதல் உள்ளபடியே கண்டிக்கத்தக்கதும் வெறுப்புக்குரியதும் ஆகும் எனக் கூறியிருக்கும் ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டர்ஸ், இந்தத் தாக்குதல் காரணமின்றி நிகழ்ந்ததல்ல என்பதையும் சர்வதேசச் சமுதாயத்துக்கு நினைவூட்டியிருக்கிறார். ஐ.நா. சாசனத்தின் 51ஆவது கூறின் கீழ், தற்காப்புக்கான உரிமையை இஸ்ரேல் கைக்கொண்டுவிட்டது. ஆனால், தற்காப்பு எனும் பெயரில் நடவடிக்கை எடுத்த பின்னர், சம்பந்தப்பட்ட அரசு, அந்நடவடிக்கைகள் குறித்து ஐ.நா. பாதுகாப்பு மன்றத்தில் அறிக்கை அளித்தாக வேண்டும்.

ஆனால், இஸ்ரேல் விஷயத்தில் அது இதுவரை நடக்கவில்லை என்றே தெரிகிறது. எந்த வகையில் பார்த்தாலும், தற்காப்பு என்னும் பெயரில் சமமற்ற அல்லது பாரபட்சமான வகையில் ராணுவத்தைப் பயன்படுத்த எந்த ஓர் அரசும் அனுமதிக்கப்படவில்லை.

இஸ்ரேலின் இந்தத் தாக்குதலில் காசாவின் இறப்புகளின் எண்ணிக்கை ஏறத்தாழ 15,000 ஆகும். இறந்தவர்களில் பெரும்பாலானோர் பெண்களும் குழந்தைகளும்தான். இந்த நூற்றாண்டில் இதற்கு மிகச் சில முன்னுதாரணங்களே இருக்கின்றன. தற்காப்பு தொடர்பாக நிலவும் வழக்கநெறிச் சட்டங்களை அப்பட்டமாக மீறிய செயல் இது. இந்தப் போரில் இஸ்ரேலுக்கு ஹமாஸ் அடிபணிந்துவிட்ட பின்னர் என்ன நடக்கும் என்பதுதான் இதில் மிக முக்கியமான, கவலைக்குரிய பிரச்சினை. ஹமாஸின் இடத்தை இட்டு நிரப்பப்போவது எது? சாதகமான சூழல் உருவானதும், ரமல்லா நகரை மையமாகக் கொண்டு இயங்கும் பாலஸ்தீன அரசானது, காசா பகுதியின் நிர்வாகத்தைக் கையில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று அமெரிக்க அதிபர் ஜோ பைடன் உள்ளிட்ட சிலர் யோசனை தெரிவிக்கின்றனர்.

காசாவை மறுகட்டமைக்கும் பணிகளுக்காக நிதி வழங்குமாறு 'பணக்கார அரபு நாடுகள்' என ஊடகங்களால் குறிப்பிடப்படும் நாடுகளுக்கு வேண்டுகோள் விடுக்கப்படும். ஆனால், மஹ்மூத் அப்பாஸ் தலைமையிலான அரசு, காசாவில் மட்டுமல்லாது வேறு எங்குமே ஆட்சி நடத்துவதைப் பாலஸ்தீனர்கள் விரும்பவில்லை என்பதுதான் இதில் இருக்கும் ஒரே பிரச்சினை. நிலைமை சீரான பின்னர், சர்வதேசக் கண்காணிப்பில் காசாவிலும் மேற்குக் கரையிலும் புதிதாகத் தேர்தல் நடத்துவதுதான் ஒரே தெரிவு. இஸ்ரேல் - பாலஸ்தீனத்தின் பாதுகாப்பை உறுதிசெய்ய அவற்றின் எல்லையில் ஓர் அமைதிப் படையை ஐ.நா. நிறுத்திவைக்க வேண்டும். காசாவை முடக்கியிருக்கும் தடைகள் முற்றிலுமாக நீக்கப்பட வேண்டும். இஸ்ரேல் ஐ.நாவை விரும்புவதில்லை. ஐ.நா. பொதுச் செயலாளரையோ கொஞ்சம்கூட விரும்புவதில்லை. இத்தனைக்கும், இஸ்ரேல் உருவெடுக்க உதவியதும், ஆரம்பகட்டத்தில் அதற்குச் சட்டபூர்வ அங்கீகாரம் வழங்கியதும் ஐ.நா. அவைதான் என்பதை நினைவுகூர்வது அவசியம். இவ்விஷயத்தில், ஐ.நா. பாதுகாப்பு மன்றத்தில் அமெரிக்கா முன்னணியில் நின்று செயல்படவேண்டும்.



**'இரண்டு நாடுகள்' தீர்வு**

இதற்கிடையே, இஸ்ரேலையும் பாலஸ்தீனத்தையும் இரண்டு தனித்தனி நாடுகளாக அங்கீகரிப்பது தொடர்பாக நீண்ட காலமாக வலியுறுத்தப்பட்டு வரும் 'இரண்டு நாடுகள் தீர்வு' குறித்த பேச்சு இப்போது மீண்டும் உயிர்பெற்றிருக்கிறது. எல்லோருமே அந்த மந்திரத்தை மீண்டும் உச்சரிக்கத் தொடங்கியிருக்கிறார்கள். ஆனால், இன்றைய சூழலில்அந்தக் கருத்தாக்கத்தின் சாத்தியக்கூறுகள் யாவை? பாலஸ்தீனம் என்பது மேற்குக் கரையை மையமாகக் கொண்டது என 1993 ஆஸ்லோ ஒப்பந்தம் கருதியது. இன்றைக்கோ, மேற்குக் கரையில் இஸ்ரேலியக் குடியேறிகளின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்திருக்கிறது. சமீபத்திய கணக்கெடுப்பில் அந்த எண்ணிக்கை 4.50 லட்சம் எனத் தெரியவந்திருக்கிறது. எந்த ஒரு இஸ்ரேல் அரசாலும், அங்கிருந்து திரும்பிச் செல்லுமாறு குடியேறிகளை வலியுறுத்த இயலாது.

அதற்கு ராணுவரீதியிலான அழுத்தம் தேவைப்படும். அந்த நிலப் பகுதி தற்போது நன்கு திட்டமிடப்பட்ட எண்ணற்ற யூதக் குடியிருப்புகளையும் சாலைகளையும் கொண்டுள்ளது. இஸ்ரேலின் தற்போதைய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹூ, பாலஸ்தீனம் என்று ஒரு நாடு உருவாவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டார். நிலைமை சீரானதும், 'இரண்டு நாடுகள்' பரிந்துரையில், எவையெல்லாம் சாத்தியமானவை, எவை சாத்தியமற்றவை என்பதைக் கண்டறிவதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்படுவது அவசியம். இரு தரப்புக்கும் இடையே, நிலப் பகிர்வு உள்ளிட்ட வலிமிகுந்த சமரசங்கள் தேவை. மேலும், இரு தரப்பும் தங்கள் உறுதிமொழிகளை முறையாகக் கடைப்பிடிக்கின்றனவா என்பதைக் கண்காணிக்கும் அமைப்பு ஒன்றும் ஏற்படுத்தப்பட வேண்டும்.

**அமைதிக்கான இறுதி வழி**

மேற்குக் கரையில் தனது ஆக்கிரமிப்பைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, பாலஸ்தீன அரசு உருவாக வழிவகுப்பது இஸ்ரேல் முன் இருக்கும் நிரந்தரமான தீர்வு. இஸ்ரேல் தனது மக்களின் பாதுகாப்பு குறித்த நியாயமான அக்கறையை உறுதிசெய்வதற்கு, புதிய தேசமானது ராணுவமயமற்றதாக இருத்தல் அவசியம். இஸ்ரேலியர்கள் தங்கள் பாதுகாப்பை உறுதிசெய்துகொள்ள வேறு வழிகளைப் பரிசீலிக்க வேண்டும். இஸ்ரேல் அருகில் உள்ள அரபு நாடுகளும் இந்தப் பணியில் பங்கெடுத்துக்கொள்ள வேண்டும்.

ஆப்ரஹாம் ஒப்பந்தம் (இஸ்ரேல், ஐக்கிய அரபு அமீரகம், பஹ்ரைன் ஆகிய நாடுகளுக்கு இடையில் 2020இல் கையெழுத்தானது) இதற்கு ஓர் அடித்தளத்தை வழங்கும். மத்தியக் கிழக்குப் பிராந்தியத்தில் தனது அரபு அண்டை நாடுகளுடன் இணக்கமாக வாழ வேண்டும் என இஸ்ரேல் கருதினால், இதுதான் ஒரே வழி. அது நடந்துவிட்டால், இஸ்ரேலுக்கு எதிரான தனது கோபத்துக்காக முன்வைத்துவரும் தர்க்க நியாயத்தை ஈரான் இழந்துவிடும். அதேபோல, ஹெஸ்புல்லா அமைப்பும், இஸ்ரேலை அச்சுறுத்துவதற்கான தனது முக்கியமான வாதத்தை இழக்கும்.

பல தசாப்தங்களாக, மரணம், அழிவு, துயரம் எனும் முடிவிலா வட்டத்துக்குள் சிக்கியிருக்கின்றன இஸ்ரேல்-பாலஸ்தீன உறவுகள். தற்போது காசாவில் நடைபெற்றுவரும் போர், இவ்வட்டத்தின் சமீபத்திய சுற்று. இதுவே கடைசியாக இருக்க வேண்டும். மத்தியக் கிழக்குப் பிராந்தியம் அப்போதுதான் நிலையான அமைதியையும் பாதுகாப்பையும் அனுபவிக்க முடியும்.

**(சின்மயா கரேகான்: ஐ.நா.வுக்கான இந்தியத் தூதராகவும், மத்தியக் கிழக்குப் பிராந்தியத்துக்கான இந்தியாவின் சிறப்புத் தூதராகவும் பணியாற்றியவர். கார்ல் எஃப். இண்டர் ஃபர்த் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலுக்கான அமெரிக்காவின் துணைத் தூதராகவும், தெற்காசியாவுக்கான அமெரிக்க வெளியுறவுத் துறை உதவிச் செயலாளராகவும் பணியாற்றியவர்.)**



# ஈழத் தமிழ் அரசியலில் இரகசிய சமூகங்கள் உண்மையும் கற்பனையும்?




யதீந்திரா


ஈழத் தமிழர் அரசியலில் உளவுத்துறை என்னும் சொல் எப்போது அறிமுகமானது? தமிழர் ஆயுத அரசியல் தமிழ் சமூகத்திற்கு அறிமுகம் செய்த சொற்களில் உளவுத்துறையும் ஒன்று. இதே போன்று துரோகி, ஒட்டுக்குழு, முகவர்கள், கூலிப்படை என்னும் பல சொற்களுண்டு. தமிழரசு கட்சி - பின்னர், தமிழர் விடுதலைக் கூட்டணியின் காலத்தில், இப்படியான சொல் புழக்கத்தில் இருக்கவில்லை. அன்றைய சூழலில், இலங்கையின் உளவுத் துறை கூட வளர்சியடைந்த நிலையில் இருக்கவில்லை. தமிழ் ஆயுத இயக்கங்கள் அனைத்தும் தங்களின் ஆயுதபலத்தையும், ஆற்றலையும் பெருக்கிக் கொள்வதற்காக தங்களுக்குள் போட்டி போட்டுக் கொண்டன. அதற்காக ஒவ்வொருவரும் முகவர்களை தேடியலைந்தனர். வெளிநாட்டு முகவர்களின் பணி சேவை செய்வதல்ல. அது வியாபாரம். இப்படித்தான் ஈழ அரசியலுக்கு இரகசிய சமூகங்கள் பற்றி கதைகள் அறிமுகமாகின.

அன்றைய சூழலில் பிரதான ஈழ ஆயுத அமைப்புக்கள் பலவும் பலஸ்தீன விடுதலை இயக்கத்தோடு தொடர்புகளை ஏற்படுத்தியிருந்தன. ஆரம்பத்தில், இங்கிலாந்தில் கிடைத்த பலஸ்தீன தொடர்புகளை, இதற்காக பயன்படுத்திக் கொண்டனர். ஈழ ஆயுத இயக்கங்களின் தலைவர்கள் பலரும், பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் பயிற்சிகளை பெற்றனர். அந்தக் காலத்தில் இங்கிலாந்திலிருந்து இயங்கிய பத்திரிகையாளரும் பலஸ்தீன ராஜதந்திரியுமான, செய்யத் ஹமாமி என்பவரின் மூலமே, ஈழ ஆயுத இயக்கங்களின் தலைவர்கள் பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தொடர்பை பெற்றனர்.

இந்தப் பின்புலத்தில், ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எப், புளொட் ஆகிய விடுதலை இயக்கங்களை சேர்ந்த முன்னணி உறுப்பினர்கள் பலரும், பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் பயிற்சிகளை பெற்றிருந்தனர். இவ்வாறான இயக்கங்கள் அனைத்துமே தங்களை மாக்சிய - லெனினிச சார்பு இயங்கங்களாகவே அடையாளப்படுத்திக் கொண்டன. இவ்வாறு பயிற்சி பெற்றவர்கள் இஸ்ரேலுக்கு எதிரான சண்டைகளிலும் பங்குகொண்டிருந்தனர். அவ்வாறானவர்களில் இப்போது எத்தனை பேர் இருக்கின்றனர் என்பது தெரியவில்லை. இஸ்ரேலை எதிர்க்க வேண்டிய எந்தவொரு தேவையும் ஈழ அமைப்புக்களுக்கு இருந்திருக்கவில்லை ஆனால் பலஸ்தீன விடுதலை அமைப்புக்களின் தொடர்பின் காரணமாகவே, இஸ்ரேலுக்கு எதிராக செயற்பட்ட வேண்டி நிர்பந்திக்கப்பட்டனர். இந்த அடிப்படையில் நோக்கினால், பலஸ்தீன விடுதலை அமைப்புக் கூட, ஈழ அமைப்புக்கள் மீதுள்ள கரிசனையால் பயற்சியளிக்க முன்வரவில்லை - மாறாக, இஸ்ரேலிய எதிர்ப்பாளர்களை உற்பத்தி செய்யும் நோக்கிலேயே, வெளிநாட்டு ஆயுத அமைப்புக்களுக்கு பயற்சியளித்திருந்தன.

பலஸ்தீன விடுதலை இயக்க தொடர்புகளை சில இயக்கங்கள் பேணிக் கொண்டிருந்த போது, அதற்கு நேர் எதிராக விடுதலைப் புலிகள் இயக்கம் சிந்தித்திருக்கின்றது. 1990களில், வெளிவந்த, வஞ்சக - வழிகளின் ஊடாக (Way of Deception) என்னும் நூல் இந்த உண்மையை வெளிக்கொண்டுவந்தது. இஸ்ரேலிய உளவுத் துறையான மொசாட்டில் கடமையாற்றிய விக்டர் ஆஸ்ரோவ்ஸ்கியே, இந்த நூலை எழுதியிருந்தார். மொசாட் ஒரே நேரத்தில் இலங்கை இராணுவத்திற்கும் பொதுவாக புலிகள் என்று அறியப்பட்ட தமிழ் ஆயுத அமைப்பின் உறுப்பினர்களுக்கும் பயிற்சி அளித்ததாக விக்டர் கூறுகின்றார். அந்தக் காலத்தில் விடுதலைப் புலிகள் அமைப்பைத் தவிர, வேறு எந்தவொரு இயக்கமும் புலிகள் என்னும் பெயரால் அழைக்கப்பட்டதில்லை. ஆனால் இன்றுவரையில் இந்தப் பயிற்சிகளில் பங்குகொண்டவர்கள் யார் என்னும் தகவல்கள் வெளியாகவில்லை. தமிழ் தேசிய அரசியலுக்குள் வெளிநாட்டு உளவுத் துறை தொடர்பு ஏற்பட்ட முதல் சந்தர்ப்பம் இதுதான். அந்த வகையில் நோக்கினால் ஈழ அரசியலுக்குள் மொசாட்டை கொண்டுவந்தவர்கள் புலிகளாவர்.

இதன் பின்னர்தான், தமிழ் ஆயுத இயக்கங்கள் இந்தியாவின் உதவிகளை நாடிச் சென்றன. இந்திரா காந்தி நிர்வாகம், தமிழ் இயக்கங்களுக்கு பயற்சியளித்தது இரகசியமானதல்ல. இதனையும் அன்றைய உலக அரசியல் சூழலோடு




தான் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். உலகம் சோவியத் - அமெரிக்க பனிப்போருக்குள் சிக்கியிருந்த நிலையில், ஜே.ஆர்.ஜெயவர்த்தன அரசாங்கம், அமெரிக்க சார்பு நிலையில் சில தீர்மானங்களை முன்னெடுத்தது. இதன் காரணமாக இந்தியா அதிருப்தியடைந்தது. சில நகர்வுகளை மேற்கொள்ள வேண்டிய நிர்பந்தம் இந்தியாவிற்கு ஏற்பட்டது. ஜே.ஆர்.ஜெயவர்த்தன இந்தியாவின் கவலைகளை கருத்தில் கொண்டு, இணங்கிச் சென்றிருந்தால், இந்தியாவின் அணுகுமுறைகள் வேறு விதமாக இருக்கும்.

இந்திய பயிற்சியை தொடர்ந்துதான், ஈழத் தமிழர் அரசியல் சூழலில் 'றோ' என்னும் சொல் அறிமுகமாகியது. அதிலிருந்து, வீதியில் யாராவது சறுக்கி விழுந்தால் கூட, அதற்கும் றோதான் காரணமென்று சிந்திக்குமளவிற்கு, தமிழ் அரசியல் முட்டாள்தனத்தை புனர்ந்து கொண்டது. இப்போதும் அந்த முட்டாள்தனத்திலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ள முடியாமல், சில அரசியல்வாதிகளும், புத்திஜீவிகள் என்போரும் தடுமாறிக் கொண்டிருக்கின்றனர்.

ஆனால் விடுதலைப் புலிகள் இயக்கமும் இந்தியாவிடம் பயிற்சி பெற்ற அமைப்புக்களில் ஒன்றுதான். ஆரம்பத்தில் விடுதலைப் புலிகள் அமைப்பு இந்தியாவின் பயிற்சி திட்டத்திற்குள் உள்வாங்கப்படவில்லை. ஆனால் பயற்சி திட்டத்திற்குள் எப்படியாவது உள்வாங்கப்பட வேண்டுமென்று, தான் மேற்கொண்ட முயற்சிகள் தொடர்பில், புலிகளின் மதியுரைஞராக அறியப்பட்ட அன்ரன் பாலசிங்கம் தனது போரும் சாமாதானமும் நூலில் விபரித்திருக்கின்றார். விடுதலைப் புலிகளுடனான, அன்ரன் பாலசிங்கத்தின் தொடர்பும் கூட சிலரால் சந்தேகத்துடன்தான் நோக்கப்பட்டது. பாலசிங்கத்தை அமெரிக்க உளவுத்துறையான சி.ஐ.ஏயின் முகவராக பார்க்கும் போக்கொன்றும் இருந்தது.

அரசியல்ரீதியில் மாறுபாடான அபிப்பிராயங்களை கொண்டிருப்பவர்கள் அனைவரையும் சந்தேகத்துடன் நோக்கும் போக்கொன்று நீண்டகாலமாக இருந்துவரும் ஒன்றுதான். ஆரம்பத்தில் அவ்வாறானவர்களை அழைப்பதற்கு எட்டப்பர், காட்டிக் கொடுப்பாளர்கள், ஒட்டுக் குழுக்கள் என்றவாறான சொற்கள் பயன்படுத்தப்பட்டன. இந்திய- இலங்கை ஒப்பந்தத்திற்கு பின்னர்தான், இந்திய முகவர், றோ முகவர் என்னும் சொற்கள் தமிழ் அரசியல் அகராதிக்குள் நுழைந்தன. விடுதலைப் புலிகள் காலத்தில்தான் இதற்கான பின்னையார் சுழி இடப்பட்டது. குறிப்பாக விடுதலைப் புலிகளை எதிர்ப்பவர்களை, விமர்சிப்பவர்களை இந்தியாவுடன் தொடர்புபடுத்தும் நோய் ஒன்று இந்தக் காலத்தில்தான் பலரையும் தொற்றிக்கொண்டது. விடுதலைப் புலிகளை உடைப்பதற்கு றோ சதி செய்ததாக, ஒரு கதை அன்றைய சூழலில் பரப்பபட்டது.

மாத்தையாவின் ஊடாக இவ்வாறானதொரு நகர்வை றோ மேற்கொண்டதாக ஒரு கதை உலவியது. ஆனால் அந்தக் கதைக்கு எந்தவோர் ஆதாரமும் இல்லை. இந்திய - அமைதிப் படை நிலைகொண் டிருந்த காலத்தில், இலங்கை விவகா ரத்திற்கு பொறுப்பாக இருந்த றோ அதிகாரி, சந்திரசேகரன் ஆவார். அன் றைய சூழலில் இயங்கிய அனைத்து தமிழ் இயக்கங்களின் தலைவர்களும் அதே போன்று, தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்களுக்கும் இவரை நன்கு தெரியும். சந்திரன் ஒய்வு பெற்ற பின்னர் தமிழ் நாட்டை தளமாகக் கொண்டு, சிந்தனைக் கூடமொன்றை நடத்திக் கொண்டிருந்தார். இந்தக் காலத்தில் ஒரு முறை இங்கிலாந்திற்கு சென்றிருந்தார். இதன்போது புலம்பெயர் செயற்பாட்டாளர்களின் சந்திப்பு ஒன்றில் பங்கு கொண்டிருந்தார். அப்போது அவரிடம் இந்தக் கேள்வி கேட்கப்பட் டது. மாத்தையாவின் ஊடாக பிரபா கரனை அழிப்பதற்கு நீங்கள் முயற்சித்த தாக கூறப்படுகின்றதே!

நீங்கள்தான் அப்படியொரு கதையை கூறுகின்றீர்கள். மாத்தையா என்பவருக்கும் றோவிற்கும் எந்தவொரு தொடர்பும் இருந்ததில்லை. அவ்வாறான ஆதாரங்கள் இருந்தால் அதனை நான் பார்க்க விரும்புகின்றேன் என்றார். அங்கிருந்த எவராலும் பதிலளிக்க முடியவில்லை. ஆனால் இவ்வாறு தேவையில்லாமல் மற்றவர்களை சந்தேகப்பட்டதால், ஈழத் தமிழர் சமூகமானது, பல நல்ல தலைவர்களை, நல்ல அறிவுஜீவிகளை இழந்து போனதுதான் மிச்சம்.

அருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்பது போல், இப்போதும் இவ்வாறான நோய் பரப்பும் வேலையை சிலர் கைவிடவில்லை. வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் இந்த நோயை சமூகத்திற்குள் பரப்ப முற்படுகின்றனர். இதில் பிரதான பங்கு வகிப்பவர்கள், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் அணியினர்தான். அதே போன்று ஒரு சில புலம்பெயர் குழுக்களும், அவர்களின் நிதியாதரவுடன் வடக்கில் செயற்படும் சிலரும் இதனை முன்னெடுக்கின்றனர். 35 வருடங்களுக்கு முன்னர், இந்திய அமைதிப் படைகள் அத்துமீறல்களில் ஈடுபட்டதாக கதைகள் புனைகின்றனர். இந்தக் கதைகளால் தமிழ் மக்களுக்கு என்ன நன்மை கிட்டும்?

இந்த இடத்தில் ஒரு பிரதான விடயத்தை கவனிக்க வேண்டும். அதாவது, இன்றுள்ள தமிழ் தேசிய கட்சிகள் மத்தியில், தங்களை அதிகம் விடுதலைப் புலிகளுக்கு நெருக்கமானவர்களாக காட்டுவதற்காக, கடுமையான முயற்சிகளில் ஈடுபடுபவர்களும் இவர்கள் மட்டும்தான். தங்களை விடுதலைப் புலிகளின் வாரிசாகவே அடையாளப்படுத்த முற்படுகின்றனர். இந்தப் பின்புலத்தில்தான் இவர்கள், நடைபெறும் அனைத்துக்கு பின்னாலும், இந்திய உளவுத்துறை இருப்பதான, கதையை பரப்ப முற்படுகின்றனர். விடுதலைப் புலிகள் காலத்து




நோயை பரப்பும் வேலையை செய்கின்றனர். இதன் மூலம் இவர்கள் மறைமுகமாக செய்வது, இந்திய எதிர்ப்பு சக்திகளை ஈழத்து அரசியல் சூழலுக்குள் வரவேற்பதுதான்.

மணிவண்ணன் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளராக இருந்தவர். அவர் பின்னர் கஜேந்திரகுமாருடனான அரசியல் முரண்பாடுகளால் கட்சியிலிருந்து வெளியேறினார். அதன் பின்னர் ஒரு முறை அவரை சந்தித்தேன். அப்போது தனது பிரச்சினைகள் தொடர்பில் பேசியவர் ஒரு விடயத்தை கூறினார். இவர்கள் பலரையும் றோவின் முகவர்கள் என்று கூறகின்ற போது, அதை நான் நம்பிவிட்டேன் ஆனால் இப்போது அதனையே எனக்கும் சொல்கின்ற போதுதான், எனக்கு உண்மை புரிகின்றது. இப்படித்தானே மற்றவர்கள் பற்றியும் பொய்களை கூறியிருப்பார்கள் என்றார்.

இப்போதும் அரசியலமைப்பில் இருக்கின்ற 13வது திருத்தச்சட்டத்தின்

(14ஆம் பக்கம் பார்க்க)

# கனடா இலக்கியவெளி வெளியிட்ட 'மொழிபெயர்ப்புச் சிறப்பிதழ்'


குரு அரவிந்தன்





சென்ற ஞாயிற்றுக்கிழமை 03-12-2023 அன்று மாலை அகில் சாம்பசிவம் அவர்களைப் பிரதம ஆசிரியராகக் கொண்ட இலக்கியவெளி இதழ் குழுவினர் வெளியிட்ட 'மொழிபெயர்ப்புச் சிறப்பிதழ்' வெளியீட்டு விழா ரொறன்ரோவில் உள்ள தமிழ் இசைக் கலாமன்றத்தில் சிறப்பாக நடைபெற்றது. சிந்தனைப் பூக்கள் பத்மநாதன், எழுத்தாளர் குரு அரவிந்தன், கவிஞர் மீரா கனி விமலநாதன், தமிழக எழுத்தாளர் முனைவர் கரு முத்தய்யா, எழுத்தாளர் திரு. த. சிவபாலு ஆகியோர் மங்கள விளக்கேற்றி வைத்ததைத் தொடர்ந்து திரு.த. சிவபாலு அவர்களின் வரவேற்புரை இடம் பெற்றது.

இந்த நிகழ்வுக்குப் பேராசிரியர் நா. சுப்பிரமணியன் அவர்கள் தலைமை தாங்கினார்கள். தலைவர் உரையைத் தொடர்ந்து பேராசிரியர் அமுது ஜோசப் சந்திரகாந்தன் அடிகளாரின் சிறப்புரை இடம் பெற்றது. கலாநிதி பால. சிவகடாட்சம், கலாநிதி செல்வநாயகி சிறிதாஸ், கவிஞர் மாவிலி மைந்தன் சி.சண்முகராஜா, கனடா எழுத்தாளர் இணையத் தலைவர் கவிஞர் அகணி சுரேஸ், சட்டத்




தரணி திரு. சண், ஆர். என். லோகேந்திரலிங்கம், திரு. க. சண்முகலிங்கம், பாஸ்டர் எஸ். ஜெயானந்த சோதி, முனைவர் கரு முத்தய்யா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

கலாநிதி பார்வதி கந்தசாமி, கலாநிதி மைதிலி தயா நிதி, வைத்திய கலாநிதி மேரி கியூரி போல் ஆகியோர் மொழிபெயர்ப்புச் சிறப்பிதழின் உள்ளடக்கம் பற்றி உரையாற்றினார்கள். நூலில் இடம் பெற்ற கவிதை, கட்டுரை, சிறுகதை ஆகிய மூன்று பகுதிகள் பற்றித் தனித் தனியாக இவர்களின் உரை இடம் பெற்றிருந்தது. அதைத் தொடர்ந்து வைத்திய கலாநிதி இ.லம்போதரன் அவர்கள் மலரை வெளியிட்டு வைத்து வெளியீட்டுரை நிகழ்த்தினார்.

மொழிபெயர்ப்புச் சிறுகதைகளைப் போன்ற பல வெளிநாட்டுச் சிறுகதைகளைக் கனடிய எழுத்தாளர்களான அ.முத்துலிங்கம், எழுத்தாளர் குரு அரவிந்தன் போன்றவர்கள் நேரடியாகவே தமிழில் எழுதி வருகின்றார்கள் என்பதும், சமீபத்தில் இனிய நந்தவனம் பதிப்பகத்தால் வெளியிடப்பட்ட 'சாக்லட் பெண்ணும் பண்ணை வீடும்' என்ற வெளிநாட்டுச் சிறுகதைத் தொகுப்பில் இடம் பெற்ற சிறுகதைகள் போர்த்துக்கல், கிறீக், சோமாலியா, கெனியா, சவூதி அரேபியா, ஜெர்மனி, இத்தாலி, நேபாளம், அமெரிக்கா, கனடா போன்ற நாட்டுச் சம்பவங்களைக் கருப்பொருளாகக் கொண்டு தமிழில் நேரடியாக எழுதப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் சார்பாக அதன் அங்கத்தவர்களால் இதழ் ஆசிரியர் அகில் சாம்பசிவம் அவர்கள் பொன்னாடை அணிவித்துக் கௌரவிக்கப்பட்டார். நிகழ்ச்சியின் இறுதி நிகழ்வாக திரு அகில் சாம்பசிவம் அவர்களின் நன்றியுரை இடம்பெற்றது. வருகை தந்தோருக்குச் சிற்றுண்டி வழங்கப்பெற்றது.

---

# வியுக்தியார் பதில்கள்



உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி

வியுக்தியார் பதில்கள்
ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
viyukthiyar@gmail.com

**எம். அகிலேஸ்வரன், சித்தன்கேணி.**

**கேள்வி:** உலகத் தமிழ் பேரவையின் பேச்சாளர் சுரேன் சுரேந்திரன் உள்ளிட்ட பௌத்த பிக்குகள் அடங்கிய குழுவினர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்து கலந்துரையாடியதுடன், இமாலய பிரகடனத்தை அவரிடம் கையளித்தது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?.

**வியுக்தியார்:** நினைப்பதற்கு என்ன இருக்கிறது. புலிகள் மௌனமாக்கப்பட்ட காலத்திலிருந்து மகிந்தவை போர்குற்றவாளி என்றும் இனப்படுகொலையாளர் என்றும் புலம்பெயர் மண்ணில் பிரச்சாரம் செய்துவந்தது தவறானது என்று இப்போது சொல்கிறார் போலும். முன்னதாக தான் கோட்டாபய ராஜபக்சவை சந்திக்கப் போவதில்லை என்றும் அறிவித்தவர், இப்போது மகிந்தவை சந்தித்திருக்கிறார். அவர் மகிந்தவுக்கு பாவமன்னிப்பு கொடுத்துவிட்டாரோ தெரியவில்லையே.

**சபா. சிவநாதன், குரும்பசிட்டி, தெல்லிப்பழை.**

**கேள்வி:** தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுர குமார திஸாநாயக்க அண்மையில் ஒருநாள் மிகிந்தலை விகாரைக்கு வந்தார் என்றும் அப்போது அவருக்கு ஆசி வழங்கி, பிரித் நூலைகட்டி விட்டு, சிறப்பாக நாட்டை ஆட்சி செய்யுமாறு ஆலோசனை வழங்கியதாகவும், எனினும் விகாரையில் இருந்து வெளியேறிய அனுரகுமார, தான் அவரது கையில் கட்டிய பிரித் நூலை கழற்றி தரையில் வீசினார் என்று மிகிந்தலை ரஜமஹா விகாரையின் விகாராதிபதி கவலை தெரிவித்திருக்கிறாரே.

**வியுக்தியார்:** ஜேவிபி தலைவர் ஒரு தீவிர இடதுசாரி, அவர் எப்படிப்படி தனது கையில் பிரித் நூலை கட்டியிருப்பது?. விகாராதிபதி கட்டுவதை அவர் தடுக்காததே பெரிய விசயம்தானே. ஆனாலும் வரலாற்றுச்சிறப்பு மிக்க அந்த விகாரைக்கு சென்று விகாராதிபதியிடம் ஆசிபெறவேண்டும் என்று நினைத்தவருக்கு, அவர் கட்டிவிட்ட நூலை விகாரையிலேயே அறுத்து எறியாமல் பின்னர் கழற்றவேண்டும் என்ற இங்கிதம் கூட இல்லை என்பதுதான் நாம் கவனிக்க வேண்டியது. இவர் எல்லாம் நாட்டை ஆளுகின்ற நிலை வந்தால் நாடு எப்படி தாங்கும்?

**எம். கௌதம், அமிர்தகழி, மட்டக்களப்பு**

**கேள்வி:** தமிழர் தாயகத்தில் திட்டமிடப்பட்ட இன வழிப்பு நடவடிக்கைகளும் தமிழர்களுக்கு எதிரான அடக்குமுறைகளும் மேலோங்கியுள்ள சூழ்நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை மையமாகக் கொண்டு உலகத் தமிழர் பேரவை முன்னெடுத்துள்ள முயற்சி அரசாங்கத்துக்கு 'வெள்ளையடிக்கும்' செயல் என்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளாரே.

**வியுக்தியார்:** உலகத்தமிழர் பேரவை எதற்காக இதனைச் செய்கின்றது என்பது தெரியவில்லை. ஆனால் அவர்கள் எதற்காக இந்த தேரர்களை நேபாளத்திற்கு அழைத்துப்பேசி, ஏப்ரல் மாதம் செய்த இந்த இமாலய பிரகடனத்தை எட்டுமாதங்கள் கழித்து இப்போது 'விற்பனை' செய்கிறார்கள் என்பதுதான் எனக்கும் புரியவில்லை. அதுமாத்திரமன்றி, முழுநாட்டுக்கும் பயனுள்ளது என்று அவர்கள் சொல்லும் இதனை ஏன் இவ்வளவு இரகசியமாக வைத்திருந்தார்கள் என்பதும் அவர்களுக்கு மாத்திரமே தெரிந்த சங்கதி. அதுசரி, அது என்ன பொன்னம்பலம், இனஅழிப்பும் அடக்குமுறைகளும் இப்போதுதான் மேலோங்கி இருக்கிறது என்கிறார்?.

**கந்தையா முகுந்தன் சுவாமியார் வீதி, கொழும்புத்துறை.**

**கேள்வி:** யாழ்ப்பாண மாவட்டத்தில் ஊசி மூலம் போதைப்பொருளை ஏற்றும் போக்கு அதிகரித்துள்ளது என்று மாவட்ட அரச அதிபர் அ. சிவபாலசுந்தரன் கவலை தெரிவித்திருக்கிறாரே கவனித்தீர்களா?.

**வியுக்தியார்:** அந்தச் செய்தி வெளிவந்த அதே பத்திரிகையில்தான், இன்னுமொரு செய்தியும் வெளிவந்திருந்தது. அதாவது, யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவன் ஒருவர் போதை மாத்திரைகளுடன் கோப்பாய் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டதாக. யாழ்ப்பாணத்தில் அடுத்த சந்ததியைக் காப்பாற்ற முடியுமா என்ற கவலைதான் எஞ்சுகின்றது. இதுகுறித்து கவலைப்படவேண்டிய மக்கள் பிரதிநிதிகள்தான் அதுபற்றிய அக்கறையில்லாமல் இருக்கிறார்கள் என்றால், இதுகுறித்து மக்களை விழிப்படைய வைக்க வேண்டிய மருத்துவத்துறையினரே அதற்கு அடிமையாகின்றனர் என்பது நாம் சாதாரணமாக கடந்து செல்லக்கூடிய செய்தி அல்ல.

**இரா. ஜெயருபன், பூந்தோட்டம், வவுனியா.**

**கேள்வி:** அடுத்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தை பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பார் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்திருக்கிறாரே?

**வியுக்தியார்:** அவர் சொன்னால் சரியாகத்தான் இருக்கும். அடுத்த ஆண்டு நவம்பரில் தான் புதிய ஜனாதிபதி பதவியேற்கவேண்டும். அதற்கு பின்னர் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் நடக்க எப்படியும் இருபத்திஐந்தாம் ஆண்டு வந்துவிடமே. எனவே அடுத்த வரவுசெலவுத்திட்டம் நவம்பரிலேயே தாக்கல் செய்யப்பட்டுவிடும். நான் நினைக்கின்றேன். ஹர்ஷ டி சில்வா அடுத்த வரவுசெலவுத்திட்டத்திற்கு முன்னதாக, அதாவது ஜனாதிபதி தேர்தலின்போதே அவர் ரணிலுடன் ஐக்கியமாகிவிடுவார் என்று சஜித் சொல்கிறார் என்று நினைக்கின்றேன்.

**எஸ். செந்துஜன், ராசவீதி, கோப்பாய்.**

**கேள்வி:** தமிழரசுக்கட்சியின் திருகோணமலை மாவட்ட மூலக்கிளைகள் தெரிவின்போது தனக்கு ஆதரவாக உள்ள கட்சியின் நீண்டகால அங்கத்தவர்கள் இலக்கு வைக்கப்பட்டு புறக்கணிக்கப்பட்டுள்ளனர் என்று பெருந் தலைவர் இரா. சம்பந்தன் புகார் தெரிவித்திருக்கிறாரே?

**வியுக்தியார்:** அது வேறு ஒன்றுமல்ல, தனக்கு ஆதரவானவர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறுவது, தனக்கு எதிரானவர்களும் கட்சியில் இருக்கிறார்கள் என்பதை சொல்வதற்காகத்தானோ தெரியவில்லையே.

# மாற்றமடையும் உக்ரைன் போர்க்களம்:

# அமெரிக்கா உதவிக்கு முட்டுக்கட்டை! ஆயுத உதவியை நிறுத்திய போலந்து !

ஐங்கரன் விக்கினேஸ்வரா

அமெரிக்காவின் வெள்ளை மாளிகையில் அதிபர் ஜோ பைடனை உக்ரைன் அதிபர் விலோடிமிர் ஜெலன்ஸ்கி டிசம்பர் 12இல் சந்தித்தார். சமீப காலமாக உக்ரைனுக்கு அமெரிக்காவின் ஆதரவு குறைந்து வருவது கவலையளிக்கிறது. போரில் அமெரிக்கா அளித்து வரும் ஆதரவு தொடர வேண்டும் என ஜெலன்ஸ்கி வலியுறுத்தினார்.

உக்ரைனின் மிகப்பெரிய மொபைல் நெட்வொர்க் சைபர் தாக்குதலுக்குள்ளாகி, மில்லியன் கணக்கான மக்கள் மொபைல் மற்றும் இன்டர்நெட் வசதி துண்டிக்கப்பட்டு முடங்கியுள்ளனர் என ஜெலன்ஸ்கி அமெரிக்காவிடம் முறையிட்டுள்ளார்.

உக்ரைனுக்கு இராணுவ உதவி வழங்குவதற்காக அமெரிக்க வரவு செலவுத் திட்டத்திலிருந்து ஒதுக்கப்பட்ட நிதிக் கொள்வனவு நடைமுறை நிராகரிக்கப்பட்டாலும் உக்ரைனுக்கு ஆதரவாக நிற்பதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கடந்த மாதம் அக்டோபர் 3இல் தெரிவித்திருந்தார்.

நேட்டோ அமைப்பு நாடுகளில் உக்ரைன் இணையக் கூடாது என்பதற்காக, ரஷ்யா, கடந்த ஆண்டு 2022 பிப்ரவரி 24ஆம் தேதி முதல் அந்நாட்டின் மீது போர் தொடுத்து வருகிறது.


**அமெரிக்கா உதவி தொடருமா?**

உக்ரைன் - ரஷ்யா இடையிலான போர் தொடர்ந்து நீடித்து வரும் நிலையில், உக்ரைனுக்கு அமெரிக்கா தொடர்ந்து நிதி உதவியும், ராணுவ உதவியும் நேரடியாகவே அளித்து வருகிறது.

கடந்த 2022ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் இருந்து அமெரிக்கா உக்ரைனுக்கு 46 பில்லியன் டொலர் இராணுவ உதவியை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தற்போதய புதிய வரவு செலவு திட்டத்தில் உக்ரைனுக்கு போர் உதவியாக 6 பில்லியன் டொலர்களை ஒதுக்க அமெரிக்கா முன்மொழிந்த நிலையில் எனினும் இதற்கு அனுமதி கிடைக்கவில்லை.

எவ்வாறாயினும் கடைசி நிமிடத்தில் வரவு செலவுத்




திட்டம் நிராகரிக்கப்பட்ட போதிலும், உக்ரைனுக்கான இராணுவ உதவி நிறுத்தப்படாது என்று வெள்ளை மாளிகை சுட்டிக்காட்டியுள்ளதாக சில வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்நிலையில் அமெரிக்காவின் ஆதரவை உக்ரைன் தொடர்ந்து பெறுவதை நம்பலாம் என பைடன் தெரிவித்துள்ளார். எந்த சூழ்நிலையிலும் உக்ரைனுக்கான அமெரிக்க ஆதரவை நிறுத்திட அனுமதிக்க முடியாது. உக்ரைன் எந்த பிரச்சனையாக இருந்தாலும் தனது நாட்டிலிருந்து தொடர்ந்து ஆதரவை பெறும் என அமெரிக்க ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

போர் தொடங்கியதில் இருந்து அமெரிக்கா ஏற் கனவே உக்ரைனுக்கு 46 பில்லியன் டொலர் இராணுவ உதவியை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. பின்னர் மே 2022இல் உக்ரைனுக்கு மேலும் புதிதாக பல பில்லி யன் டாலர் மதிப்புள்ள புதிய இராணுவ உதவியை அமெரிக்க வழங்கியது. இதில் கூடுதல் ஹிமார்ஸ் சிஸ்டம் ஏவுகணைகளும் அடங்கும். இவை உக்ரேனிய படைகள் ரஷிய படைகளின் போர் முன் பகுதியை தாக்க உதவியாக இருந்தன.



இந்த உதவியில் ரஷ்ய விமானங்கள் மற்றும் ராக்கெட்டுகளுக்கு எதிராக செயல்படக்கூடிய வான் ஏவுகணைகள், ஜாவெலின் எதிர்ப்பு கவச ராக்கெட்டுகள் மற்றும் பிற வெடிமருந்துகள் ஆகியவற்றை அமெரிக்க பாதுகாப்புத்துறை வழங்கியது.

**உக்ரைன் விரைவில் களத்தை இழக்கும்**

அமெரிக்காவிடமிருந்து மற்றொரு நிதி உதவி இல்லாவிடின் ரஷ்யாவிற்கு எதிரான போரில் உக்ரைன் விரைவில் தளத்தை இழக்கும் என்று வெள்ளை மாளிகை அதிகாரிகள் காங்கிரஸூக்கு அவசர எச்சரிக்கை விடுத்துள்ளனர். இந்த ஆண்டின் இறுதிக்குள் உக்ரைனுக்காக அதிக ஆயுதங்கள் மற்றும் உபகரணங்களை வாங்குவதற்கும், அமெரிக்க இராணுவ உபகரணங்களை வழங்குவதற்கும் தங்களிடம் வளங்கள் தீர்ந்துவிடும் என்றும் இன்னோர் வெள்ளை மாளிகை அலுவலக இயக்குனர் ஷலண்டா யங் காங்கிரஸ் தலைவர்களுக்கு தனது கடிதத்தில் எழுதியுள்ளார்.

வெள்ளை மாளிகை காங்கிரஸிடம் 106 பில்லியன் டாலர் கூடுதல் நிதி மசோதாவை அங்கீகரிக்குமாறு கடந்த மாதம் அக்டோபரில் கேட்டுக் கொண்டது. இது உக்ரைனுக்கான உதவியும், அதே வேளையில் எல்லைப் பாதுகாப்பையும் பலப்படுத்த இந்த கூடுதல் நிதி தேவைப்படுகிறது.

உக்ரைனுக்கான முந்தைய உதவி நிதிகள் காங்கிரசில் இரு கட்சி ஆதரவைப் பெற்றிருந்தாலும், தற்போது குடியரசுக் கட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள சபையில் இந்த பிரச்சினை சர்ச்சைக்குரியதாக மாறியுள்ளது.

இவ்வருட அக்டோபரில் வெள்ளை மாளிகை கோடிட்டுக் காட்டிய துணை நிதிக் கோரிக்கையில் உக்ரைனுக்கான கூடுதல் உதவியாக அண்ணளவாக 60பில்லியன் அடங்கும். உக்ரைனின் போர் முயற்சிகளுக்கு ஊக்கமளிக்க அமெரிக்க காங்கிரஸ் ஏற்கனவே 111 பில்லியன் டாலர்களுக்கு மேல் ஒதுக்கியிருந்தாலும், வளங்கள் விரைவில் தீர்ந்து வருவதாக காங்கிரஸ் தலைமை தெரிவித்துள்ளது.

**டொனால்ட் டிரம்பின் வெளியுறவுக் கொள்கை**

குடியரசுக் கட்சியின் அதிகமான உறுப்பினர்கள் டொனால்ட் டிரம்பின் வெளியுறவுக் கொள்கைக்கான "அமெரிக்கா முதல்" (America First) அணுகுமுறையை ஏற்றுக் கொண்டதால், உக்ரைனுக்கு நிதி வழங்குவதில் அதிக வலதுசாரி சட்டமியற்றுபவர்கள் தயக்கம் அடைந்துள்ளனர்.

உக்ரைனுக்கான அமெரிக்க உதவி நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1 வீதத்துக்கும் குறைவாக இருந்தாலும், எல்லைப் பாதுகாப்பிற்கு அந்த நிதி சிறப்பாகப் பயன்படுத்தப்படும்போது, அமெரிக்கா உக்ரைனுக்கு இவ்வளவு பணத்தை அனுப்பக்கூடாது என்று வலதுசாரி சட்டமியற்றுபவர்கள் வாதிட்டு வருகின்றனர்.

புளோரிடாவின் தீவிர வலதுசாரி காங்கிரஸ்காரர் மாட் கெட்ஸ், உக்ரைனுக்கு கூடுதல் நிதியுதவி வழங்குவதற்காக ஜோ பிடனுடன் "கசியப் பக்க ஒப்பந்தத்தை" கைச்சாத்துட்டதாக அப்போதைய சபாநாயகர் கெவின் மெக்கார்த்தி குற்றம் சாட்டினார்.




**பிரான்ஸ், ஜெர்மனிக்கு ரஷ்ய அதிபர் கோரிக்கை**

உக்ரைனுக்கு ஆயுத உதவி செய்வதை நிறுத்த வேண்டும் என்று பிரான்ஸ், ஜெர்மனிக்கு ரஷ்ய அதிபர் புட்டின் கோரிக்கை விடுத்துள்ளார்.

உக்ரைன் மீது தொடங்கிய போர் நீடித்து வருகிறது. இந்த போருக்கு அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, கனடா உள்ளிட்ட நாடுகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. ரஷ்ய படைகளின் தாக்குதல்களை சமாளிக்க உக்ரைனுக்கு ஆயுதங்களை அமெரிக்கா, மேற்கத்திய நாடுகள் பாரியளவில் வழங்கி உதவி வருகின்றன.

இந்த நிலையில் உக்ரைனுக்கு ஆயுத உதவி செய்




வதை நிறுத்த வேண்டும் என்று பிரான்ஸ், ஜெர்மனிக்கு ரஷ்ய அதிபர் புட்டின் கோரிக்கை விடுத்துள்ளார்.

**போலந்து உதவி உக்ரைனுக்கு இல்லை**

உக்ரைன் நாட்டிற்கு இனி, ராணுவத் தளவாடங்கள் நிறுத்தப்படும் என 21 செப்டம்பர் 2023 போலந்து அரசு தெரிவித்துள்ளது. உக்ரைனுக்கு அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் நிதி உதவி மற்றும் ஆயுத உதவி அளித்து வருவதால், மத்திய ஐரோப்பிய நாடான போலந்தும் உக்ரைனுக்கு 320 பீரங்கிகளையும், 14 மிக்-29 ரக போர் விமானங்களையும் முதலில் வழங்கி உதவியது.

உக்ரைன் அதிபர் விளாடிமிர் ஜெலன்ஸ்கி, ஐ.நா.




கூட்டமைப்பின் பொதுச் சபையில் உரையாற்றிய போது, சில ஐரோப்பிய நாடுகள் ரஷ்யாவிற்கு மறைமுகமாக உதவி செய்கின்றன எனக் குறிப்பிட்டார். இதற்கு எதிர்வினையாக தற்போது போலந்து நாட்டு பிரதமர் உள்நாட்டு ராணுவ பலத்தை அதிகரிப்பதில் கவனம்செலுத்த வேண்டியுள்ளதால், உக்ரைனுக்கு ராணுவத் தளவாடங்களை அனுப்புவது இனி நிறுத்தப்படும் என அறிவித்துள்ளார்.

உக்ரேனிய போரில் திருப்புமுனையாக போலந்து அரசு உக்ரேனுக்கு ஆயுதங்கள் வழங்குவதை நிறுத்துவதாக அறிவித்துள்ளதுடன், பல்வேறு நாடுகளும் உக்ரேனைக்கு ஆயுத உதவியை நிறுத்தக் கோரியுள்ளன. அத்துடன் அண்மையில் உக்ரேனுக்கு யுரேனிய ஆயுதம் வழங்க ஐநா அதிகாரி எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

உக்ரைன் அரசுக்கு இராணுவ உதவி அமெரிக்காவால் நிறுத்தப்பட்டால், போர்க்களத்தில் பாரிய பின்னடைவை உக்ரைன் எதிர்நோக்க வேண்டிவரும் என்பது உறுதியாகிறது.


# ‘கிராமத்திலிருந்து உலக அரங்கிற்கு’

## முன்னாள் இந்திய துணைத்தூதர் நடராஜன் எழுதியுள்ள நூல்

யாழ்ப்பாணத்தில் இந்திய துணைத்தூதுவராக இருந்த. ஏ. நடராஜன், ‘கிராமத்திலிருந்து உலக அரங்கிற்கு (ஒரு நினைவுக் குறிப்பு)’ என்ற ஒரு நுலை எழுதியுள்ளார். இந் நூல் அண்மையில் தமிழ்நாடு கோயம்புத்தூரில் வெளியிடப்பட்டது.

யேமன், ஸ்பெயின், சீனா, இந்தோனேஷியா, பிரான்ஸ், பூட்டான் மற்றும் இலங்கை ஆகிய பல்வேறு நாடுகளில் இந்திய தூதரகப் பணிகளில் பணியாற்றிய நடராஜன், தனது தனிப்பட்ட அனுபவத்தைப் பற்றி எழுதியதே இந் நூல். இலங்கையில், கண்டியில் இந்திய உதவி உயர் ஸ்தானிகராக மூன்று ஆண்டுகளும் (2011-2014) பின்னர் மேலும் மூன்று ஆண்டுகள் யாழ்ப்பாணத்தில் (2015-2018) இந்திய துணைத்தூதுவராகவும் இவர் பணியாற்றியுள்ளார்.

இலங்கையில் பணியாற்றும்போது, திரு. நடராஜன் அனைத்து தரப்பு மக்களுடனும் நெருக்கமான, அன்பான மற்றும் நல்லுறவுகளை வளர்த்துக்கொண்டவர். போரினால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணத்தில் மூன்று வருடங்களுக்கும் மேலாக அவர் தங்கியிருந்தபோது, முக்கிய அரசியல் தலைவர்கள், மதத் தலைவர்கள், வர்த்தக சமூகம், நிர்வாகிகள், கல்வியாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள், மாணவர் சமூகம் மற்றும் மீனவர் சமூகத்துடன் நெருங்கிய உறவுகளை வளர்த்துக் கொண்டார். மலையக தமிழர்களுடனும் யாழ்ப்பாணத் தமிழர்களுடனும் அவரது தொடர்பு, அலுவலகத்தின் பொறிமுறைகள் மற்றும் அலுவலக நெறிமுறைகளின் தளைகளுக்கு அப்பால் சென்றது.




இந்திய-இலங்கை ஒப்பந்தம், இந்திய அமைதி காக்கும் படை (IPKF), தமிழீழ விடுதலைப் புலிகள், மீனவர் பிரச்னை, கச்சத்தீவு போன்ற பல்வேறு விடயப் பரப்புகள் இந் நூலில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அரசியல், பொருளாதாரம், கல்வி, கலாசாரம், மொழி மற்றும் விளையாட்டு போன்ற துறைகளில் அவர் மேற்கொண்ட கடுமையான முயற்சிகளையும் அவர் தொட்டுள்ளார்.

புத்தக வெளியீட்டு நாளில், நூற்றுக்கும் மேற்பட்ட பார்வையாளர்களின் முன் உரையாற்றிய, ஜார்க்கண்ட் ஆளுநரின் கல்வி ஆலோசகரும், அண்ணா பல்கலைக்கழகத்தின்

முன்னாள் துணைவேந்தரும், யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் (யுபிஎஸ்சி) முன்னாள் உறுப்பினருமான பேராசிரியர் இ. பாலகுருசாமி, “நடராஜனின் புத்தகம் படிப்பதற்கு தகுந்தது” என்று பாராட்டினார்.

நடராஜன் யாழ்ப்பாணத்தில் இருந்தபோது, பிரதமர் நரேந்திர மோடி 2015ஆம் ஆண்டு மார்ச் மாதம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து, யாழ்ப்பாண கலாசார நிலையத்திற்கு அடிக்கல் நாட்டினார். யாழ்ப்பாணம் பொது நூலகத்தில் ‘இந்தியா கோர்னர்’ அமைக்கப்பட்டது. யாழ்ப்பாணம் பொது நூலகத்தில்






டாக்டர் அப்துல் கலாமின் சிலை நிறுவப்பட்டது. நடராஜன் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த காலத்தில் வடமாகாண மீனவர்களுடன் விரிவாக உரையாடி, மீனவர் பிரச்னைக்குத் தீர்வு காண்பதில் தன்னால் இயன்றவரை முயற்சி செய்தார்

# அனுரகுமாரவின் தேசிய விடுதலை...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிறுபான்மைச் சமூகங்களுக்கு பிரச்சினைகள் இருக்கின்றன. இனப்பிரச்சினை இன்னமும் தீர்க்கப்படவில்லை என்று திசாநாயக்க ‘இந்து” நேர்காணலில் கூறினாரே தவிர அந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு எந்த யோசனையையும் முன்வைக்கவில்லை. அதிகாரப்பரவலாக்கம் குறித்து பேசுவதை அவர் தவிர்க்கிறார். வெறுமனே தங்களது தேசிய விடுதலை இயக்கத்தில் இணையுமாறு கூறுவ தன் மூலம் அவரால் தமிழ் மக்களின் நம்பிக்கையை வென்றெடுப்பதில் ஓர் அங்குலமேனும் முன்னோக்கி நகர முடியாது.

இலங்கையில் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பதற்கு இதுகாலவரையில் அரசாங்கங்கள் மேற்கொண்ட சகல முயற்சிகளையும் கடுமையாக எதிர்த்த எதிர்மறையான ஒரு வரலாற்றை ஜே.வி.பி. கொண்டிருக்கிறது. அந்த போக்கில் மாற்றத்தைச் செய்யும் எந்த அறிகுறியையும் அவர்களிடம் காண முடியவில்லை.

இவ்வருட முற்பகுதியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 13 வது அரசியலமைப்புத் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு தனக்கு இருக்கும் விருப்பத்தை வெளிப்படுத்தியதை அடுத்து தென்னிலங்கையில் சிங்கள தேசியவாத சக்திகளிடம் இருந்து கிளம்பிய எதிர்ப்புக்கு மந்தியில் தேசிய மக்கள் சக்தி எவ்வாறு நடந்து கொண்டது என்பதை ஏற்கெனவே ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் இந்த பத்தியில் எழுதியிருந்தோம்.

முன்றரை தசாப்தங்களுக்கு மேலாக நாட்டின் அரசியலமைப்பில் இருந்து வரும் ஒரு திருத்தத்தை நடைமுறைப் படுத்தும் முயற்சிக்கு ஒத்துழைப்பை வழங்க தேசிய மக்கள் சக்தி முன்வந்திருந்தால் இனப்பிரச்சினை தொடர்பில் தங்களது நிலைப்பாட்டில் மாற்றத்தைச் செய்யத் தயாராயிருப்பதற்கான ஒரு நேர்மறையான சமிக்ஞையை தமிழ் மக்களுக்கு காட்டியிருக்க முடியும்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான வழிவகைகளை ஆராய்வதற்கு ஜனாதிபதி மூன்று தடவைகள் கூட்டிய பாராளுமன்ற கட்சிகளின் மகாநாட்டிலும் அவர்கள் பங்கேற்கவில்லை.

தமிழர்கள் தங்களது பிரச்சினைக்கான ஒரு தீர்வாக 13 வது திருத்தத்தை ஏற்றுக்கொள்வார்கள் என்றால் அது குறித்து தங்களுக்கு பிரச்சினை இல்லை என்று கடந்த வருடம் கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் இடம் பெற்ற கருத்தரங்கொன்றில் திசாநாயக்க கூறியது நன்றாக நினைவிருக்கிறது.

ஆனால், ஜனாதிபதியின் அறிவிப்பை அடுத்து அந்த திருத்தத்தக்கு எதிராக தென்னிலங்கையில் பரவலாக கிளம்பிய எதிர்ப்பைக் கண்ட அவர் திருத்தத்துக்கு ஆதரவாக தெரிவிக்கக்கூடிய எந்த கருத்தும் ‘அறகலய” மக்கள் கிளர்ச்சிக்கு பிறகு தங்களுக்கு சிங்கள மக்கள் மத்தியில் வளர்ந்துவரும் ஆதரவைப் பாதித்து விடும் என்று கருதியதியதனால் போலும் போக்கை மாற்றிக்கொண்டார்.

தங்களது ஆட்சியில் புதிய அரசியலமைப்பின் மூலம் இனப்பிரச்சினைக்கு சகல சமூகத்தவர்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வைக் காண்பது குறித்து தேசிய மக்கள் சக்தியின் தலைவர்கள் பேசியதெல்லாம் கையில் இருக்கும் பிரச்சினையை கையாளுவதில் இருந்து நழுவும் ஒரு தந்திரோபாயமேயாகும்.

தென்னிலங்கை மக்களினால் நிராகரிக்கப்படும் எந்தவொரு தீர்வும் தமிழர்களுக்கு நிரந்தர தீர்வாக அமையாது என்றும் திசாநாயக்க கூறினார்.

உள்நாட்டுப்போரின் விளைவுகளினால் சிங்கள மக்கள் பாதிக்கப்பட்டிருக்கலாம். அரசியல் உரிமைகள் பற்றிய பிரச்சினை என்று வரும்போது சிங்கள மக்கள் பாதிக்கப்படவில்லை. அவ்வாறு பாதிக்கப்படாத மக்களின் இணக்கத்துடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தீர்வைக் காண்பது என்பது இலங்கையின் கடந்த கால அனுபவங்களின் அடிப்படையில் நோக்குகையில் ஒருபோதும் நடைமுறைச் சாத்தியமானது அல்ல.

இதுவரையான எந்த அரசியல் தீர்வு முயற்சியை சிங்கள மக்கள் ஆதரித்தார்கள்? அல்லது தாங்கள் முன்னெடுத்த தீர்வு முயற்சிகளுக்கு சிங்கள மக்களின் ஆதரவை வென்றெடுப்பதற்கு எந்த சிங்கள தலைவர் மானசீகமாக முயற்சித்தார்? எதிர்ப்புகளுக்கு முகங்கொடுத்து தாங்கள் எடுத்த நிலைப்பாட்டை நியாயப் படுத்துவதற்கு எந்த சிங்கள தலைவருக்கு துணிச்சல் வந்தது?

மக்களின் தவறான உணர்வுகளுக்கு பின்னால் இழுபட்டுச் செல்வதற்கு தலைவர்கள் தேவையில்லை. தவறான சிந்தனைகளைச் சுட்டிக்காட்டி அவற்றினால் ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகளை மக்களுக்கு எடுத்துக்கூறி சரியான மார்க்கத்தில் அவர்களை வழிநடத்துவதற்கே தலைவர்கள் தேவை. அத்தகைய தலைமையை வழங்குவதற்கு இதுவரையில் ஆட்சிப்பொறுப்பில் இருந்த எந்த சிங்கள தலைவருக்கும் அரசியல் துணிவாற்றல் வரலவில்லை என்பதே வரலாறு.

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் திசாநாயக்க அந்த தலைவர்களிடம் இருந்து வேறுபட்டவராக தன்னை மக்கள் முன்னிறுத்த வேண்டும்

பொருளாதாரப் பிரச்சினை உட்பட நாடு எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தங்களது கட்சியின் முன்னைய நிலைப்பாடுகளில் இருந்து மாறுபட்ட முறையில் தீர்வுகளை முன்வைக்கும் திசாநாயக்கவும் அவரது தோழர்களும் இனப்பிரச்சினையைப் பொறுத்தவரையில் மாத்திரம் நெகிழ்ச்சியான ஒரு நிலைப்பாட்டை எடுப்பதற்கு தயங்குவது துரதிர்ஷ்டவசமானது.

இனப்பிரச்சினை தொடர்பில் இதுகாலவரையில் ஜே.வி.பி.- தேசிய மக்கள் சக்தி கடைப்பிடித்த கொள்கைகளும் அணுகுமுறைகளும் சிறுபான்மைச் சமூகங்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளையும் மனக்குறைகளையும் குறைந்த பட்சமேனும் ஏற்றுக்கொள்வதற்கு மறுத்துநிற்கும் சிங்கள தேசியவாத சக்திகளையே வலுப்படுத்தி யிருக்கின்றது.

இந்த போக்கில் மாற்றத்தைச் செய்யாதவரை திசாநாயக்க சிந்தனையில் கொண்டிருக்கும் தேசிய விடுதலை இயக்கம் ஒருபோதும் முழுமை பெறாது. தேசிய மக்கள் சக்திக்கு தற்போது தென்னிலங்கையில் அதிகரித்திருப்பதாக கூறப்படும் ஆதரவை சிறுபான்மைச் சமூகங்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகள் மற்றும் மனக்குறைகள் குறித்து சிங்கள மக்களுக்கு ஓரளவுக்கேனும் புரிதலை ஏற்படுத்துவதற்கு பயன்படுத்தாத பட்சத்தில் தேசிய விடுதலை இயக்கம் பற்றி பேசுவதில் பயனில்லை.

# ஈழத்தமிழ்...

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

அடிப்படையில் பயணிப்பதன் அவசியம் தொடர்பில் பேசுகின்றவர்களை, இந்தியாவின் முகவர்கள் என்று கூறுவதை காண முடிகின்றது. அரசியலமைப்பிலுள்ள விடயங்கள் அமுல்படுத்தப்பட்டால், அதனால் தமிழ் மக்களுக்குத்தான் நன்மை ஏற்படும். இதனால் இந்தியாவிற்கு என்ன நன்மை?

உளவுத்துறைகள் என்பது நரசிம்மர் அவதாரம் போன்றது. அது தூணிலும் இருக்கும் துரும்பிலும் இருக்கும். அவை சாதாரண கண்களுக்கு புலப்படாது. அவ்வாறான விடயங்களை பலவீனமான தமிழர் அசியலுடன் தொடர்புபடுத்துவது அடிப்படையிலேயே தவறானது. இலங்கை ஒரு மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த அமைவிடயத்தில் இருக்கின்ற நாடு. இதன் காரணமாக, உலக சக்திகளின் அவதானத்திற்குள் வந்திருக்கின்றது. குறிப்பாக சீனா அதன் கால்களை இலங்கைத் தீவிற்குள் வலுவாக்க முனைவதன் காரணமாகவே, இலங்கையின் மீது, இந்தியா அதிக கவனம் செலுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. அதே போன்று, சீனாவுடனான உலகளாவிய போட்டியின் காரணமாக அமெரிக்காவின் பார்வைக்குள்ளும் இலங்கை வந்திருக்கின்றது. இந்த பின்புலத்தில்தான், அண்மையில் சி.ஐ.ஏயின் இயக்குனர் வில்லியம் வேன்ஸ். கொழும்பு வந்து சென்றதான சர்சைகள் ஏற்பட்டன. எதிர்காலத்தில், இது போன்று இன்னும் பல்வேறு சர்ச்சைகள் ஏற்படலாம். இலங்கைத் தீவு, சீனாவுடன் எவ்வாறான தொடர்புகளை பேணிக்கொள்ளப் போகின்றது என்பதில்தான், அனைத்துமே தங்கியிருக்கின்றது. புவிசார் அரசியல் போட்டியில் இரகசிய சமூகங்களின் தலையீடுகள் தவிர்க்க முடியாதது - ஆனால், அது பற்றி விவாதிக்க முற்படும் போது, நமக்குள் கேட்டுக் கொள்ள வேண்டிய கேள்வி - அதற்கான தகுதியிநிலை நமக்கிருக்கின்றதா?

## இமயமலை....

எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

இந்த பின்னணியில் தமிழ் சமூக அமைப்புகள், மாணவர்கள், பாதிக்கப்பட்ட தரப்பினர் மற்றும் மதத்தலைவர்கள் கூட்டாக நிராகரிப்பதாக அறிவித்துள்ளனர்.

அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

சிறந்த இலங்கைக்கான சங்கா மற்றும் உலகத் தமிழர் பேரவை ஆகியவற்றின் சமீபத்திய 'இமயமலை பிரகடனம்' பற்றி வடக்கு கிழக்கை தளமாகக் கொண்ட, கீழ் கையொப்பமிட்ட அமைப்புகளாகிய நாங்கள் கூட்டாக இந்த அறிக்கையை வெளியிடுகின்றோம்.

இமயமலைப் பிரகடனத்தை ('பிரகடனம்') நாம் கவனமாக வாசித்தோம். ஆனால் இந்த பிரகடனம் தமிழ் மக்களின் கருத்துக்களையோ, இலங்கைத்தீவு சுதந்திரம் அடைந்த நாளிலிருந்து தமிழ் மக்கள் சிங்கள பேரினவாதத்தினால் அனுபவித்த துன்பங்கள், கொடுமைகளையோ கருத்தில் கொள்ளாமை தொடர்பில் நாம் எமது கடும் அதிருப்தியை வெளியிடுகின்றோம்.

வெளிப்படையாகவே பௌத்த மத குருமார் தமிழ் மக்களின் துன்பங்கள் தொடர்பான தெளிவு அற்றவர்களாகவே உள்ளார்கள். ஏனெனில் அவர்கள் தமிழ் பகுதிகளுக்கு வெளியே சிங்களவர்களிடையே வாழ்கிறார்கள். மேலும் நாம் அனுபவித்த, அனுபவித்துக் கொண்டிருக்கும் அடக்குமுறைகள் தொடர்பாக அவர்கள் எவ்வித கரிசனைகளையும் கொண்டிருக்கவில்லை.

பதினான்கு வருடங்களுக்கு முன்னர் யுத்தம் முடிவடைந்த பின்னர், 2021ஆம் ஆண்டு, பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சியின் ஊடாக தமிழ் மக்களின் அபிலாஷைகளை வெளிப்படுத்தியுள்ளோம். சிறிலங்கா இராணுவத்தின் மிரட்டல்கள், அச்சுறுத்தல்கள் மற்றும் கைதுகளுக்கு மத்தியிலும் ஏறக்குறைய சுமார் ஐந்து இலட்சம் தமிழர்கள் இணைந்து பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை ஐந்து நாள் மக்கள் பேரெழுச்சி மூலம் தமிழ் இனத்தின் நிலைப்பாட்டினை வெளிப்படுத்தி இருந்தனர். தமிழ்ப் பல்கலைக்கழக மாணவர்களும், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் போன்ற பாதிக்கப்பட்ட அமைப்பினரும் பல போராட்டங்களையும் பேரணிகளையும் நடத்தி தமிழர்களின் நிலைப்பாட்டினை தொடர்ந்தும் வெளிப்படுத்தி வருகின்றனர். இவை எதுவும் இந்த 'பிரகடனத்தில்' கவனத்தில் கொள்ளப்படவில்லை. கடந்த பதினான்கு ஆண்டுகளாக தமிழர்களால் வெளிப்படுத்தப்பட்ட தமிழ் மக்களின் நிலைப்பாட்டினை அனைவரின் கவனத்திற்கும் மீண்டும் கொண்டுவர விரும்புகிறோம்.

1. போருக்கு முந்தைய 1983ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்த அளவிற்கு தமிழர் பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தை குறைத்தல். போர் முடிவடைந்து பதினான்கு ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. ஆனால் மே 2009 இல் போரின் உச்சக்கட்டத்தில் இருந்ததைப் போலவே மோசமான அளவில் இராணுவ கட்டமைப்பு தமிழர் தாயகத்தில் பராமரிக்கப்பட்டு வருகிறது. தமிழ் இனப்படுகொலை மற்றும் தமிழ்ப் பெண்களைக் கற்பழித்தல் போன்ற பல கொடூரமான குற்றங்களை மேற்கொண்ட சிறிலங்கா ஆயுதப்படை தமிழர் நிலங்களில் தொடர்ந்து நிலைகொண்டிருப்பது, தமிழ் மக்களை தொடர்ந்தும் அச்ச சூழ்நிலையில் வைத்திருப்பதுடன் பல்வேறு சமூக பிரச்சனைகளையும் ஏற்படுத்துகின்றது.

2. ஐ.நா அதிகாரிகளின் முன் மொழிவுகளுக்கு அமைவாக சிறிலங்காவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்தவும். 2009 இல் நடந்த போரின் இறுதி ஆறு மாதங்களில் ஏறக்குறைய எழுபதாயிரம் தமிழர்கள் கொல்லப்பட்டமை ஐ.நா. உள்ளக ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் கைக்குழந்தைகள், சிறுவர்கள் உட்பட ஆயிரக்கணக்கான தமிழர்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். போர் முடிவடைந்து பதினான்கு ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும் இவ்வின வழிப்பினையும் போர்குற்றங்களையும் நடாத்திய ஒரு பாதுகாப்புப் படை அதிகாரிகளோ அல்லது அரசியல் தலைவர்களோ நீதியை எதிர்கொள்ளவில்லை. மனித உரிமைகளுக்கான ஐ.நா ஆணையாளர் உட்பட பல ஐ.நா அதிகாரிகள் பரிந்துரைத்தது போல சிறிலங்காவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு பரிந்துரைக்குமாறு நாங்கள் கேட்டுக் கொள்கிறோம்.

3. சிறிலங்கா இராணுவம் உட்பட்ட அரசு நிறுவனங்களின் உதவியுடன் பல வரலாற்று சிறப்பு மிக்க சைவ ஆலயங்கள் அழிக்கப்பட்டு, சிங்களவர்கள் பூர்வீகமாக வசிக்காத தமிழர் தாயகமான வடக்கு கிழக்கு எங்கும் பௌத்த கோயில்கள் கட்டப்படுவது உடனடியாக நிறுத்தப்படவேண்டும்.

4. தமிழர் தாயகத்தின் இனப்பரம்பலை மாற்றி அமைக்கும் முனைப்புடன் சிங்கள பௌத்த அரச துணையுடன் தமிழர் தாயகம் எங்கும் இடம்பெறும் அத்துமீறிய சிங்கள குடியேற்றங்களும் காணி அபகரிப்புகளும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

5. மீண்டும் ஒரு இனவழிப்பும் இரத்தக்களரியும் இந்த தீவில் ஏற்படுவதைத் தடுக்க, இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வினை ஏற்படுத்தும் விதமாக தமிழ் மக்களிடையே சர்வதேசத்தினால் பொது வாக்கெடுப்பு நடாத்தப்பட வேண்டும்: இலங்கை சுதந்திரம் பெற்றதில் இருந்து நீடித்து வரும் இனப்பிரச்சினைக்கு காரணம் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு வழங்கப்படாமையே ஆகும். இதன் விளைவாக 1958, 1977, 1983 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் தமிழர்கள் பாரியளவில் படுகொலை செய்யப்பட்டனர். தமிழ் தலைவர்களுக்கும் சிங்கள பெரும்பான்மை அரசுகளுக்கும் இடையிலான பல உடன்படிக்கைகள் தொடர்ந்து வந்த அரசுகளால் கிழித்தெறியப்பட்டன. இந்தியா மற்றும் நோர்வே மேற் கொண்ட சர்வதேச மத்தியஸ்தங்களும் கூட தோல்வியடைந்தன. உலகெங்கிலும் உள்ள பல நாடுகளில், குறிப்பாக பனிப்போர் முடிவடைந்த கடந்த முப்பது ஆண்டுகளாக, ஜனநாயக ரீதியில் அரசியல் தீர்வுகளை காண பொதுவாக் கெடுப்பு முறையே நடைமுறையில் உள்ளது. இந்த சர்வதேச நடைமுறை யையே தமிழர்களாகிய நாமும் தொடர்ந்து கோரி வருகின்றோம்.-என்றுள்ளது.

இந்த அறிக்கையில்-

தவத்திரு அகத்தியர் அடிகளார் (தென்கயிலை ஆதீனம் - திருகோணமலை), வண. பிதா. ஜோசப் மேரி (மட்டக்களப்பு), தவத்திரு வேலன் சுவாமிகள் (சிவகுரு ஆதீனம் - யாழ்ப்பாணம், ஒருங்கிணைப்பாளர் - பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கம்),

வண. பிதா. ஜெயந்தன் பச்சேக் (அமலமரி தியாகிகள் சபை - வட மாகாணம்), வண. பிதா. கந்தையா ஜெகதாஸ் (ஒருங்கிணைப்பாளர் - பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கம்), திருமதி யோ. கனகரஞ்சினி (தலைவர் - வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கம் வடக்கு கிழக்கு மாகாணங்கள்), அ.விஜயகுமார் (தலைவர் - யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்), விக்னேஸ்வரன் கஜரூபன் (பிரதிநிதி - கிழக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் - கலை, கலாசார பீடம்), சி. தங்கராஜா (தலைவர் - பல்கலைக்கழக ஊழியர் சங்கம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), திருமதி. விமலேஸ்வரி ஸ்ரீகாந்தரூபன் (தலைவர் - பெண்கள் ஒருங்கிணைப்பு கண்காணிப்பு சங்கம் - வடக்கு கிழக்கு மாகாணங்கள்), திருமதி சரோஜா சிவச்சந்திரன் (தலைவர் - பெண்கள் அபிவிருத்தி நிலையம்), திருமதி மிதிலைச்செல்வி ஸ்ரீபத்மநாதன் (தலைவர் - உழைக்கும் மகளீர் அமைப்பு) ஆகியோர் கையெழுத்திட்டுள்ளனர். (அ)

## வடக்கு....

பகுதிகளுக்கும் தொடர்ச்சியாக மிகவும் கனமழை கிடைத்து வருகிறது. இந்த மழையை பொறுத்தவரை எதிர்வரும் 19ஆம் திகதி வரை நீடிக்கக்கூடிய வாய்ப்பு இருக்கின்றமையை அவதானிக்க கூடியதாக உள்ளது.

ஏற்கனவே வடக்கு மாகாணத்தின் தரை மேல் நீர் பரப்புக்கள் அவற்றினுடைய உவர் நீரை வெளியேற்றுகின்ற இந்த சூழ்நிலையில் தொடர்ந்து கிடைத்து வருகின்ற கனமழை காரணமாகவும் பல்வேறு பகுதிகளில் உள்ள தாழ் நிலங்களில் வெள்ள அனர்த்தத்துக்கான வாய்ப்புகள் இருப்பதாக அறியப்படுகிறது.

எனவே தொடர்ச்சியாக மழை கிடைக்கும் என்பதனால் தாழ்வான பகுதிகளில் உள்ள மக்கள் அவதானமாக இருப்பது அவசியமானதாகும்.

மீண்டும் ஒரு காற்று சுழற்சி இலங்கையினுடைய தென்கிழக்கு வங்காள விரிகுடாவில் தோன்றுவதற்கான வாய்ப்புகள் காணப்படுவதால் தொடர்ச்சியாகவும் மழை நீடிப்பதற்கான வாய்ப்புகள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணப்படுகின்றது.

தொடர்ச்சியான மழை கிடைக்கும் என்பதனால் இந்த தாழ்நில பகுதிகளில் இருக்கும் மக்கள் மழைவீழ்ச்சி தொடர்பான அளவு தொடர்பில் அவதானமாக இருப்பது அவசியமானதாகும்-என்றார்.

## தொடர்....

குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தநிலையில், கிழக்கு மாகாணத்தில் 892 குடும்பங்களைச்சேர்ந்த 2 ஆயிரத்து 780 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக பெய்து வரும் மழை காரணமாக மன்னார் மாவட்டத்தின் தாழ்நில பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கும் சாத்தியம் நிலவுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## ஊனமுற்றோர்....

இந்த 18 வீத புதிய வரி அறவிடப்பட உள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் வைத்தியர் சமில் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

இதன்படி, மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்தும் அம்புலன்ஸ்கள், மருந்து உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் மூலப் பொருட்கள், மருத்துவ உபகரணங்கள், உயர் தொழில்நுட்ப மருத்துவ உபகரணங்கள், செவிப்புலன் கருவிகள் என அனைத்து உபகரணங்களுக்கும் ஜனவரி முதல் இந்த புதிய வரி விதிக்கப்படும்.

சுகாதாரத் துறைக்கு தேவையற்ற அழுத்தங்களை ஏற்படுத்துவதன் மூலம் அது மிகவும் பாரிய பிரச்னையை உருவாக்கும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்வாறான நடவடிக்கைகளினால் நாட்டு மக்களை பாதுகாக்க கடமைப்பட்டுள்ள அரசாங்கமே மக்களின் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் என சங்கம் மேலும் வலியுறுத்தியுள்ளது. (அ)

## கிளிநொச்சியில்....

கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில், 247 குடும்பங்களை சேர்ந்த 834 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 04 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

கண்டாவளை பிரதேச செயலாள் பிரிவில், 839 குடும்பங்களை சேர்ந்த 2606 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 16 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக அப்புள்ளி விபரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வெள்ளம் வடிந்து வரும் நிலையில், தொடர்ந்தும் புள்ளி விபரங்கள் திரட்டப்பட்டு வருகின்றது. இதேவேளை, பாதிக்கப்பட்டவர்கள் உறவினர் வீடுகளில் தங்கியுள்ளதாக மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

தொடர்ந்தும் மக்கான எதிர்வு கூறல் உள்ளமையால், மக்கள் அவதானமாக செயற்படுமாறு அறிவுறுத்தல் வங்கப்பட்டுள்ளது. (அ)

## சீன....

முதல் மே மாதம் இறுதி வரை தென்னிந்திய கடற்பரப்பில் ஆய்வு நடவடிக்கைகளை முன்னெடுக்க எதிர்ப்பார்த்துள்ளது.

இலங்கை மற்றும் மாலைதீவுகளின் கடற்பரப்புகளும் அதில் அடங்குகின்றன.

இலங்கையிடமும் மாலைதீவுகளிடமும் தமது கப்பலின் ஆய்வு நடவடிக்கைகளுக்கு அனுமதி வழங்குமாறு சீனா கோரிக்கை விடுத்துள்ளதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

எனினும், இதற்கு இந்தியா தனது கடுமையான எதிர்ப்பை வெளியிட்டுள்ளதாக ஹிந்துஸ்தான் ரைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த ஆய்வுக் கப்பலுக்கு அனுமதி வழங்க வேண்டாம் என இந்தியா இலங்கையிடமும் மாலைதீவுகளிடமும் கோரிக்கை விடுத்துள்ளது.

## பாதுகாப்பு....

தொடர்பில் ஜனாதிபதியின் முடிவு அறியப்படும்வரை, அரசியல் யாப்பில் இருக்கின்ற, ஆட்சி மொழி சட்டத்தை மீறுகின்ற இந்தப் பொலிஸ் பதிவு படிவங்களை நிராகரிக்கும்படி மக்களைக் கோருகின்றேன்." - என்று குறிப்பிட்டுள்ளார். (அ)

## காய்ச்சல்...

காய்ச்சல் அதிகரித்துள்ள நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் நேற்று இடம்பெற்ற விசேட ஊடக சந்திப்பில் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

காய்ச்சல் வந்தால் பயப்படாமல் கவனமாக இருந்தால் மரணம் வராது பாதுகாக்கலாம். காய்ச்சல் வந்தால் ஓய்வெடுக்க வேண்டும். நாளாந்த உடற்பயிற்சிகளை தவிர்க்க வேண்டும்.

இந்த காலப்பகுதியில் டெங்கு நோய்க்கு மேலதிகமாக வேறு நோய்களும் பரவுகிறது. உதாரணமாக சுவாச தொற்று நோய், உண்ணிக் காய்ச்சல் என்பன பரவுகிறது. காய்ச்சல் தொடர்ந்து இருந்தால் மருத்துவ ஆலோசனையை பெற்று என்ன வகையான தொற்று என்பதை கண்டறிந்து சிகிச்சையை பெறலாம்.

## ராஜபக்ஷ....

இலங்கையில் ராஜபக்ஷ குடும்பத்தினர் திருடிய பணத்தை திரும்பப் பெற்றால் பொதுமக்களிடம் வரி வசூலிக்க வேண்டிய அவசியம் இருக்காது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மற்ற நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் குறைந்த வரி வீதத்தை சுட்டிக்காட்டிய அவர், வரிகளை அதிகரிப்பதற்கு பதிலாக இழந்த நிதியை மீட்பதில் கவனம் செலுத்துமாறு பரிந்துரைத்தார்.

கொழும்பில் ஊடகவியலாளர்களிடம் கருத்துரைத்த அவர், ஜனவரி மாதம் முதல் வரி அதிகரிப்பினால் பொருட்களின் விலை அதிகரிக்கப்பட உள்ளதாகவும், நடுத்தர வர்க்கத்தினர், ஏழைகள் மீது வரி விதிக்கப்படக்கூடாது என்றும் அவர் கூறினார்.

## பஸிலின்....

இதனைக் கூறினார்.

"பஸில் ராஜபக்ஷ ஒரு நிறுவனராக கட்சி அமைப்பு பணிகளை செய்கிறார். அதனால் தேசிய அமைப்பாளர் பதவியை வெற்றிடமாக விடுவது என அவரும் கட்சியினரும் உடன்பாட்டுக்கு வந்துள்ளனர்.

எதிர்காலத்தில் நாம் எடுக்கும் அரசியல் தீர்மானங்களின் அடிப்படையில் அதற்குத் தேவையான ஒருவரை நியமிப்போம்" என அவர் மேலும் கூறியுள்ளார்.

இதேவேளை, பாராளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் மீண்டும் செயலாளர் நாயகமாக நியமிக்கப்பட்டதுடன், புதிய பொருளாளராக பாராளுமன்ற உறுப்பினர் பவித்ரா வன்னியாராச்சி நியமிக்கப்பட்டார். (அ)

ஈழநாடு
Eelanadu

# மட்டக்களப்பில் வீதியை ஊடறுத்து பாயும் வெள்ளம்

## குளங்களின் வான்கதவுகள் திறப்பு



மட்டக்களப்பு, டிசெ. 17

வடகீழ் பருவப் பெயர்ச்சி மழை வீழ்ச்சி தற்போது அதிகரித்துள்ள நிலையில், மட்டக்களப்பு மாவட்டத்தில் தாழ் நிலங்களில் வெள்ள நீர் நிரம்பியுள்ளது. அதிகளவு வெள்ள நிலைமையால் பல ஏக்கர் வயல்நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்தநிலையில், மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவாங்கரைப் பிரதேசத்தில் அமைந்துள்ள வெல்லாவெளி மண்டூர் பிரதான வீதியில் இரண்டு இடங்களை ஊடறுத்து வெள்ளநீர் பாய்ந்து வருவதனால் அவ்வீதியைப் பயன்படுத்தும் பயணிகளும் பொதுமக்களும், மிகுந்த சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

ள்பிரதான குளங்களில் நீர்மட்டமும் அதிகரித்துள்ளதாக அக்குளங்களுக்குப் பொறுப்பான பொறியியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அந்தவகையில் உன்னிச்சைக்குளத்தின் நீர்மட்டம் 30அடி 9அங்குலமாகவும், உறுகாமம் குளத்தின் நீர்மடடம் 16அடி 6 அங்குலமாகவும் உயர்ந்துள்ளன.

வாகனேரி குளத்தின் நிர்மட்டம் 16அடி 11அங்குலமும், கட்டுமுறிவு குளத்தின் நீர்மட்டம் 6அடியும், வெலிக்காக்கண்டிய குளத்தின் நீர்மட்டம் 16அடி 5அங்குலத்திலும் நீர்மட்டம் உயர்வடைந்து மேலதிக நீர் வான் கதவு ஊடாக வெளியேற்றப்படுகின்றது.

வடமுனைக்குளத்தின் நீர்மட்டம் 13அடி 6அங்குலம், புணானை அணைக்கட்டு 4அடி 7அங்குலம், தும்பங்கேணிக்குளத்தின் நீர்மட்டம் 16அடி 2அங்குலம், நவகிரிக் குளத்தின் நீர்மட்டம் 30அடி 2அங்குலம் அளவில் உயர்ந்துள்ளன.

அவற்றின் 2 வான்கதவுகள் 2.5 அடி உயரத்தில் திறந்து விடப்பட்டுள்ளதாகவும், அக்குளங்களுக்குப் பொறுப்பான பொறியியலாளர்கள் தெரிவித்தனர். (அ)

# 35 ரூபாய்க்கு முட்டை!

கொழும்பு, டிசெ. 17

இறக்குமதி செய்யப்படும் முட்டை வாடிக்கையாளருக்கு 35 ரூபாய் விலையில் வழங்கப்படும் என்று வர்த்தக அமைச்சர் நளீன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அத்துடன், 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் 30 ஆம் திகதி வரை முட்டைகளை இறக்குமதி செய்ய இலங்கை அரச வர்த்தக கூட்டுத்தாபனத்துக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

சந்தையில் முட்டையின் விலை அசாதாரணமாக அதிகரித்து வருவதைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

உள்நாட்டு முட்டை உற்பத்தியாளர்கள் தொடர்ந்தும் முட்டை விலையை உயர்த்தினால், அரசாங்கத்தின் பதிலில் மாற்றம் ஏற்படாது என்றும் அமைச்சர் சுட்டிக் காட்டினார். (அ)

# முல்லைத்தீவில் கொட்டும் மழை! வீடுகள் பல வெள்ளத்தில் மூழ்கின!!

## 695 குடும்பங்களை சேர்ந்த 2,117 பேர் பாதிப்பு



முல்லைத்தீவு, டிசெ. 17

**முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்து வருகின்ற கனமழை காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள அனைத்து குளங்களும் முற்று முழுதாக நிறைந்து வான் கதவுகளிலிருந்து நீர் பாய்கின்ற நிலைமை காணப்படுகிறது.**

**எனவே தற்போது பெய்கின்ற சிறிய மழைக்கு கூட மிக பெரிய அழிவுகளை எதிர்நோக்குகின்ற நிலைமைக்கு முல்லைத்தீவு மாவட்ட மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.**

இவ்வாறான பின்னணியில் சற்று முன்னர் திடீரென வந்த வெள்ளம் காரணமாக ஒட்டுசுட்டான் பிரதேசத்தின் புளியங்குளம் பண்டாரவன்னி உள்ளிட்ட கிராம மக்களின் வீடுகள் பல வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இதனால் பலர் வெள்ளத்தில் சிக்கினர். இவர்களை மீட்கும் பணிகள் தீவிரமாக இடம்பெற்றன.

இதேபோன்று குளங்களுக்கான நீர் வரத்து மிக வேகமாக காணப்படுவதால் பல்வேறு குளங்கள் உடைப்பெடுக்கும் அபாயத்தையும் எதிர்கொண்டுள்ளதோடு வான் கதவுகள் வழியே பாய்கின்ற நீர் மக்கள் குடியிருப்புகளுக்குள் செல்வதற்கான வாய்ப்புகள் உள்ளமையினால் மக்கள் மிக அவதானமாக செயல்படுமாறு முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, நேறறு காலை 9 மணி வரையான தகவல் அடிப்படையில், முல்லைத்தீவு மாவட்டத்தில் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவில் அம்பாள்புரம், கரும்புள்ளியான், ஒட்டறுத்த குளம், நட்டாங்கண்டல், பாண்டியன்குளம், செல்வபுரம், பாலிநகர், சிராட்டிகுளம், சிவபுரம், மூன்றுமுறிப்பு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளை சேர்ந்த 261 குடும்பங்களை சேர்ந்த 870 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேபோன்று ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் மாங்குளம், பனிக்கன்குளம், பண்டாரவன்னி, இந்துபுரம், தட்டையர்மலை, புளியங்குளம், தச்சடம்பன் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளை சேர்ந்த 127 குடும்பங்களை சேர்ந்த 423 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேபோன்று கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கள்ளப்பாடு, சிலாவத்தை, செல்வபுரம், வற்றாப்பளை, தண்ணிமுறிப்பு, முள்ளியவளை தெற்கு, கள்ளப்பாடு வடக்கு, கள்ளப்பாடு தெற்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளை சேர்ந்த 44 குடும்பங்களை சேர்ந்த 136 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேபோன்று துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் அணிஞ்சியன்குளம், உயிலங்குளம், தென்னியங்குளம், கோட்டைகட்டிய குளம், ஆலங்குளம், தேராங்கண்டல், கல்விளான், மல்லாவி, யோகபுரம் கிழக்கு, புகழேந்தி நகர், பாரதிநகர், யோகபுரம் மேற்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளை சேர்ந்த 86 குடும்பங்களை சேர்ந்த 267 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேபோன்று புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர்கள் பிரிவில் புதுக்குடியிருப்பு மேற்கு மற்றும் தேவிபுரம் கிராம அலுவலர் பிரிவுகளை சேர்ந்த 177 குடும்பங்களை சேர்ந்த 415 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 695 குடும்பங்களை சேர்ந்த 2117 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ பிரிவின் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட மாங்குளம் கிராம அலுவலர் பிரிவில் 4 குடும்பங்களை சேர்ந்த 17 பேரும், புளியங்குளம் கிராம அலுவலர் பிரிவில் 5 குடும்பங்களை சேர்ந்த 21 பேரும், பண்டாரவன்னி கிராம அலுவலர் பிரிவில் 19 குடும்பங்களை சேர்ந்த 55 பேருமாக 28 குடும்பங்களை சேர்ந்த 93 பேர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(அ)

# முத்துஐயன்கட்டுக்குளத்தின் நான்கு வான் கதவுகள் திறப்பு



முல்லைத்தீவு, டிசெ. 17

முல்லைத்தீவு மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசன குளங்களில் ஒன்றாக காணப்படுகின்ற முத்துஐயன்கட்டு குள்ளத்திற்கான நீர்வரத்து அதிகரித்திருக்கின்ற நிலை யில், குளத்தின் நான்கு வான் கதவுகள் நேற்று சனிக்கிழமை காலை திறந்து வைக்கப்பட்டன.

24 அடி கொள்ளளவு கொண்ட முத்துஐயன்கட்டுக் குளத்தில் 23 அடி 3 அங்குல நீர்மட்டம் காணப்படு கிறது. நீர் வரத்து அதிகரித்துள்ள நிலையில் இரண்டு வான் கதவுகள் ஆறு அங்குலத்துக்கும் இரண்டு வான் கதவுகள் மூன்று அங்குலத்துக்கும் திறந்து விடப்பட் டுள்ளன.

நேற்றுக் காலை முத்துஐயன்கட்டு நீர்ப்பாசன பொறியியலாளர் மஞ்சுளா ஜொய்ஸ் குமார் அழைப்பில் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அருளம் பலம் உமா மகேஸ்வரன், ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் திருமதி பரமோதயன் ஜெயராணி, மாகாண நீர்ப்பாசன பணிப்பாளர் பொறியியலாளர் நவரட்ணம் சுதாகரன், ஒட்டுசுட்டான் பிரதேச உதவிப் பிரதேச செயலாளர் இ.றமேஸ், முல்லைத்தீவு மாவட்ட பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர் பொறியியலாளர் சிவபாதசுந்தரம் விகிர்தன் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டு வான் கதவுகளை திறந்து வைத்தனர்.

இதேவேளை, முல்லைத்தீவு மாவட்ட பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர் பொறியியலாளர் சிவபாத சுந்தரம் விகிர்தன் கருத்து தெரிவிக்கையில்-

முல்லைத்தீவு மாவட்டத்தில் 20 பாரிய மற்றும் நடுத் தர குளங்கள் காணப்படுவதாகவும் அனைத்து குளங்க ளும் அதன் உச்ச கொள்ளளவை அடைந்துள்ளதாகவும் எனவே தாழ் நிலப்பகுதிகளில் உள்ள மக்கள் அவதான மாக இருக்குமாறும் தெரிவித்தார்.

(அ)

# உடைப்பெடுக்கும் நிலையில் நெடுங்கேணி கொத்தர்குளம்!

## தண்டுவான், பழம்பாசி மக்களுக்கு எச்சரிக்கை

வவுனியா, டிசெ. 17

வவுனியா வடக்கு நெடுங்கேணி பிரதேசத்தில் உள்ள கொத்தர் குளம் உடைப்பெடுக்கும் அபாய நிலை ஏற்பட்டுள்ளதாக முல்லைத்தீவு அனர்த்த முகாமைத்துவப் பிரிவு அறிவித்துள்ளது.

தொடர் மழையால் ஏற்பட்ட வெள்ளப்பாதிப்புக்களால் குறித்த குளம் உடைப்பெடுக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

அவ்வாறு குளம் உடைப்பெடுத்தால், முல்லைத்தீவின் தண்டுவான் பிரதேசத்தில் உள்ள அலைகல்லுப்போட்டகுளம், பழம்பாசியில் உள்ள தவசிக்குளம் என்பவற்றுக்கு கூடுதல் நீர் வரத்து அதிகரிக்கும் என்பதால் அந்தப் பிரதேசங்களில் தாழ் நிலங்களில் வாழும் மக்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 17.12.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# வியாழனின் நிலவில் கார்பனின் கடல்!

சிதம்பரம் இரவிச்சந்திரன்

வியாழனின் துணைக்கோள்களில் ஒன்றான ஈரோப்பாவில் (Europa) கார்பனின் கண்டுபிடிப்பு விஞ்ஞானிகளுக்கு வியப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்தக் கண்டுபிடிப்பு ஈரோப்பாவில் உள்ள கடல், சூரியக் குடும்பத்தில் நாளை மனிதன் அந்நியக் கோளில் வாழ மிகப் பொருத்தமான இடம் என்று வலியுறுத்துகிறது.

சூரியக்குடும்பத்தில் மிகப்பெரிய கோள் என்று கருதப்படும் வியாழனின் பல நிலவுகளில் ஒன்றான ஈரோப்பாவில் தரைப்பரப்பிற்கு கீழ் பரந்துவிரிந்து அமைந்துள்ள இந்த கடல் கார்பனைக் கொண்டுள்ளது. கார்பன் என்ற தனிமம் உயிர் வாழ மிக அவசியமானவற்றில் ஒன்று. இது ஜேம்ஸ் வெஃப் (James Webb) விண்வெளி தொலைநோக்கியால் கண்டுபிடிக்கப்பட்டது.



குளிர்ச்சியான இருண்ட இந்த கடலில் உயிரினங்கள் வாழ்கின்றனவா என்பதற்கு இக்கண்டுபிடிப்பு பதில் கூறவில்லை என்றாலும், கடலின் 10 மைல் பரப்பில் அமைந்த அடர்ந்த பனி மூடிய தரைப்பரப்பிற்குக் கீழ் அமைந்துள்ள உப்புக்கடலில் இருந்தே இந்த நிலவின் தரைப்பரப்பில் கார்பன்டை ஆக்சைடு பனிக்கட்டிகள் உருவாகியுள்ளன என்று கண்டறியப்பட்டுள்ளது.

**உயிரினங்கள் வாழும் வாய்ப்பு**

பல காலங்களாக விஞ்ஞானிகள் இந்த நிலவில் உயிர்கள் வாழ்வதற்கான வாய்ப்புகள் பற்றி ஆராய்ந்து வரும் நிலையில் இக்கண்டுபிடிப்பு மிக முக்கியமானது என்று அமெரிக்கா டெக்சாஸ் தென் மேற்கு ஆய்வுக் கழகத்தின் புவி வேதியியலாளர் மற்றும் ஆய்வுக்கட்டுரையின் இணை ஆசிரியர் டாக்டர் கிறிஸ்ட்டஃபர் க்ளைன் (Dr Christopher Glein) கூறுகிறார்.

இந்த கடலில் உயிரினங்கள் இப்போது வாழ்கின்றனவா என்பது பற்றி இன்னும் உறுதியாகத் தெரியவில்லை என்றாலும் மற்ற கோள்களில் உயிரினங்கள் வாழ்வது பற்றி விஞ்ஞானிகள் விண்வெளி உயிரியல் ஆய்வுகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ள நிலையில் ஈரோப்பாவில் கடலில் கார்பனின் கண்டுபிடிப்பு ஆய்வாளர்களுக்கு மிகுந்த நம்பிக்கை அளித்துள்ளது. இரண்டாயிரம் மைல் அகலம் உள்ள ஈரோப்பா புவியின் துணை நிலவான சந்திரனை விட சற்று சிறியது.

கோட்பாடுரீதியாக இங்கு உயிர்கள் வாழ்வதாகக் கருதினாலும் அவை பல தகவமைப்பு சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். தரை வெப்பநிலை மிக அரிதாகவே -140 டிகிரி செல்சயஸை எட்டும். வியாழனின் இருந்து வரும் கதிர்வீச்சு மற்றொரு பிரச்சனை. ஆனால் ஈரோப்பாவின் கடல் 40-100 மைல் அல்லது 64-160 கிலோமீட்டர் ஆழமானது. இதன் 10-16 மைல் ஆழத்தில் அமைந்திருக்கும் பனிப்பரப்பே உயிர்கள் பற்றிய ஆய்வாளர்களின் தேடலுக்கு முக்கிய காரணம்.

**கடலில் கார்பன் எப்படி வந்தது?**

ஆழம் நிறைந்த இந்த கடலில் உள்ள கார்பன் உள்ளிட்ட உயிர் வாழ இன்றியமையாத தனிமங்களின் செறிவு போன்ற வேதியல் கூறுகளைப் பொறுத்தே இங்கு உயிரினங்கள் வாழ முடியும். இந்த நிலவின் மேற்பரப்பில் திட நிலையில் கார்பன் இருப்பது முந்தைய ஆய்வுகள் மூலம் தெரிய வந்துள்ளது என்றாலும், இது இன்னும் உறுதி செய்யப்படவில்லை. கார்பன் இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள கடலில் இருந்து உமிழப்பட்டதா அல்லது இந்நிலவின் மீது மோதிய எரிகற்களால் ஏற்பட்ட தாக்கத்தினால் உண்டானதா என்று தெளிவாகத் தெரியவில்லை.

ஈரோப்பாவின் தரைப்பரப்பில் கார்பன் டை ஆக்சைடின் விநியோகத்தை ஜேம்ஸ் வெஃப் தொலைநோக்கி அகச்சிவப்பு கருவிகளைப் பயன்படுத்தி ஆராய்ந்தபோது டாரா ரெஜியோ (Tara Regio) என்ற பகுதியில் கார்பன் டை ஆக்சைடு அதிக அளவில் இருப்பது தெரியவந்தது. சுமார் 695 சதுர மைல் அல்லது 1,800 சதுர கிலோமீட்டர் பரப்புடைய இப்பகுதி அதிக விண்வெளிச் செயல்பாடுகள் நடக்கும் பகுதி என்பதைக் குறிக்கும் வகையில் கலவரப்பகுதி “chaos terrain” என்று அழைக்கப்படுகிறது.



**பனி படர்ந்த தரைப்பரப்பு**

இப்பகுதி பனிப்பாறைப் பிளவுகள் மற்றும் பனிப்பாறை முனைகள் நிறைந்த பகுதி. பனிப்பாளங்களாக உருவான இவை அழுத்தப்பட்டு நிலவியல் செயல்முறைகள் (Geological processes) மூலம் தரையின் மேற்பகுதிக்கு தள்ளப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது. “பனிப்பாறைகள் அடர்ந்த ஈரோப்பாவின் உப்புக்கடலில் இருந்தே இந்த கார்பன் டை ஆக்சைடு உருவாகியுள்ளது. எரிகற்கள் மோதலால் அல்லது அயணிகள் வெடித்துச் சிதறியதால் இது உருவாகவில்லை. உயிரினங்கள் கார்பன் டை ஆக்சைடை சார்ந்தே வாழ்கின்றன என்பதால் இந்த கண்டுபிடிப்பு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது” என்று நாசாவின் ஜெட் உந்துவிசை ஆய்வுக்கூடத்தின் விண்வெளி உயிரியலாளர் மற்றும் ஆய்வுக்கட்டுரையின் மற்றொரு இணை ஆசிரியர் கெவின் ஹேண்ட் (Kevin Hand) கூறுகிறார். உயிர் வாழ இன்றியமையாத பல வேதி மாற்றங்களில் கார்பன் டை ஆக்சைடு முக்கிய பங்கு வகிக்கிறது என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

**ஆறு முக்கிய தனிமங்கள்**

ஆறு பெரிய தனிமங்கள் (big six elements) என்று விண்வெளி உயிரியலாளர்களால் அழைக்கப்படும் கார்பன், ஹைடிரஜன், ஆக்சிஜன், நைட்ரஜன், பாஸ்பரஸ் மற்றும் சல்பர் ஆகியவை பூமியில் உயிர்கள் தோன்றக் காரணமாக இருந்தன. இதில் சல்பர் கடலில் இருந்து வந்ததா அல்லது இயோ என்ற வியாழ னின் மற்றொரு நிலவில் இருந்து வந்ததா என்பது இன்னும் உறுதியாகத் தெரியவில்லை என்றாலும் கார்பன், ஹைடி ரஜன், ஆக்சிஜன் மற்றும் சல்பர் ஆகிய உயிர் வாழ அவசியமான நான்கு முக்கிய தனிமங்களும் இங்கு கண்டுபிடிக்கப்பட் டுள்ளன.

ஜேம்ஸ் வெஃப் மற்றும் அடுத்த ஆண்டு ஏவத் திட்டமிடப்பட்டுள்ள ஈரோப்பா க்ளிப்பர் ஆய்வுக்கலன் (Europa Clipper mission) நடத்தும் ஆய்வுகளில் இருந்து நைட்ரஜன் போன்ற வேறு உயிர் வாழத் தேவையான மற்ற பொருட்கள் இங்கு உள்ளனவா என்பது பற்றிய கூடு தல் விவரங்கள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சயன்ஸ் என்ற ஆய்விதழில் வெளியிடப்பட்டுள்ள இந்த ஆய்வுக்கட்டுரையுடன் இது பற்றி வெளிவந்த இன்னொரு கூடுதல் ஆய்வு ஈரோப்பாவில் காணப்படும் கார்பனில் கார்பன்12 மற்றும் கார்பன்13 என்ற இரண்டு ஐசோடோப்புகள் கூடுதலாக உள்ளன என்று கூறுகிறது. இந்த பொருட்கள் உயிர்கள் வாழ்வதற்கான அடையாளம். ஆனால் இந்தப் பகுப்பாய்வு முழுமை அடையவில்லை.

**நாளைய மனிதனின் புது வீடு**

இக்கண்டுபிடிப்புகள் முக்கியமானவை. சுவாரசியமானவை. உயிர் வாழ திரவநிலை நீர், சரியான வேதிக்கூறுகள், ஆற்றலைப் பெற உகந்த மூலம், உயிர் பரிணாம வளர்ச்சியடைய போதுமான காலம் போன்றவை அவசியம். வருங்கால ஆய்வுகள் இவை அனைத்தும் ஈரோப்பாவில் இருப்பதை உறுதி செய்யும். அப்போது நாம் அனைவரும் அங்கு வாழ்வோம் என்று லண்டன் பல்கலைக்கழக மலார்டு கோளியல் ஆய்வுக்கூடத்தின் தலைவர் பேராசிரியர் ஆண்ட்ரூ கோட்ஸ் (Prof Andrew Coates) கூறுகிறார்.

வியாழனின் ஈரோப்பா நாளைய மனிதனின் புது வீடாக மாறும் காலம் வெகுதொலைவில் இல்லை என்று ஆய்வாளர்கள் நம்புகின்றனர். ●

